# உதயன்




www.onlineuthayan.com

60: பக்கங்கள் சுடர் 27 கதிர் 267 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி04 ஞாயிற்றுக்கிழமை (19/08/2012)UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 50.00


# 9 கிராம அலுவலர் பிரிவுகள் வலி.வடக்கில் பறிபோகும்

## நிரந்தரமாக ஆக்கிரமிக்க இராணுவம் திட்டம் முன்னதாக 12 பிரிவுகளை விடுவிக்கவும் முயற்சி

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 19


வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் 9 கிராம அலுவலர் பிரிவுகளை இராணுவத்தினர் நிரந்தரமாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் போகின்றனர் என்று நம் பகமாகத் தெரியவருகின்றது. இந்த 9 கிராம அலுவலர் பிரிவுகளிலும் தமிழ் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்படாது என்றும் தெரிகின்றது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக, கொழும்பில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. இராணுவத்தினரால் நிரந்தரமாக ஆக்கிரமிக்கப்படப் போகும் நிலப் பகுதியில் – பலாலியைச் சுற்றி – மேலும் பல நிரந்தரப் படை முகாம்கள் அமைக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

இதனால் காணிகளை இழக்கப்போகும் தமிழ் மக்களுக்கு இழப்பீட்டுடன் மாற்றுக் காணிகள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த 9 கிராம அலுவலர் பிரிவுகளையும் இராணுவம் நிரந்தரமாக ஆக்கிரமிப்பதற்கு முன்னதாக, தற்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள 12

பார்க்க பக்கம் 4




## சுற்றுலா வலயமாகிறது அவலம் விளைந்த மண்

### முள்ளிவாய்க்கால் உட்பட 22 கிலோ மீற்றர் கரையோரத்தில் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒகஸ்ட்19

21ஆம் நூற்றாண்டின் மனிதப் பேரவலம் இடம் பெற்றதாக வர்ணிக்கப்படும், முள்ளிவாய்க்கால் கரையோரத்தை உள்ளடக்கிய 22 கிலோ மீற்றர் கடற்கரைப் பிரதேசத்தை இயற்கை சுற்றுலா வலயமாகப் பிரகடனப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

நாயாறு தொடங்கி அளம்பில் வரையான 22 கிலோ மீற்றர் கரையோரப் பகுதியே சுற்றுலா வலயமாகப் போகிறது. இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இரண்டு தடவைகள் கூட்டம் நடத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்

பார்க்க பக்கம் 4

## அடுத்த மாதம் ஐ.நா. குழு கொழும்பு வரும்

கொழும்பு,ஒக.19

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அதிகாரிகள் குழு அடுத்த மாதம் 14ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.நா. குழுவினர் இலங்கைக்கு வருவதற்கான அனுமதியை இலங்கை அரசு வழங்கிய நிலையில், ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழு இலங்கை வருவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்தக் குழுவினர் அடுத்த மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டு

பார்க்க பக்கம் 4

## மீள்குடியமர்வுக்காக பதிவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக.19

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கிழக்கு மற்றும் மல்லிகைத் தீவு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் மீளக்குடியமராது உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் வசிப்பவர்களை பதிவு செய்யுமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு கிழக்கு மற்றும் மல்லிகைத் தீவு கிராம அலுவலர் பிரிவுகள் மக்களின் மீள் குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு கிராம சேவகர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களில் மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்த குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன.ஆனால் நண்பர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் உள்ள மக்கள் இனி மேல்தான் மீளக்குடியமர்த்தப்பட உள்ளனர்.

புதுக்குடியிருப்பு கிழக்கைச் சேர்ந்த மக்கள் எதிர் வரும் 22ஆம் திகதி கைவேலி கணேசா வித்தியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். மல்லிகைத் தீவு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் 23ஆம் திகதி கைவேலி கணேசாவித்தியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## பற்றி எரிந்தது மணற்காடு சவுக்கு மரங்கள் சாம்பர்

யாழ்ப்பாணம், ஒக. 19

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மணற்காட்டில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீயினால் ஒன்றரை சதுர கிலோ மீற்றர் பரப்பில் சவுக்கு மரங்கள் எரிந்து சாம்பராகியுள்ளன. யாழ். மாவட்ட செயலக இடர் முகாமைத்துவப் பிரிவினர் இதனை உறுதிப்படுத்தினர்.

மணற்காடு (ஜே/418) கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மணற்காட்டு மேற்குப் பிரதேசத்திலேயே தீ பரவியது. கடுமையாக தீ பரவியபோதும், இராணுவத்தினர் மற்றும் அந்தப் பகுதிப் பொதுமக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால் பெரும் அழிவு தடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை 10 மணியளவிலேயே சவுக்குக் காட்டில் தீ பற்றியதை பொது மக்கள் அவதானித்துள்ளனர்.

பார்க்க பக்கம் 4

### மலையகத்தைச் சேர்ந்தவர்களான

## தாய், தந்தை, மகளின் சடலங்கள் வெள்ளவத்தை வீட்டிலிருந்து மீட்பு

கொழும்பு,ஒக.19

வெள்ளவத்தையிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று சனிக்கிழமை மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இராமகிருஷ்ண வீதியிலுள்ள வீடொன்றிலிருந்தே பகல் 1.30 மணியளவில் இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டன.

56 வயதான நபர் ஒருவரும் , 54 வயதான அவரின் மனைவியும், 20 வயதான அவரின் மகளுமே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளவர்களாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் ஹட்டன், கொட்டகலையை சேர்ந்தவர்கள் எனவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு வந்து வீடொன்றில் தங்கியிருந்தனர் எனவும் தெரிய வந்துள்ளது.

வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவல்களை அடுத்து இவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.(10)

## 5

'உன்ர மகன் எங்கே? வீட்டுக்குள்ள ஒளிச்சு வைச்சிருக்கிற துவக்கை எடுத்துட்டு வா'

சூரியகாந்தி

## 6

இறுதிப்போரில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போது தமிழகமே கொதித்தெழுந்தது. ஆனால் கருணாநிதி என்ன செய்தார்?

சூரியகாந்தி

## 8

60 ஆயிரம் வருடங்கள் பழைமையான மரபணு கொண்ட மனிதர் தமிழகத்தில் இன்றும் வாழ்கின்றார்.

சூரியகாந்தி

## 28

ஈழத்து ரசிகர்களுக்காக இசைப் பணி யாற்ற எப் போதும் முன்வருவேன். என்று 'உதயனி'டம் கூறினார் உன்னிகிருஷ்ணன்.

சூரியகாந்தி

## ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக. 19

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் இருந்து ஒரு தொகுதி ஆயுதங்கள் கடந்த வாரம் மீட்கப்பட்டதாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா நேற்றுத் தெரிவித்தார்.

கிரனேற் லோஞ்சர்கள் நான்கு, மோட்டார் குண்டு, துப்பாக்கி ரவைகள் என்பவையே மீட்கப்பட்டுள்ளன. அங்குள்ள கைவிடப்பட்ட கிணற்றிலிருந்து இவை மீட்கப்பட்டுள்ளன என்று எரிக் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா தவசிக்குளம் மற்றும் கல்மடுப் பகுதிகளில் கட்டுத்துவக்குடன் இரண்டு பேர்

பார்க்க பக்கம் 4


## சிங்கர் காட்சியறை திறப்பு விழா

20.08.2012 திங்கட்கிழமை காலை 10.02 மணிக்கு SINGER கொடிகாமம் காட்சியறையும், காலை 11.52 மணிக்கு SINGER Plus பருத்தித்துறை காட்சியறையும் சிங்கர் ஸ்ரீ லங்கா நிறுவன விற்பனைப் பணிப்பாளரும் தையல் சந்தைப்படுத்தல் முகாமையாளருமான திரு. குமார் சமரசிங்க அவர்களால் கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளதால் அத்தருணம் தங்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

# எல்லோர் கண்ணும் எம்மீதுதான்

## சொல்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஓக. 19

இலங்கையின் மீது இப்போது குவிந்துள்ள சர்வதேச நாடுகளின் கவனத்தைப் போல, நாட்டின் அண்மைய வரலாற்றில் எப்போதும் இருந்ததில்லை என்று தெரிவித்திருக்கிறார் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ்.

இந்தியா, சீனா, ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், சுவிற்சர்லாண்ட், மாலைதீவு ஆகிய நாடுகளில் இருந்து மிக உயர் நிலை அதிகாரிகள் அண்மைக் காலங்களில் இலங்கைக்குப் பயணங்களை மேற்கொண்டிருந்தனர் என்பதை அவர் சுட்டிக்காட்டினார். பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா விரைவில் இலங்கை வரவுள்ளார் என்றும் கூறினார்.

இவ்வாறு அனைத்து நாடுகளின் கவனமும் இங்கு குவிந்திருப்பது இலங்கைக்கும் உலகுக்குமான உறவின் தொடர்ச்சித் தன்மையையும் தீவிரத் தன்மையையும் வெளிக்காட்டுவதாகவும் அவர் கூறினார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சங்கத்தின் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசும் போதே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

"எங்களுடைய அடைவு குறித்து நாங்கள் பெருமிதமடைகின்றோம். அத்தோடு பயங்கரவாதத்தை ஒழித்த பின்னர் நாட்டின் சாதனைக்கான சமிக்ஞைகளை வெளிநாட்டு ராஜதந்திரிகள் நேரில் வந்து பார்த்துச் செல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்" என்றார் பீரிஸ். (உ-01)



நிகழ்வில் நடனத்தை ரசிக்கும் அமைச்சர்களான பீரிஸ், சரத் அமுனுகம

**அனைத்து நாடுகளின் கவனமும் இங்கு குவிந்திருப்பது இலங்கைக்கும் உலகுக்குமான உறவின் தொடர்ச்சித் தன்மையையும் தீவிரத் தன்மையையும் வெளிக்காட்டுகிறது.**

## தாதியர் பயிற்சிக்கு மேலும் 12 பேர்

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ். தாதிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெறுவதற்கென இம்முறை தெரிவு செய்யப்பட்ட தாதிய மாணவர்களுடன் மேலும் 12 தாதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அவர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை கல்லூரிக்கு வந்து தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். தாதிய கல்லூரி அதிபர் செல்வி ஜெயலீலாதேவி வல்லிபுரநாதன் கேட்டுள்ளார்.

12 தாதிய மாணவர்களும் தமது ஜி.சி.ஈ. சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைபெறுபேற்று மூலப்பிரதிகளையும், தாம் திருமணமாகவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். இப்பயிற்சி நெறியைப் பயில விரும்பாதவர்கள் அல்லது பயிற்சி நெறிக்கு வர விரும்பாதவர்களும் அது பற்றி கல்லூரி அதிபருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அது ஏனைய தாதிய மாணவர்களுக்கு பயனளிக்கும் எனவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர் விவரம் வருமாறு:-

ஆர் அஜந் - 2ஆம் வட்டாரம், மண்டூர், மட்டக்களப்பு, எம்.கிரிஜான் - மத்திய வீதி, அட்டாளைச்சேனை 6, எம். ஐ.எம்.ஜகான்கீர் - பிரதான வீதி, புதியபாலமுனை, ஆரையம்பதி, பி.ஞானப்பிரகாஸ் - குழந்தையேசு ஒழுங்கை, மன்னார், எம்.மயூரன் - இருபாலை கிழக்கு, கோப்பாய், பி.தங்கேஸ்வரன் - சேமன் வீதி, மொரக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு, கே.சிறிதரன் - சித்திவிநாயகர் வீதி, தம்புலுவில், ரி.லயனியன் - மத்திய வீதி, காரைதீவு 8, வி.தனுசன் - தியேட்டர் வீதி, தம்பிலுவில் 2, வி.நிசாந்தன் - நந்தவனப் பிள்ளையார் வீதி, அம்பாறை, எம்.வை.எம்.நஸ்ரிஸ் - மதரசா வீதி, கல்முனை 9, கே.இந்துஜன் - சத்தியா வீதி, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு. (உ-4)

## விபத்தில் காயமடைந்தவர் 8 நாள்களின் பின்னர் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 19

மினிபஸ் - சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முதியவர் சிகிச்சை பயனளிக்காது, 8ஆம் நாளான நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

நீர்வேலியில் இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் பயணித்த நீர்வேலி வடக்கு நீர்வேலியைச் சேர்ந்த கந்தையா தம்பிராசா (வயது -65) படுகாயமடைந்திருந்தார்.

தனது வீட்டிலிருந்து புத்தூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனது தந்தையை அச்சுவேலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ் மோதியது என்று தம்பிராசாவின் மகன் தெரிவித்தார். முன்னே சென்றுகொண்டிருந்த வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளை இந்த விபத்து இடம்பெற்றதாகவும் அவர் கூறினார்.

கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்தவர் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். (உ-4)

## சட்டவிரோத சிகரெட்டுகள் கிளிநொச்சியில் மாட்டியது

யாழ்ப்பாணம், ஓக. 19

22 ஆயிரம் சட்டவிரோத சிகரெட்டுடன் இரணைமடுவில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த நபரிடம் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்த போது அவரிடமிருந்து சட்டவிரோத சிகரெட்டுகள் மாட்டிக்கொண்டன. இவை வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டவை எனவும் நீதிமன்ற உத்தரவின்படி சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பெரேரா மேலும் தெரிவித்தார். (உ-4)

## யுவதி சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

சாவகச்சேரியில் பெண்ணொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று மதியம் 1.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் சாவகச்சேரி கோயிலாக் கண்டியைச் சேர்ந்த செல்வி நாகராஜா சசிகலா (வயது - 31) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் சாவகச்சேரி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியாக பணியாற்றி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்று நண்பகல் வீட்டிலிருந்த உறவினர்கள் கோயில் திருவிழாவுக்காக சென்றிருந்த சமயம் குறித்த பெண் தனித்திருந்ததாகவும் உறவினர்கள் வீடுதிரும்பிய வேளை இவர் இறந்த நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16-9)


அனுராதபுரம் கதிரேசன் கோயிலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று சனிக்கிழமை வழிபாட்டில் ஈடுபட்டபோது.

## நிர்வாக சேவை பயிற்சிக்காக தெற்கிலிருந்து 130 பேர் வருகை

### வடக்கில் ஒரு மாதம் தங்கியிருப்பர்

யாழ்ப்பாணம், ஓக. 19

இலங்கை நிர்வாக சேவை பயிற்சிக்காக யாழ். மாவட்டத்துக்கு தென்பகுதியைச் சேர்ந்த 130 பேர் நாளை திங்கட்கிழமை வரவுள்ளனர். அத்துடன் இந்த வருடம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் இலங்கை நிர்வாக சேவை பயிற்சியாளர்கள் அனுப்பப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் ஒவ்வொரு மாவட்டத்தையும் பற்றி அறிந்து கொள்வதற்கும் நிர்வாக சேவைகளைத் தெரிந்து கொள்வதற்குமாக பயிற்சிக்காக அனுப்பப்படுவர்.

இந்த வகையில் யாழ். மாவட்டத்துக்கு 130 பேர் வரவுள்ளனர். ஒரு மாத காலம் யாழ். மாவட்டத்தில் தங்கி நின்று அவர்கள் தமது பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த 130 பேரையும் தீவகம் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்குப் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளனர். அத்துடன் இந்த வருடம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் இவ்வாறு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

கடந்த வருடம் யாழ். மாவட்டத்துக்கு 150 பேர் பயிற்சிக்காக வந்து ஒரு மாதகாலம் தங்கியிருந்தனர்.

இதேவேளை, ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் பட்டதாரி பயிலுநர்களாகப் பலர் நியமனம் பெற்றுள்ள நிலையில், பிரதேச செயலகங்களில் அவர்களுக்கே போதிய இடவசதி அற்ற நிலை காணப்படுகிறது. இந்த நிலையில் புதிதாக இலங்கை நிர்வாகசேவை பயிலுநர்களையும் இணைப்பது மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-5)

## ஆணைக்குழுவின் அறிக்கை சிங்கள, தமிழ் மொழிகளில்

கொழும்பு, ஓக. 19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட நல்லிணக்கத்துக்கான படிப்பினைகள் ஆணைக்குழுவின் அறிக்கை தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு வெளியுறவுத்துறை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரிடம் அறிக்கை கையளிக்கப்பட்டது.

மொழிபெயர்ப்புப் பிரதிகளை விரைவில் அச்சிடும் படி அரச உத்தரவிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். விரைவில் அவை பொதுமக்களின் பார்வைக்கு வழங்கப்படும் என்றும் அவர்கள் கூறினர். (உ-01)

## கருணாவின் சகோதரிக்கே கிழக்கில் முதல்வர் வாய்ப்பு

### ஆரூடம் கூறுகிறது கொழும்பு நாளிதழ்

**தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் பலரும் கருணாவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.**

கொழும்பு, ஓக.19

கிழக்கு மாகாண சபைக்கு அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்றால், புலிகளின் முன்னாள் தளபதி கருணாவின் சகோதரியே முதல்வராவார் என்று கொழும்பு நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள், இந்தத் தேர்தலில் பிரதி அமைச்சர் முரளிதரனின் சகோதரி தவமலரும் போட்டியிடுவதால் மீண்டும் முதல்வராகும் வாய்ப்பு சந்திரகாந்தனுக்கு மறுக்கப்படலாம் என்று கூறியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ்மட்டத் தலைவர்கள் தவமலருக்குப் பிரசாரங்களில் ஈடுபட்டுவரும் அதேவேளை, சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் பலரும் கருணாவுக்கு ஆதரவு வழங்குவதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் இருந்து பலர் வெளியேறியுள்ளதை அடுத்து, கிழக்கில் சந்திரகாந்தனின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்ட ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-10)

## மூதாட்டியை கிணற்றில் வீசி தங்கச்சங்கிலி அபகரிப்பு

### இரு பெண்கள் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம் . ஓக. 19

இளவாலையில் தனித்திருந்த மூதாட்டியைத் தூக்கிச்சென்று கிணற்றுக்குள் போட்டுவிட்டு அவரது தங்கச்சங்கிலியை திருடிய சந்தேகத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களை இளவாலைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது .

பிறரது உதவி எதுவுமின்றி 78 வயதுடைய இந்த மூதாட்டி வசித்து வந்துள்ளார் .அங்கு சென்ற அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் அந்த மூதாட்டியைத் தூக்கிச் சென்று கிணற்றினுள் போட்டுள்ளனர் . அத்துடன் அவரது தங்கச்சங்கிலி ஒன்றை திருடியுள்ளனர். இதனையடுத்து அவர்களது நடத்தைகளில் சந்தேகம் கொண்ட அயலவர்கள் உள்ளே சென்று பார்த்த போது நிலைமையைப் புரிந்து கொண்டனர்.

இந்த நிலையில் அந்த இரண்டு பெண்களையும் அயலவர்கள் பிடித்து வைத்துக் கொண்டு பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர். சங்கிலியையும் மீட்டனர். இரண்டு பெண்களும் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். (ம-4)

# மின் சக்தி அமைச்சின் அனுமதியின்றி வீடுகளுக்கான மின் விநியோகப் பணி

யாழ்ப்பாணம், ஓக.19

*அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மின் விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக, மின் சக்தி அமைச்சின் அனுமதி பெறப்படாமல் வீடுகளுக்கான மின் விநியோகங்கள் இடம்பெற்றுள்ளன. வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் 40 வீடுகளுக்கான மின் விநியோகம் கடந்த மாதம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.*

இதற்காக இலங்கை மின்சார சபையால் குறித்த வீடுகளுக்கான மின் விநியோகம் அவசர அவசரமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எஞ்சிய பகுதிகளுக்கு மின் விநியோகம் இன்னமும் வழங்கப்படவில்லை. தந்தை செல்வாபுரம், வித்தகபுரம், மாவிட்டபுரம் தெற்கில் ஒரு பகுதி ஆகிய இடங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சிய பிரதேசங்களில் ஒரு சில பகுதிகளுக்கு வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் ஊடாக மின்கம்பங்கள் நடப்பட்டு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அந்தப் பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பை இலங்கை மின்சார சபை வழங்கவில்லை.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தினரால் மின் விநியோக வேலைகள் கடந்த 3 வாரத்துக்கு முன்னரே பூர்த்தியாக்கப்பட்டுள்ள போதும், இலங்கை மின்சார சபையினர் வீடுகளுக்குரிய இணைப்புக்களை மேற்கொள்வதற்கான வேலைகளை தாமதப்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசனிடம் கேட்டபோது,

மின்சக்தி எரிசக்தி அமைச்சிலிருந்து வீட்டு இணைப்பு மின்சார வேலைகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு வரவில்லை.

முன்னர் மேற்கொண்ட வீட்டு இணைப்புக்களும் அமைச்சின் அனுமதியும் நிதி ஒதுக்கீடும் இதுவரையில் கிடைக்கவில்லை. அந்த நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டதும் வீட்டுக்கான இணைப்புக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.-என்றார்.(ம-5-13)

## தபால் சேவைகள் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.19

பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை, சுழிபுரம் தபாலகங்களிலும் தபால் விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள்ளன.

தபால் சேவையை மேலும் அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் வடக்குக்கு கடந்த திங்கட்கிழமை வருகை தந்த தபால்மா அதிபர் தபால் சேவை விஸ்தரிப்புகளை மேற்கொண்டார்.

இதன் அடிப்படையில் பருத்தித்துறை தபாலகத்தில் மின்சாரக் கட்டணங்களை செலுத்துவதற்கான கருமபீடம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அதனை விட வல்வெட்டித்துறை தபாலகத்தில் வெளியூருக்கான தபால் பொதிகளை அனுப்பி வைக்கும் சேவையும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதேசமயம் சுழிபுரம் அஞ்சலகத்தில் தபால் சேவை விழிப்புணர்வு நடவடிக்கை இடம்பெற்றதோடு வாடிக்கையாளர் கௌரவிப்பும் இடம்பெற்றது. (ம-17)

## சேற்றுக்குள் புதையும் கால்நடைகள்

வடமராட்சி, ஓக. 19

கரவெட்டி கிழக்குப் பகுதியில் குளங்களில் தண்ணீர் இன்றி சேறும் சகதியுமாக இருப்பதனால் குடிதண்ணீருக்காக குளங்களுக்குச் செல்லும் மாடுகள் சகதிக்குள் புதையுண்டு தினமும் மரணமடைந்து வருகின்றன . இதனால் இப்பகுதிக் குளங்களை புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதி விவசாயிகள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து கரவெட்டிப் பிரதேசசபையின் ஆளும் தரப்பு உறுப்பினர் பொ. தம்பிமுத்து, இந்தப் பகுதியில் மாடுகள் பெரிய அளவில் குடிதண்ணீரைப் பயன்படுத்தும் மருதடிக் குளம், தளவில்குளம் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இரு குளங்களையும் புனரமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

(ம- 8)



கட்டைவேலி- நெல்லியடி ப.நோ.கூ. சங்க நுகர்வோர் ஊக்குவிப்புத் திட்டத்தில் அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வில் அதிர்ஷ்டசாலிகளில் ஒருவருக்கு கிளை முகாமையாளர் மா.செகசோதி பரிசில் வழங்குகிறார். (ம-8)

## மூன்று பாடசாலைகள் காரைநகரில் திருத்தம்

காரைநகர், ஓக.19

ஐயாயிரம் பாடசாலைகளைப் புனர்நிர்மாணம் செய்யும் திட்டத்தின் கீழ் காரைநகரில் மூன்று ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பாடசாலையும் தலா 5 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வலந்தரை வடக்கு அ.மி.த.க. பாடசாலை, தோப்புக்காடு மறைஞான சம்பந்தர் வித்தியாலயம், ஊரி அ.மி.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளுமே மேற்படி திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை இந்த வருட ஆரம்பத்தில் மீள ஆரம்பிக்கப்பட்ட வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி இயங்கி வருவதாகவும் இந்தப் பாடசாலை அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது.

இந்தப் பாடசாலை மின்சார வசதி, தளபாடம் போதிய கட்டட வசதி, சிறுவர் முற்றம், சுற்றுவேலி, நூலகம், குடிதண்ணீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே இயங்கி வருகிறது.(ம-250)

## கல்வியங்காடு – இருபாலை வீதி அகலிப்புக்கு மூடல்

*வீதி அகலிப்பு பணிகள் காரணமாக இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர்ந்து 15 நாள்கள் கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து இருபாலை சந்தி வரையான பருத்தித்துறை வீதி மூடப்படும் என்று யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.*

*குறித்த வீதியின் அகலிப்பு பணிகள் இடம்பெறவுள்ளதால் கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து இருபாலை சந்திவரையான வீதி இன்று முதல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை மூடப்படவுள்ளது.*

*இந்தக் காலப் பகுதியில் போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் ஆடியபாதம் வீதி, ராஜவீதி, டச்சு வீதி, 'இருபாலை, கோண்டாவில் வீதி என்பவற்றை மாற்றுப் பாதைகளாகப் பயின்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.* (ம-14)

## தங்கமுலாம் பூசிய நகை ஒருவருடத்தின் பின் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக.19

தங்கமுலாம் பூசிய போலி நகையை வங்கியில் அடைவு வைத்தவர் பணத்துடன் தலைமறைவானார். ஒருவருடமாகியும் அடைவு மீட்கப்படாததால் நகையைப் பரிசோதித்த போதே அது போலி நகை என்பதனை வங்கியாளர்கள் உணர்ந்து கொண்டனர்.

இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

தற்போது தலைமறைவாகியிருக்கும் நபர் கடந்த வருடம் குறித்த நகையை யாழ்ப்பாணத்திலுள்ள வங்கி ஒன்றில் அடைவு வைத்தார். அதனைப் பரிசோதனை செய்த வங்கி அதிகாரிகளும் அதனைப் பெற்றுக் கொண்டு அடைவுக்குரிய பணத்தைக் கொடுத்துள்ளனர். அவரது அடையாள அட்டை இலக்கம் முகவரி உள்ளிட்ட ஆவணங்களையும் வங்கியாளர்கள் பெற்றுக் கொண்டு அடைவுப் பணத்தைக் கொடுத்துள்ளனர். ஒரு வருடம் கழிந்த நிலையில் அடைவு வைத்த நகையை உரியவர் மீட்கவில்லை. அவரது பதிவுகளின் படி தகவல் அறிவிக்க முற்பட்ட போதும் அது பயனளிக்கவில்லை. அதன் பின்னரே அடைவு வைத்தவர் பதிவு செய்த தரவுகள் அனைத்தும் பொய்யானவை என்பது தெரிய வந்தது.

பின்னர் அவர் அடைவு வைத்த நகையைப் பரிசோதித்த போது அது தங்கமுலாம் பூசிய போலிநகை என்பதனை வங்கியாளர்கள் அறிந்து கொண்டனர்.

கடந்த வாரம் இது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர் இதுவரை இனங்காணப்படவில்லை. பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை கடந்த வருடமும் இதே பாணியில் யாழ்ப்பாணம், சங்கானை ஆகிய இடங்களிலுள்ள அடைவு நிலையங்களில் போலிநகைகளை அடைவு வைத்தவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## நிகழ்வுகள் இன்று

### மருத்துவ முகாம்

வடமராட்சி லயன்ஸ் கழகம் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் உறுப்பினர்களின் ஆதரவில் நடத்தும் இலவச மருத்துவமுகாம் காலை9 மணிக்கு பருத்தித்துறை பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவரும் நகர சபை உறுப்பினருமான சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த வைத்திய முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் பொது வைத்திய சிகிச்சைகள் டாக்டர்களால் வழங்கப்படுவதுடன் இலவச கண்பரிசோதனையும் பரிசோதனை செய்யப்பட்டவர்களுக்கு கண்ணாடி வழங்குதலும் இடம்பெறும். பொது மக்கள் இந்த வைத்திய முகாமைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-8)

### அரங்கேற்றம்

மயூரிகா பத்மநாதனின் பரத நாட்டிய அரங்கேற்றம் காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### நூல் வெளியீடு

க. சின்னராஜன் எழுதிய ''வல்லை வெளி' கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா காலை 9 மணிக்கு அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியாலத்தில் எழுத்தாளர் கலாபூஷணம் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணியும் நயப்புரையை பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலனும் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் எழுத்தாளருமான இ. இராஜேஸ்கண்ணனும் நிகழ்த்துவர். (ம-8)

### கருத்தரங்கு

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் க. வே.சரவணமுத்து ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கும், பரீட்சையும் காலை 8.30 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

# ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 30 பேர் தமிழகத்தில் மாட்டினர்

சென்னை, ஒக. 19

சென்னையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குக் கடத்தப்பட இருந்த 30 ஈழத் தமிழர்களைத் தாம் மீட்டுள்ளனர் என்று கியூ பிரிவுப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

தமிழகத்தின் வண்டலூர் நகரில் இருந்து மாமல்லபுரம் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கையில் இவர்களைத் தாம் மீட்டனர் என்று பொலிஸ் அதிகாரிகள் கூறினர். படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதே இவர்களின் நோக்கம் என்றும் அவர்கள் கூறினர்.

**ஆஸ்திரேலியா செல்வதற்காக இவர்கள் ஒவ்வொருவரும் ஒன்றரை லட்சம் ரூபா முதல் இரண்டரை லட்சம் ரூபா வரை பணம் கொடுத்துள்ளனர்**

ஈழத் தமிழர்கள் பயணித்த வாகனத்தை வழிமறித்துச் சோதனையிட்ட பொலிஸார், அவர்கள் ஆஸ்திரேலியாவுக்குக் கடத்தப்பட இருந்ததை அறிந்து கொண்டனர் என்று கூறப்படுகின்றது. ஆனால் இவர்களைக் கடத்திச் செல்வதற்கு ஏற்பாடு செய்த குழு தப்பிச் சென்று விட்டதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

பிடிபட்ட ஈழத் தமிழர்கள் அனைவரும் மீண்டும் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஆஸ்திரேலியா செல்வதற்காக இவர்கள் ஒவ்வொருவரும் ஒன்றரை லட்சம் ரூபா முதல் இரண்டரை லட்சம் ரூபா வரை பணம் கொடுத்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றார்கள் என்று கூறப்படும் ஈழத் தமிழர்கள் இவ்வாறு பிடிபடுவது ஒரு வாரத்துக்குள் இது இரண்டாவது முறையாகும். இதற்கு முன்னர் 23 பேர் இவ்வாறு மீட்கப்பட்டிருந்தனர். (உ-01)

## மேலும் பட்டதாரிகள் 6 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்க அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக.19

தொழில்வாய்ப்பற்ற சுமார் 6000 பட்டதாரிகளுக்கு புதிய சுற்றுநிருபமொன்றை விடுப்பதன் மூலம் தொழில் வழங்குமாறு ஜனாதிபதியை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

2010, 2011 ஆம் ஆண்டுகளில் பட்டதாரிகளாக வெளியேறியோருக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என்று ஜனாதிபதி அண்மையில் கூறியிருந்தார்.

ஆனால், அரசால் வழங்கப்படும் தொழில்வாய்ப்பு இவர்களுக்கு கிடைக்கவில்லை என்று பட்டதாரிகள் சங்கத்தின் பேச்சாளர் தம்மிக முனசிங்க கூறியுள்ளார்.

ஏற்கனவே பட்டதாரி பயிலுநர்களாக அரசு நாடு பூராகவும் ஆள்சேர்ப்பு செய்துள்ள நிலையில் எஞ்சியுள்ள பட்டதாரிகளையும் வெறொரு திட்டத்தின் மூலம் உள்வாங்க வேண்டும். இதற்கென புதிய சுற்றுநிருபமொன்றை வெளியிடுமாறு அரசைக் கோருகின்றோம் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (10)

## 10,000 பசுக்கள் இறக்குமதி

கொழும்பு, ஒக.19

பால்மாவுக்குப் பதிலாக புதிய பால் நுகர்வை ஊக்குவிப்பதற்காக இந்த வருடம் மேலும் 10,000 பசுக்களை இறக்குமதி செய்ய தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது. இதன்படி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களின் எண்ணிக்கை 20 ஆயிரமாக அதிகரிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே ஆஸ்திரேலியாவிலிருந்து 500 பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் 1500 பசுக்கள் இரு மாதங்களுக்குள் இறக்குமதி செய்யப்படும் எனவும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் தலைவர் லக்ஷமன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

பால்மா இறக்குமதிக்காக இலங்கை வருடாந்தம் 4000 மில்லியன்டொலர்களைச்செலவிடுகிறது.இதனை நீண்டகால அடிப்படையில் குறைக்க பசுக்களை இறக்குமதி செய்வது பொருத்தமானதாக இருக்கும் என்று தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## பிறை தென்பட்டது; இன்று நோன்பு

ஹிஜ்ரி 1433 ஆம் ஆண்டின் புனித ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை நாட்டின் பல பிரதேசங்களிலும் தென்பட்டது. இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை நோன்புப் பெருநாளை கொண்டாடலாம் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் நேற்றிரவு அறிவித்துள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலிலுள்ள மத்ரஸதுல் ஹமீதியா மண்டபத்தில் நேற்று மஃரிப் தொழுகையினை அடுத்து இடம்பெற்ற பிறை தீர்மானிக்கும் மாநாட்டிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது, நாட்டின் பல பிரதேசங்களில் பிறை தென்பட்டதாக உறுதிப்படுத்தலுடன் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம்இயதுல் உலமா சபை பிரதிநிதிகள் கொழும்பு பள்ளிவாசல் நிர்வாக சபையினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## மாடு கடத்தியோர் மாட்டினர்

வவுனியா, ஒக.19

வவுனியா பூந்தோட்டத்தில் சட்டவிரோதமாக இறைச்சிக்காக 14 எருமை மாடுகளைக் கடத்திச் சென்ற சந்தேகத்தில் இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

மாடுகளை வாகனத்தில் ஏற்றிச் சென்று கொண்டிருந்தபோதே சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டனர். (உ-4)

## 9 கிராம அலுவலர் பிரிவுகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராம அலுவலர் பிரிவுகள் விடுவிக்கப்படவுள்ளன.

1990 ஆம் ஆண்டு போர் காரணமாக வலி. வடக்கின் பெரும்பான்மையான பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இந்த நிலையில் 1996 ஆம் ஆண்டு இராணுவம் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் வலி. வடக்கின் பெரும்பான்மையான பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டன.

2009 ஆம் ஆண்டு போர் நிறைவடைந்ததன் பின்னர் வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பகுதிகள் சிறுது சிறிதாக விடுவிக்கப்பட்டன.

2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி 3 கிராம சேவகர் பிரிவுகளும் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி 10 கிராம சேவகர் பிரிவுகளும் விடுவிக்கப்பட்டன.

எஞ்சிய பகுதிகள் விடுவிக்கப்படாத நிலையில் இந்த வருடம் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் உயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்கப் பகுதிகளில் நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு வந்தது.

இது, ஏனைய பகுதிகள் விடுவிக்கப்படமாட்டா என்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தின.

இந்த நிலையில் கடந்த மாதம் 20 ஆம் திகதி யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்திருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, யாழ். மாவட்ட இராணுவத் தளபதியுடன் எஞ்சிய பகுதிகளின் மீள்குடியமர்வு நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்.

இதன் பின்னர் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் மேற்படி 12 கிராம சேவகர் பிரிவுகளையும் விடுத்து எஞ்சிய பகுதிகளே இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதி எனக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கலந்துரையாடலில் பேசிய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, பலாலி விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளில் நிரந்தர இராணுவ முகாம்கள் அமைக்கப்படும் எனவும் இதனால் பாதிக்கப்படும் மக்களுக்கு நஷ்டஈடும் மாற்றுக் காணியும் வழங்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது வலி. வடக்கின் உயர் பாதுகாப்பு வலயத்தின் முன்றல்களில் உள்ள காவலரண்கள் இராணுவத்தினரால் பின் நகர்த்தப்பட்டு வருகின்றன.

தற்போது காங்கேசன்துறை மேற்கு (ஜே/233), காங்கேசன்துறை மத்தி (ஜே/234), காங்கேசன்துறை தெற்கு (ஜே/235), தையிட்டி தெற்கு (ஜே/250), வறுத்தலைவிளான் (ஜே/241), பளைவீமன்காழம் வடக்கு (ஜே/236), பளைவீமன்காமம் தெற்கு (ஜே/237) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் முழுமையாக விடுவிக்கப்பட உள்ளன.

குரும்பசிட்டி (ஜே/242), தையிட்டி வடக்கு (ஜே/249), வயாவிளான் மேற்கு (ஜே/245), குரும்பசிட்டி கிழக்கு (ஜே/243), கட்டுவன் (ஜே/238) கிராம சேவகர் பிரிவுகள் பகுதியாகவும் விடுவிக்கப்படவுள்ளன.

இவற்றில் பளைவீமன்காம் வடக்கு (ஜே/236), பளைவீமன்காமம் தெற்கு (ஜே/237), கட்டுவன் (ஜே/238), வறுத்தலைவிளான் (ஜே/241), குரும்பசிட்டி கிழக்கு (ஜே/243), வயாவிளான் மேற்கு (ஜே/243) என்பன பகுதியாக முன்னர் விடப்பட்டிருந்த நிலையில் தற்போது எஞ்சிய பகுதிகள் விடுவிக்கப்படவுள்ளன.

இதேவேளை மயிலிட்டி வடக்கு (ஜே/246), தையிட்டி கிழக்கு (ஜே/247), மயிலிட்டித்துறை தெற்கு (ஜே/248), மயிலிட்டித்துறை வடக்கு (ஜே/251), பலாலி தெற்கு (ஜே/252), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254), பலாலி வடமேற்கு (ஜே/255), பலாலி மேற்கு (ஜே/256) கிராம சேவையாளர் பிரிவுகள் தொடர்ந்தும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டினுள்ளேயே இருக்கும்.

இதன் காரணமாக 3 ஆயிரத்து 129 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 324 பேர் தொடர்ந்தும் பாதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## பற்றி எரிந்தது...





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக அந்தப் பகுதி கிராம சேவையாளருக்குத் தகவல் தெரியப்படுத்தப்பட்டது.

கிராம சேவையாளர் ஊடாக யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டது. பின்னர் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் ஒருங்கமைக்கப்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்தப் பகுதி கிராம மக்களும், இராணுவத்தினரும் இணைந்து தீயை மதியமளவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்தினால் கிட்டத்தட்ட ஒன்றரை சதுர கிலோ மீற்றர் பரப்பில் சவுக்கு மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளன என்று இடர் முகாமைத்துவ அதிகாரிகள் கூறினர்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் என்னவென்பது இதுவரையில் அறியப்படவில்லை. (உ-5)

## ஆயுதங்கள் மீட்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் ஓமந்தை நொச்சியாகமம் பகுதியிலும் குறிபார்த்துச் சுடும் துப்பாக்கி ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

## அடுத்த மாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதஉரிமைகள் விடயங்கள் தொடர்பில் ஆராயவுள்ளனர்.

இந்தப் பயணத்தின் போது அவர்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சென்று போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் அங்கு மனித உரிமைகளின் நிலைமை என்ன என்பதிலும் கவனம் செலுத்தவுள்ளனர். அத்துடன் தென்பகுதியில் உள்ள சூழ்நிலைகள் தொடர்பிலும் அவர்கள் ஆராயவுள்ளனர். (உ-10)

## சுற்றுலா வலயமாகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றன. இதனைத் தொடர்ந்து தற்போது கரையோரப் பகுதிகளில் உள்ள அரச காணிகளை அளவீடு செய்யும் பணிகளை அரச நில அளவைகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

சுற்றுச்சூழல் அதிகார சபை, கரையோரப் பாதுகாப்பு அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், வன பரிபாலன சபை, இலங்கை முதலீட்டுச் சபை, காணி அபிவிருத்தித் திணைக்களம், நில அளவைத் திணைக்களம் என்பன இணைந்து இது தொடர்பான பணிகளை மேற்கொண்டுள்ளன.

வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்திலேயே இந்தக் கரையோரப் பகுதியை இயற்கை சுற்றுலா மையமாக்க அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தத் திட்டம் குறித்து முல்லைத்தீவு அரச அதிபர் என்.வேதநாயகனிடம் கேட்டபோது, ''இந்தக் கரையோரப் பிரதேசத்தில் உள்ளடங்கும் அரச காணிகளை இனங்கண்டு அளவீடு செய்யும் நடவடிக்கைகளை நில அளவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது'' என்று தெரிவித்தார். வேறு விவரங்களைத் தெரிவிக்க அவர் மறுத்து விட்டார்.

இந்தக் கரையோரத்தில் காணிகளைக் கொண்டுள்ள தனியார் விரும்பினால் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய வர்த்தக அல்லது முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடவும் அனுமதிப்பதென அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

சுற்றுலா வலயமாக அறிவிக்கப்பட உள்ள இந்தப் பகுதியிலேயே அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் மேற்கு, முள்ளிவாய்க்கால் கிழக்கு, பழைய மாத்தளன், புதுமாத்தளன், வலைஞர்மடம், வட்டுவாகல் ஆகிய பகுதிகளும் உள்ளடங்குகின்றன.

வன்னியில் மனிதப் பேரவலத்தை உருவாக்கிய இறுதிப் போரின் போது மக்கள் இந்தப் பகுதிகளிலேயே தஞ்சமடைந்திருந்தனர். பலர் இந்தப் பிரதேசத்திலேயே உயிரிழந்தும் இருந்தனர். (உ-5)

## பொலிஸாரிடம் சிக்கிய மாடுகள்



மட்டக்களப்பு,ஓக.19

மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேசத்திலிருந்து கல்முனை, நற்பிட்டிமுனை பிரதேசத்துக்கு அனுமதிப் பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட எட்டு மாடுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று சவளக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

சவளக்கடை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த மாடுகள் சவளக்கடை பிரதேச வீதி பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக நாவிதன்வெளியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சவளக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் மாடுகளையும் சந்தேக நபர்களையும் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வாக்குச் சேகரிப்பதற்கு கூரைத்தகடு வழங்க முயற்சி

### அமைச்சர் டிலான் பெரேராவால் முறியடிப்பு

திருகோணமலையில், வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக கொண்டு செல்லப்படவிருந்த 4,000 கூரைத் தகடுகளை வாகனத்தில் ஏற்றப்படுவதை அமைச்சர் டிலான் பெரேரா தடுத்து நிறுத்திய சம்பவம் பதுளையில் இடம்பெற்றுள்ளது.


பதுளையில் உள்ள தேசிய விடமைப்பு அதிகார சபையின் களஞ்சியசாலைக்கு திடீரென கடந்த வெள்ளிக்கிழமை பயணம் மேற்கொண்ட அமைச்சர் டிலான்பெரேரா, லொறியொன்றில் மேற்படி கூரை தகடுகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் கூரைத் தகடுகள் கொண்டு செல்லப்படுவதை தடுத்து நிறுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில், அமைச்சர் விமல் வீரவன்சவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு வாக்குகளைப் பெறுவதற்காக இக்கூரைத் தகடுகள் விநியோகிக்கப்படவிருந்ததாக அமைச்சர் டிலான் பெரேரா குற்றம்சாட்டியுள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபை அமைச்சர் விமல் வீரவன்ஸவின் கீழ் உள்ளது. இக்கூரைத்தகடுகள், தேசிய வீடமைப்பு அதிகார சபையின்தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் கொண்டுசெல்லப்படவிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பதுளை மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வழங்குவதற்காக இக்கூரைத் தகடுகள் வைக்கப்பட்டிருந்தாக அமைச்சர் டிலான் பெரேரா மேலும் தெரிவித்தார்.

இது தேர்தல் சட்டங்களை மீறும் செயலெனவும் இச்சம்பவம் தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு தான் முறையிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருமலை மாவட்டத்தில் ஐ.ம.சு.கூட்டமைப்பு சார்பில் போட்டியிட தேசிய சுதந்திர முன்னணி வேட்பாளர்களுக்கு இடமளிக்கப் படவில்லை. அதனால் அக்கட்சி தனியாக போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (16)

லொறியொன்றில் கூரை தகடுகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் அவை கொண்டு செல்லப்படுவதை தடுத்து நிறுத்தியுள்ளார்.



திருகோணமலை பொலிஸார் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வு கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகள், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அணிசேரா நாடுகளின் மாநாட்டின்போது மன்மோகனைச் சந்திக்கிறார் மஹிந்த

கொழும்பு, ஓக. 19

ஈரானில் நடைபெறவுள்ள அணிசேரா நாடுகளின் மாநாட்டின் போது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடுவார் என தகவல்கள் வெளியாகியுள் என.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை, அடுத்த மாதம் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பு கிடைக்காது என அறிவிக்கப்பட்ட நிலையில் ஈரானில் ஈரானில் வைத்து அவரை சந்திக்க இலங்கை ஜனாதிபதி முயன்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் எதிர்வரும் 26ஆம் நாள் அணிசேரா நாடுகளின் மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

ஆயினும் இதன்போதான சந்திப்பு தொடர்பில் இந்தியத் தரப்பில் இருந்து உத்தியோகபூர்வ தகவல் ஏதும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் சந்தித்துப் பேசுவதற்கான வாய்ப்பு கிடைக்காது என அறிவிக்கப்பட்ட நிலையில் ஈரானில் ஈரானில் வைத்து அவரை சந்திக்க இலங்கை ஜனாதிபதி முயன்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

## இப்தார் நிகழ்வுகள்

இலங்கை வங்கி கிண்ணியா கிளையால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த 'இப்தார்' நிகழ்வு அண்மையில் இலங்கை வங்கி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

கிண்ணியா கிளையின் முகாமையாளர் என்.யோகநாயகம் தலைமையின்கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் அப்துல்லா, சிரேஷ்ட முகாமையாளர் ஹமீம் மற்றும் ஏ.எம்.சாஹீர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

* * *

கிண்ணியா பொலிஸ் நிலையமும், சிவில் பாதுகாப்பு அமைப்பும் இணைந்து கிண்ணியா பொலிஸ் வளாகத்தில் நடத்திய 'இப்தார்' நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

கிண்ணியா பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி அசோக்கா கோட்டகே தலைமையின்கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பௌத்த பிக்குகள், மௌலவிமார்கள், உலமா சபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், அரசியல் கட்சி வேட்பாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பொதுமக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் இன மத வேறுபாடு இல்லை என்பதை எடுத்துக்காட்டும் வகையிலேயே இந்த இப்தார் நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டது எனப் பொலிஸ் பொறுப்பதிகாரி கோட்டகே தெரிவித்தார். (ச)

## அரசியலுக்காக அபிவிருத்தி செய்வதை ஏற்கமுடியாது

### மு.கா.வேட்பாளர் கூறுகிறார்

அம்பாறை,ஓக.19

உரிமைக்காகவும், அபிவிருத்திக்காகவுமே அரசியலைச் செய்யவேண்டுமே தவிர அரசியலுக்காக அபிவிருத்திகளையும், சலுகைகளையும் செய்வது ஏற்றுக் கொள்ள முடியாது என்று கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் நஸார் ஹாஜியார் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் உண்மையின் பக்கம் அணிதிரண்டுள்ளனர். தேர்தல் முடிவுகள் இதனை வெளிக்காட்டும்.

நமது பிரதேசத்தில் மௌனமாகும் அரசியலை ஒழித்து சமய, கலாசார உரிமைகளைப் பாதுகாக்க நாம் ஒன்றுபட வேண்டும். இன்று தம்புள்ள பள்ளிவாசலை தொட்டு குருநாகல் என்று தொடர்கின்றது. இவற்றுக்கெல்லாம்முடிவுகட்ட வேண்டுமாக இருந்தால் முஸ்லிம் சமூகத்தின் உரிமைக் குரலான முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவை நாம் வழங்க வேண்டும்.

தேர்தல் முடிவுகள் யார் ஆட்சியமைப்பது என்பதை தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் மாறப் போகின்றது. தனித்துக் கேட்பதும், சேர்ந்து கேட்பதும் முஸ்லிம் காங்கிரஸின் பலம். ஒருவரை அல்லது இருவரை வைத்துக் கொண்டு கட்சி நடத்துபவர்களால் அது முடியவே முடியாது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், முஸ்லிம்களைப் பற்றிப் பேசாமல் யாரைப் பற்றிப் பேசுவது? இன்று அவர் பேசுவதை ஒரு சிலர் இனவாதமாகப் பார்க்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் இனத்தின் கட்சி தான். அது இனவாதக் கட்சியல்ல, பல பிரதேசங்களில் மாற்று இனத்தவர்கள் அந்தக் கட்சியோடு சேர்ந்து அரசியல் செய்கின்றனர். அது மட்டுமல்ல அம்பாறை மாவட்டத்தில் இரண்டு சிங்கள சகோதரர்கள் முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடுகின்றனர்.

நேரத்திற்கு நேரம் கட்சியின் பெயர்களை மாற்றுகின்றவர்களால் ஒருபோதுமே முஸ்லிம்களின் உரிமைகளைப் பெறமுடியாது. - என்றார். (ச)

## சுயதொழில் உதவி

அம்பாறை, ஓக.19

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், திருக் கோவில் பிரதேசங்களில் மிகவும் வறுமை நிலையில் உள்ள மக்களின் வாழ்வாரத்தை மேம்படுத்துவதற்கான குடும்பப் புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ், தலா ஒவ்வொரு குடும்பத்திற்கும் 40,000 ரூபா வீதம் 95 குடும்பங்களுக்கு சுய தொழிலுக்கான உதவிகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

ஆடு, கோழி வளர்ப்பு, புடைவை வியாபாரம், உணவுப் பண்டங்கள் தயாரித்தல், மா, மிளகாய்தூள் அரைத்தல், விவசாயம் மற்றும் தையல் தொழில்களுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த உதவிகள் பொத்துவில் பிராந்திய வேள்ட் விஷன் நிறுவனத்தின் அனு சரணையுடன் இவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஜ.எம்.தௌபீக், வேள்ட் விஷன் நிறுவனத்தின் முகாமையாளர் இருதயம் மைக்கல், திட்டப் இணைப்பாளர் தயாளன் இலட்சுமணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## ஆஸ்திரேலியா சென்றோர் கடற்படையினரால் கைது

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குப் படகில் பயணிக்க முற்பட்டதாகக் கூறப்படும் 57 பேர் புல்மோட்டை கரையோரப்பகுதியிலிருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் கடற்படையினரால் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

52 தமிழர்களும், 5 சிங்களவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்ட இவர்கள், மேலதிக விசாரணைக் காக குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

Empower your English with
PRONOUNCE
The Course that makes you
Pronounce & speak English proper
(for all levels - KIDS to ADULTS)
BEGINNER ENGLISH
Listening, Reading, Writing & Speaking
(For Grade - 1 2 3 4 5 6 7 8 9 & 10)
ELOCUTION
(For Introductory, Junior Preparatory, Preparatory, Grade 1, Grade 2,Grade 3 & Grade 4)
Visalam
Beyond Boundaries
127/1 Temple Road, Jaffna.
admin@visalamholdings.com
222 9695 / 078 467 0713

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை
வருடாந்த மகோற்சவம் 2012
இன்று இரண்டாம் திருவிழா



அருவார் தொழுவார்
ஆனந்தக் கண்ணீர் சொரிவார்
அங்கயற் கண்ணியே நீ
அரவணைத்து அருள் செய்யும்
அற்புதத்தை அறியாதார் யாருளரோ
துன்பங்கள் விலக்கி தூயவாழ்வு நல்கும்
துர்க்கா தேவி - உன்னைத்
துதிப்போர்க்கு துன்பமில்லை
அடியவர்.
அனுசரணை: இந்து இளைஞர் மன்றம் மற்றும்
சகல விதமான விழாக்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.
துர்க்கா போட்டோ
துர்க்காபுரம் தெல்லிப்பளை.

## வேலைஆள்கள் தேவை

களஞ்சியக்காப்பாளர்:பெண்/ஆண் (முன்அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
★ROOM BOY :- (ஆண்.)கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 22.08.2012 புதன்கிழமை நேரில் வரவும்
இல 321,நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு:- 0214925102

# 4வது பிறந்தநாள் வாழ்த்து

## கிரிதரன் - சவிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் கேஷியன்

(17.08.2012)



தனது 4ஆவது பிறந்த நாளை இன்று 19.08.2012இல் சுன்னாகத்தில் இருக்கும் தனது அப்பப்பா -அப்பம்மா வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை லண்டனில் இருக்கும் அப்பா, அம்மா, தம்பி ஹரின் மற்றும் சுன்னாகத்தில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா லண்டனில் இருக்கும் அம்மம்மா, தாத்தா ஜேர்மனியில் இருக்கும் சித்தப்பா, மாமா,அத்தை,மச்சான்,மச்சாள்மார் லண்டனில் இருக்கும் மாமா, சித்தப்பா, சித்திமார் மற்றும் அனைவரும் இறைவன் அருளால் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்

திரு ,திருமதி கிரிதரன் (பெற்றோர்)
அப்பப்பா , அப்பம்மா

(21896)(9.14)

## Vacancies

1.) Lecturers - *IT, Management, Science & Maths*
Academic and other requirements
1. A degree in relevant field
2. Good communication and Presentation skills
3. Previous Lecturing experience (Would be an advantage)

2.) Admin Staff
Good communication and Presentation skills

Apply within 7 working days

Visalam
Beyond Boundaries

127/1 Temple Road, Jaffna.
admin@visalamholdings.com
222 9695 / 078 467 0713

## விற்பனைக்குண்டு

பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் மாலைகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0776017907
(நேரில் பார்வையிடலாம்)
71, சிவன்பண்ணை வீதி, கொட்டடி.
(21963)(3)

## தேவை

யாழ் நகரில் உள்ள பலசரக்கு சில்லறை விற்பனை நிலையத்திற்கு கடை அனுபவம் உடைய சிப்பந்தி தேவை. 23.08.2012க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.
T.P 0771951297
(21952)(9)

## வீடும்,காணியும் விற்பனைக்கு

யாழ்/நீராவியடி, கல்லூரி வீதி,84,86 ஆம் இலக்கத்தில் கடையிற் சுவாமி வீதி, அருகில் 4பரப்புக்காணியும், 6அறை வீடும் விற்பனைக்கு உண்டு.
(தனித்தனியாகவும் விற்பனைக்குண்டு)
தொடர்பு:
077 807 2985

## மணமகள் தேவை

(UK CITIZAN)
26 ஆயிலியம் இந்து கௌரவ குடும்பம்
29 றேவதி
32 கேட்டை
37 திருவோணம் (CANADA CITIZEN)
31 ரேகினி (FRANCE CITI)
தொடர்பு:-
00447831040046

## வீடு வாடகைக்கு உண்டு

முதலி கோயிலடி கொக்குவில் மேற்கில் 3 படுக்கை அறைகள், குளியல் அறை, சமையல் அறை, ஹோல் அடங்கலாக வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: குலேந்திரன் தை21/4A முதலி கோயிலடி, கொக்குவில் மேற்கு
0770060490
(21970)(7.9.14)

# மரண அறிவித்தல்கள்

## கணபதி நகுலேஸ்



(முன்னாள் புகையிரத ஊழியர்)

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் 3ஆம் கட்டை ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நகுலேஸ் 16.08.2012 வியாழக்கிழமை காலமானர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2012) ஞயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைக்கோட்டை எரிக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை (21966)(3)

தகவல்:
நிக்சன்(பேரன்)

## வைத்திலிங்கம் சம்மந்தர்



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சம்மந்தர் நேற்று (18.08.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- பொன்னு தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், பாக்கியம், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், கந்தசாமி ஆகியோரின் சகோதரனும், பேரின்பராசன்-நளாயினி ஆகியோரின் பேரனும், நிதர்சனன், லதுஷன், டிலானி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2012) பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

களவாவோடை,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(21956) (6,7,10)

தகவல்:
பேரின்பராசன் (பேரன்)

## செல்லப்பா துரைராஜா

(இளைப்பாறிய அதிபர், யா/துன்னாலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை)



அல்வாயைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா துரைராஜா 13-8-2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா, தயாமணி, தவமணி, தங்கராசா மற்றும் செல்வராசா (இயைப்பாறிய அதிபர்- அல்வாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தகுமார் (லண்டன்), சுதர்சன் (லண்டன்), பிரமிளா (லண்டன்), பிரேமினி (லண்டன்), பிரதீபா (ஆஸ்திரேலியா), பிரதீபன் (தீபன் -சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வினோதினி, ஜோதினிமலர், சுரேஸ்குமார், ராஜசேகரம், அருணாகரன், ஈஸ்வரவதனா ஆகியோரின் அன்பு மாமனும் தர்சனா, றுசானா, கிஷான், அஜந், நிஷாங்கனி, சங்கீத், சியாந், விசானி, ஆதன், ஆருதி, அக்ஷயா,அஸ்வதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (19.8.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 முதல் ந.ப.12.00 வரை Pinegrove Memorial Park, Kington street, Minchinbury என்னும் முகவரியில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2012) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு (Pinegrove Memorial Park,Kington street, Minchinbury) இடம் பெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

தொடர்புகளுக்கு:
அருணாகரன்(மருமகன்)- (அவுஸ்திரேலியா)
செல்லிடப்பேசி: +61427247934
பிரதீபா(மகள்-அவுஸ்திரேலியா) +61298968926
நந்தகுமார்(மகன்-பிரித்தானியா)+442086485230
சுதர்சன்;(மகன்-பிரித்தானியா) +441483480742
பிரதீபன்;(மகன்-சிங்கப்பூர்) +6582986200
பிரமிளா (மகள்-பிரித்தானியா)+441189587691

## பழையமாணவர் சங்க பொதுக்கூட்ட அறிவித்தல்

அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலை பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும், நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும் 02.09.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/2528)(3)

நிர்வாக சபையினர்.

## வீடு வாடகைக்கு தேவை

மூன்று பேரடங்கிய சிறிய குடும்பத்திற்கு இனுவில், மானிப்பாய் பகுதிகளில் வீடு தேவை.
தொடர்பு- 0773785688
(21955)(9)

## Vacancy Notice

**Austriya Photo**
Digital Colour lab & Offset Press
Vavuniya

- Album Designers
- Printers– (Frontier/Noritsu )
- Video Editors
- Account Clerk cum receptionist
- Office Boys

CorelDraw/Photoshop/VideoEditing/Album designing/ Printing இல் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

#236, Kandy Road, Vavuniya
TP :-0773501036/
0773501045
austriyap@gmail.com
www.austriya.lk

## COMPUTERS FOR SALE

Tel : 021-222 4459, 0772533390

HP Branded, Intel Dual Core 2.0 GHz, Intel Mother Board, 2GB DDR-II Ram, 80GB Sata Hard Disk, DVD Combo, ATX Casing, 15" HP LCD Monitor, Keyboard, Optical Mouse, H.Phone, Webcam, இவை அனைத்தும் Rs.22,750/= மட்டுமே (1வருட உத்தரவாதம்)

## COMPUTER ACCESSORIES FOR SALES

Huawei Multy Dongle : 7.2mbps From, 3450, 21.1 mbps 5000, Webcam from: 750, Kingston Pendrive: 4GB-900, 8GB-1150, 16GB-2400, DVD Writer 2850, ATX Power Supply-1450, Kaspersky In Security: 1500, Optical Mouse: 350, Keyboard-550, Woofer-1200, 15", 17" LCD Monitor from: 5200, Laptop Charger-1800.

(உங்கள் சகல விதமான கணனிகளையும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்)

North Lead Computer Sales & Services
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

# மரண அறிவித்தல்

## கந்தையா விவேகானந்தன்

(பிள்ளையார்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் பாண்டியன் தாழ்வை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா விவேகானந்தன் நேற்றுமுன்தினம் (17.08. 2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற அரசரட்ணம் மற்றும் பூமணி தம்பதியரின் மருமகனும், இந்திராவின் அன்புக் கணவரும், விஸ்வேந்திரா, தருமரூபினி, ஞானச்சந்திரன், லோஜினி, குமுதினி, நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் பரமேஸ்வரி, ஞான சௌந்தரி அம்மாள் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சறோஜா, கோபாலசிங்கம், ஜெயரட்ணம், நாகேஸ்வரி, வசந்தாதேவி ஆகியோரின் மைத்துனரும், நிரோஜினியின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2012) ஞாயிற்றுக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

70/2 பாண்டியன் தாழ்வு,
கொழும்புத்துறை.

(21962)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## வன்னி மக்களின் கஷ்டங்களும் புதிதாக முளைக்கும் சம்பவங்களும்

போர் முடிவுற்று வருடங்கள் மூன்று முடிந்து விட்டன; மாதங்கள் மூன்றும் கடந்து செல்லப் போகின்றன. போரின் களமாக இருந்த வன்னியில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை இன்னமும் இயல்பு நிலைக்குத் திரும்ப வில்லை. முந்தைய சாதாரண வாழ்க்கையை அனுபவிக்க இன்னமும் எத்தனை ஆண்டுகள் செல்லும் என்று உத்தேசமாக மனதிற்குள்தானும் கணக்குப் போட முடியாமையே நீள்கிறது.

நலிந்த பிரிவினர் என்ற வகுப்புக்குள் இன்னும் பல ஆண்டுகள் வாழ நேரிடுமோ என்ற ஏக்கத்துடனேயே முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்கள் மற்றும் வவுனியா வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் நாள்களைக் கழிக்கிறார்கள்.

வன்னி மக்களின் வாழ்க்கை நிலைக்கும் அவர்கள் எதிர்கொள்ளு ம் கஷ்டங்கள், இல்லாமைகளுக்கும் ஒரு சில உதாரணங்கள் இவை:

*முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் சில கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் இன்னும் மீள்குடிய மர்த்தப்படவில்லை.

*பல பிரதேசங்களில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலும், அடிப்படை வசதிகள் வேண்டிய அளவில் கிடைக்காமல் பல வகையான கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள், அல்லாடுகிறார்கள்.

*குளங்களின் புனர்நிர்மாணப் பணிகளுக்காக எனத் தெரிவித்து திட்டமிடப்படாத வகையில் தண்ணீர் திறந்து விடப்பட்டதால், மன்னார் மடுப் பிரதேச செயலக பிரிவில் அடங்கும் இரணை இலுப்பங்குளம் பகுதியில், கொஞ்ச நஞ்சமல்ல, மூவாயிரம் ஏக்கர் நிலத்தில் சிறு போக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது. அதிகாரிகளின் இது போன்ற அசண்டையீனங்களால், அசமந்தத்தால், மக்களுக்கு உண்டாகும் பாதிப்புக்கள் இன்னும் பலவகையானவை.

*பல குளங்களின் தண்ணீர் ஒரே வேளையில் திறந்து விடப்பட்டமையால், மாந்தைப் பிரதேசம் போன்ற பகுதிகளில் குடிதண்ணீரைப் பெறுவது மிகுந்த கஷ்டமாகியுள்ளது.

*வறட்சி காரணமாக ஆழ் கிணறுகளும் குளங்களும் வற்றி விட்டதால் தண்ணீர்ப் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது. தோட்டப் பயிர்கள் மட்டுமன்றி பயன்தரு மரங்களும் அழிந்து வருகின்றன.

*மழை பொய்த்து நீர் நிலைகள் வற்றியதால், சிறுபோக நெற்செய்கை அழிந்து போயிற்று. அதிலிருந்து தப்பிய நெல்லையும் விற்க முடியாத கஷ்டங்கள் விவசாயிகளைப் பீடித்துள்ளது.

*கடல் சார்ந்த (பூநகரி போன்ற) பகுதிகளில் அரச ஆதரவுக் கூட்டத்தினரால் மணல் கங்குகரையின்றி அகழப்படுவதால், பெரும் பகுதி உவராக மாறிவருகிறது.

*மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகள் பலவற்றிலும், அவர்களின் மிகப் பலருக்கு நிரந்தர வீடுகள் இன்னும் இல்லை. மலசலகூட வசதி, குடிதண்ணீர் வசதி, வைத்தியசாலை வசதி, சீரான வீதிகள் என்பன கிட்டவும் எட்டாத நிலை.

*போரினால் விதவைகளாகிவிட்ட பெண்கள் தங்கள் குடும்பத்தைப் பராமரிக்க இயலாமல், பலவகைப்பட்ட இல்லாமைகளையும், இடுக்கண்களையும் எதிர்கொண்டு மிகவும் கஷ்டமுறுகிறார்கள். வாழ்க்கையின் ஓரத்துக்கே தள்ளப்படுகிறார்கள்.

*சட்ட விரோத மரஅழிப்பு கேட்பார் இன்றித் தொடர்கிறது. வெளிமாவட்டங்களிலிருந்து வருவோர் அதிகாரப் பிரிவினரின் உடந்தையோடு ஓங்கிப் பருத்த பெரு மரங்களைத் தறித்துச் செல்கிறார்கள்.

-இது தொடர்ந்தால் யாழ்ப்பாணம் போன்று, வன்னியிலும் மழை நீரும் அதன் நிலத்தடி நீரும் குன்றும் அபாயம் மிகநெருங்கி வரும்.

*கிரவல் மண்கொண்டு வீதிகள் அமைக்கப்படுவதால் மக்கள் சுவாசத் தொற்றுகள், மிகக் குறிப்பாக மாணவர்கள் சுவாசம் சம்பந்தப்பட்ட தொற்று நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

*மாந்தை கிழக்குப் போன்ற பகுதிகளில் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றன.

*அவற்றுக்கும் மேலதிகமாக, கடத்தல்களும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் வன்னிப் பிரதேசத்தில் தலைதூக்கத் தொடங்கியுள்ளன.

-கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன், மூன்றாம் வீதியைச் சேர்ந்த மாணவன் (14 வயதான விமலநாதன் சயிதன்) கடந்த 15 ஆம் திகதி தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற பின்னர் வீடு திருப்பவில்லை. அவரின் பெற்றோர் கிளிநொச்சி செயலகத்தில் இயங்கும் சிறுவர் நன்னடத்தை அலுவலகம், பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்துள்ளனர் என்பது செய்தி.

இதன் பின்னனி குறித்த முழுமையான விவரங்கள், உத்தியோக பூர்வ விவரங்கள் இப்பத்தி எழுதப்படும் வரை கிடைக்கவில்லை.

முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதியில் வீட்டில் குடும்பத்தினருடன் தங்கியிருந்த ஒருவர், இனம்தெரியாத ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமுற்றுள்ளார் என்பது மேலே கூறப்பட்ட சம்பவத்துடன் அருகருகே வைத்து நோக்கப்பட வேண்டியதாகும்.

-சட்டம் ஒழுங்கு முழு அளவில் நிலை நாட்டப்பட்டுள்ளதாக அரச தரப்பு பெருமை பேசும் வன்னி மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சியில் நடைபெற்றது ஆள் கடத்தலாக இருப்பின், அரசு அதனைத் தனது வழமையான பாதுகாப்புத் துறை தந்திரோபாய உத்திகளைக் கொண்டு, வேறு வர்ணங்களைப் பூசும் என்று எதிர்பார்க்கலாம். எவ்வாறெனினும் அரசு சொல்வதற்கும் நிகழ்வின் உண்மைத்துவத்துக்கும் வித்தியாசம் - வேறுபாடு - இருப்பினும், வன்னிப் பகுதியில் சட்டம் ஒழுங்கு குலைகிறது என்று கொள்ளலாம்.

வடபகுதியில் அரசு ஆயுதக் கலாசாரத்தை முற்றாக ஒடுக்கி விட்டது; பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி விட்டது என்று அரசு கூறிவரும் வேளையில், பெரும் எடுப்பில் பிரசாரம் செய்து பெருமை பேசி வரும் போது, மேற்கண்ட இரண்டு சம்பவங்களுக்கும் அரசு என்ன காரணம் கற்பிக்கப் போகிறது. பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஆகமொத்தத்தில்-

அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் சம்பவங்கள் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று வன்னி மக்களுக்குச் சொன்னாலும் ஆச்சரியப்பட ஒன்றமில்லை.

இது, ''பாட்டும் நானே பாவமும் நானே'' என்று வர்ணிக்கக் கூடிய நிறைவேற்று அதிகாரத்தின் தன்மை என்று மக்கள் தமக்குத் தாமே சமாதானம் கூறிக்கொள்ள நேரிடலாம்? எதற்கும் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# இலங்கையில் அமெரிக்காவுக்கு காணிகள் வாழைத்தோட்ட செய்கைக்கு தாரைவார்ப்பு

### மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச விசனம்

அமெரிக்காவின் சி.ஐ.சி. எனப்படும் நிறுவனத்திற்கு வாழைத் தோட்ட செய்கைக்காக 10 ஆயிரம் ஏக்கர் வரையான காணியை இலங்கை அரசு வழங்கியுள்ளது.

''இலங்கையிலுள்ள காணிகள் அமெரிக்காவுக்கு இலங்கை அரசால் தாரை வார்த்துக்கொடுக்கப்பட்டுள்ளன'' என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாலமுனை பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களின் பிரச்சினையாக காணிப் பிரச்சினை உள்ளது. கிழக்கு மாகாணத்திலும் கூட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் காணிப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர்.

**இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களின் பிரச்சினையாக காணிப் பிரச்சினை உள்ளது. கிழக்கு மாகாணத்திலும் கூட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் காணிப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர்.**

இந்த நிலையில்தான் இந்த அரசு வெளிநாடுகளுக்கு காணிகளை வழங்கியுள்ளது. அமெரிக்காவின் சி.ஐ.சி. எனப்படும் நிறுவனத்திற்கு வாழைத்தோட்ட செய்கைக்காக 10 ஆயிரம் ஏக்கர் காணிகளை வழங்கியுள்ளது. இந்த காணிகளில் செய்யப்படும் வாழைப்பழங்களைக்கூட இந்த நாட்டு மக்களால் சாப்பிடமுடியவில்லை. அதையும் கூட வெளிநாடுகளுக்கே அனுப்புகின்றனர்.

இதேபோன்று பல காணிகள் அமெரிக்காவுக்கு இந்த அரசால் தாரை வார்த்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களும் வரிப்பணம் செலுத்துகின்றனர் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் ஒரு புறம் பொருளாதாரப் பிரச்சினை மற்றொரு புறம் இளைஞர் யுவதிகளின் பிரச்சினைகளாகும். இளைஞர்கள் இன்று போதைப் பொருள்களுக்கு அடிமையாகி சமூகச் சீரழிவுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். யுவதிகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதும் இடம்பெற்று வருகின்றன.

இன்று நீதிமன்றத்துக்கே கற்கள் வீசப்படுகின்றன. நீதித்துறை கூட மலினப்படுத்தப்படும் அளவுக்கு இந்த நாட்டு அரசு செயற்படுகின்றது.

இதனால் சட்டத்தரணிகளும் வீதிகளில் இறங்கி போராடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. பொலிஸாருக்கு கூட அரசியல் தலையீடுகள் இன்றி சுதந்திரமாக செயற்பட முடியாத நிலைமை உள்ளது.

இன்று இந்த நாட்டிலுள்ள புத்திஜீவிகள் விவசாயிகள், மின்சார சபை ஊழியர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், அதன் பேராசிரியர்கள், சுகாதாரத் துறையினர் அனைவருமே வீதிகளில் இறங்கி இந்த அரசுக்கு எதிராகப் போராடுகின்ற ஒரு நிலையை பார்க்கின்றோம்.- என்று தெரிவித்தார். (ம)

### ஆஸ்திரேலிய தஞ்சம் கோரிச்சென்ற பயணிகளுடன்

# இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் தத்தளித்த படகு மீட்பு

கொழும்பு, ஓக.19

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோரும் நோக்கில் பயணித்த அகதிப் படகு ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த நிலையில் அப்படகிலிருந்த பாதிக்கப்பட்ட அகதிகளை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

நீர்கொழும்பிலிருந்து இந்த படகு ஆஸ்திரேலியா நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளது. சர்வதேச கடற்பரப்பில் வைத்து குறித்த படகின் இயந்திரம் தொழில்நுட்பக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் சுமார் 38 பேர் பயணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் இந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இதனால் உணவு குடிதண்ணீர் வசதியின்றி படகுப் பயணிகள் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

படகில் தத்தளித்துக் கொண்டிருந்த எட்டுப் பேர் வேறு படகு ஒன்றில் ஏறிச் சென்றுள்ளனர்.

படகு விபத்துக்குள்ளானமை தொடர்பில், பயணத்தை ஒழுங்கு செய்த நீர்கொழும்பு வர்த்தகர் ஒருவருக்கு தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, படகில் பயணித்தவர்களை மீட்பதற்காக மேலுமொரு படகு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காப்பாற்றப்பட்ட படகில் 19 தமிழர்களும், 11 சிங்களவர்களும் இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தகரின் படகு சென்றடைவதற்கு முன்னதாக கடற்படையினர் குறித்த படகில் தத்தளித்துக் கொண்டிருந்த அகதிகளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (ம)

## பல்வேறு தேவைகளுக்கு காடுகள் தீ மூட்டி அழிப்பு

வேட்டைக்காகவும், சட்டவிரோத சேனைப் பயிர் செய்கைகளுக்காகவும் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காடுகள் தீ மூட்டப்பட்டு எரிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

காடுகளுக்குத் தீ மூட்டுவோரைக் கையும் மெய்யுமாக பிடிப்பது முடியாத காரியமாக உள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடக பணிப்பாளர் சரத் லால் குமார கூறியுள்ளார். இதுவரையில் பதுளையில் இருவரும் மொனராகலையில் ஒருவரும் மட்டும் கைதாகி உள்ளனர் என அவர் கூறினார்.

எமது காடுகளை மாத்திரமன்றி அங்கு காணப்படும் நீரூற்றுக்கள், அருவிகளையும் இதனால் இழக்க வேண்டியுள்ளது. தீயை அணைக்க பயன்படுத்தப்படும் வளங்களும் பெரும் விரயமாகும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ம)

# தமிழக மீனவர்களை 167 தடவைகள் இலங்கைக் கடற்படை தாக்கியது

### தமிழக அரசு தகவல்

கொழும்பு, ஓக.19

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட 167 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

1991 ஆம் ஆண்டுக்கும் 2011 ஆம் ஆண்டுக்கும் இடையில் இந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தமிழக அரசு சென்னை மேல் நீதி மன்றத்தில் தெரிவித்தது.

தமிழகத்தின் சட்டமா அதிபர் நவநீதக்கிருஸ்ணன் இந்த தகவல்களை வெளியிட்டார். இதே வேளை, இந்த சம்பவங்களின் போது தமிழக மீனவர்கள் இந்திய கடற்பரப்பில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவங்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தக் காலப் பகுதியில் 746 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர் என்றும் நவநீதக்கிருஸ்ணன் கூறினார்.

தமிழக மீனவர்களுக்கு இந்திய கடற்படையினர் உரிய பாதுகாப்பை வழங்குவதில்லை என்று குற்றம் சுமத்தி தொடரப்பட்ட வழக்கு விசாரணையின்போது இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

இந்த நிலையில், இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய தொழில் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்று தமிழக அரசு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது. (ம)

## வீடு வாடகைக்கு

யாழ்.நகர மத்தியிலிருந்து ஒரு கிலோ மீற்றருக்குள் 3500 சதுர அடி மேல் மாடி கொண்ட வீடு வாடகைக்குண்டு. 10 அறைகள் வாகனத் தரிப்பிட வசதிகள் உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0777813646 (21932) (2-6-7)

## வீடு அறைகள் வாடகைக்கு

யாழ்.நகரில் சகல வசதிகளுடன் வீடு/ அறைகள் வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-
077 3441329 (21935) (2-6-7)


## பல்கலை மாணவருக்கான கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்குப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவநந்தன் அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற பணிப் புறக்கணிப்புகளால் பாதிக்கப்பட்டுள்ள, மாணவர்களின் கல்வி நிலை தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுடன் கலந்துரையாடி முடிவுகள் எடுக்கப்பட உள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (16)


## க.பொ.த உயர்தர பரீட்சைக்குப் பின் 2013 ஜனவரி aat SRI LANKA பரீட்சைக்கு பதிவு செய்யுங்கள்




**க.பொ.த. (சா/த) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியெய்திய மற்றும் தற்பொழுது க.பொ.த. (உ/த) கற்றுக் கொண்டிருக்கும் எந்தவொரு மாணவரும் பதிவுசெய்து கொள்ள முடியும்.**

AAT பரீட்சைகள்

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பரீட்சைகள் நடைபெறும்.
- ஒவ்வொரு பாடமாகவும் பரீட்சைகளுக்குத் தோற்றலாம்.
- மூன்று மட்டங்களைக் கொண்டது. ஆரம்பநிலை (Foundation) மற்றும் இடைநிலை (Intermediate) பாடங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே தடவையில் விண்ணப்பித்து தோற்ற முடியும்.
- பரீட்சை நிலையங்கள் கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, குருநாகல், கம்பஹா, அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் அமையும்.

**AAT இறுதிமட்ட பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மற்றைய தொழில்சார் கணக்கியல் நிறுவனங்களாலும் மற்றும் பல்கலைக்கழகங்களாலும் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கான வாய்ப்புகள்**

- இலங்கைப் பட்டயக்கணக்கறிஞர் நிறுவகத்தின் **CA - Sri Lanka CAB-I** பரீட்சையிலிருந்து பூரண விலக்களிப்பு.
- ஆரம்ப நிலை **CIMA(UK)**, ஆரம்ப நிலையின் 03 பாடங்கள் - **ACCA(UK)** மற்றும் **ICMA(SL)** ஆரம்ப நிலை
- இலங்கை மற்றும் சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் வர்த்தகம், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், சட்டம் மற்றும் கணினித்துறைகளில் பட்டங்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள்.

**விண்ணப்பிக்கும் முறை**

பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கிய மாணவர் வழிகாட்டியினை திங்கள் முதல் சனி வரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையான காலப்பகுதியில் AAT அல்லது பிரதேச தகவல் நிலையங்களில் தொடர்புகளுக்கு: 011-2559669

(ƒ/2273) (2-6-7)

aat SRI LANKA
**Association of Accounting Technicians of Sri Lanka**
AAT Centre, No. 540, Thimbirigasyaya Road (Facing Elvitigala Mw), Narahenpita, Colombo 05.
Tel : 011 - 2559669 / 011 - 2595857, Email : aatslreg@sltnet.lk, Web : www.aatsl.lk

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட Doctor மணமகனுக்கு, யாழில் 26 வயதுக்கு உட்பட்ட அன்பான மணமகள் தேவை.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க
T.P: 0773229858
Email: greenheart26@hotmail.com
(ƒ/2287) (2-6-7)

## தேவை

வேலை?
வேலை?
வேலை வேண்டுமா?
உங்கள் தகைமைக்கு ஏற்ற வேலை தர நாங்கள் காத்திருக்கின்றோம். பயிற்சி அவசியமாயின் பயிற்சியுடன் வேலை தருகின்றோம். குறைந்தது 15,000/= த்தில் இருந்து.....
தொடர்பு கொள்ளுங்கள்
0779994807 / 0114986066
(ƒ/2286) (2-6-7)

# சிவஸ்ரீ.க.குகதாஸக்குருக்கள் அவர்களின்

(கிரியாகலாபமணி, சிவாகம கிரியாஜோதி, பிரதிஷ்டாரெத்தினம், முத்தமிழ்க் குருமணி, சிவாகம ஞானபானு சிவாகமசாகரம், பிரதிஷ்டா கலாசாகரம், கிரியாசரோமணி, குமார தந்திர வித்துவ ஜோதி)

# 70 ஆவது அகவை வாழ்த்துக்கள்



சிவஸ்ரீ.க.குகதாஸக்குருக்கள், T.P.0214922579, 0778445527

### பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துக்கள்



புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று முருகமூர்த்தி தேவஸ்தான பிரதமகுருவாகவும் 12 ஆம் வட்டாரத்தைத் தனது வதிவிடமாகவும் தற்போது ஆனைக்கோட்டையில் வசிப்பவருமாகிய சிவஸ்ரீ க.குகதாஸக்குருக்கள் அகவை எழுபதில் காலடிவைப்பதில் பெரும் ஆனந்தமகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது ஊர் மக்களுக்கு வாழ், வளம் வேண்டும் என்றும் வறுமை அனைத்தும் விலகவேண்டும் என மனமொழி அமைத்துத் தினம் தினம் முருகமூர்த்தியைத் துதிப்பவர்க்கு தப்பாது திருவருள் கிடைக்க வழிகாட்டியாக இருந்து இறைவனை அடைய வழிகாட்டினார். அவர் 70 ஆவது அகவையுடன் மகிழ்ச்சியுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

"தேசமானிய" "தேசபந்து"லயன் கலாநிதி (சமூக சோதி) சு. நித்தியானந்தன் (JP) சங்கர மூர்த்தி தலைவர், புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி ஆலயம் தலைவர், வட மாகாண இந்து மன்ற இணைப்பாளர், சமாதான நீதிவான்களின் மனித உரிமை அமைப்பு

### நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்

புங்குடுதீவு கிழக்கு, 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது ஆனைக்கோட்டையில் வசிப்பவருமாகிய எமது ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ கணேஸ குகதாஸக்குருக்கள் அகவை எழுபதில் கால் பதிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். எமது ஆலயத்தில் பிரதம குருவாக இருந்து எங்கள் குல தெய்வத்தின் ஆசியைப் பெற்றுத் தருவதால் தெய்வத்துடன் இரண்டறக் கலந்து எமது ஊர் மக்களும், நாங்களும் வாழ்வதற்கு நல்வழிகாட்டுவதற்கு உறுதுணையாக நின்று நெறிப்படுத்தினார். அவரை நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

சி.திருலிங்கநாதன், உப தலைவர், புங்குடுதீவு கிழக்கு, தல்லையபற்று முருகமூர்த்தி தேவஸ்தானம்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

புங்குடுதீவு கிழக்கு, 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது ஆனைக்கோட்டையில் வசிப்பவருமாகிய எமது ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ கணேஸ குகதாஸக்குருக்கள் அகவை எழுபதில் கால் பதிப்பதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆலய தர்மகர்த்தாவும் நிர்வாகசபையினரும், புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தானம். புங்குடுதீவு 12

### அகவை எழுபதை வாழ்த்துகின்றோம்

புங்குடுதீவு கிழக்கு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது ஆனைக்கோட்டையில் வசிப்பவருமாகிய எமது ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.கணேஸகுகதாஸக்குருக்கள் அகவை எழுபதில் காலடி வைப்பதில் ஆனந்தம் அடைகின்றோம். சொல்லிலேயே சகல வினைகளும் சிதையும் சித்திகள் எட்டும் கைகிட்டும் அனைவருக்கும் கைகொடுக்கும் நாயகனாக எமது மக்களுக்கு இறைவனுடன் இரண்டறக்கலப்பதற்கு உறுதுணையாக இருந்து செயலாற்றித் தங்களது எழுபதாவது அகவையைச் சிறப்பாகக் கொண்டாட வாழ்த்துகின்றோம்.

- ஓங்கார நாதன் கஜேந்திரன்.
செயலாளர்.

### அகவை எழுபதில் மகிழ்ச்சியுடன் வாழ வாழ்த்துகின்றோம்

புங்குடுதீவு கிழக்கு, 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்போது ஆனைக்கோட்டையில் வசிப்பவரும் ஆகிய எமது ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.கணேஸ குகதாஸக்குருக்கள் அகவை எழுபதில் காலடி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். அவரது குடும்பத்துடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம். அவரின் தொண்டு அளப்பரியது. குறைந்த காலத்தில் நிறைந்த பணியை ஆற்றி, சிறப்பான செயலாற்றி இன்று எழுபதாவது அகவையில் மகிழ்ச்சியுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

- தெய்வேந்திரன் வேழவேந்தன்.
பொருளாளர்.

(ƒ/2518)(2-6-7)

## இலுப்பைக்குளம் கிராமிய வைத்தியசாலை பணிகள் அரைகுறை; நோயாளர் அவதி

வவுனியா, ஓக.19
இரணை இலுப்பைக் குளம் பகுதி மக்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட கிராமிய வைத்தியசாலை இதுவரை திறக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மடுப் பிரதேச செயலர்பிரிவில் அமைந்துள்ள இரணை இலுப்பைக் குளம் பகுதியிலுள்ள மக்களின் நலன் கருதிச் சுமார் 75 லட்சம் ரூபா செலவில் புதிய வைத்தியசாலை அமைக்கப்பட்ட நிலையில் வேலைகளும் முடிவடையாது அரைகுறையாக உள்ளது.

இந்தப் பகுதியிலுள்ள மக்கள் தமது வைத்திய சேவைகளுக்காக 30 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள வவுனியா நகர வைத்திய சாலைக்கே செல்ல வேண்டியுள்ளது.

இந்தப் பகுதிக்கான போக்குவரத்துச் சேவைகள் மட்டுப் படுத்தப்பட்டுள்ள நிலையில் ஒரு நாளைக்கு காலையும், மாலையும் என இரு சேவைகளே நடைபெற்று வருகின்றன.

இந்த போக்குவரத்துச் சீரின்மை காரணமாக ஏனைய வாகனங்களில் பெருமளவு பணத்தைச் செலவு செய்தே மருத்துவத் தேவை உட்பட அனைத்து தேவைகளுக்கும் போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.



வறுமைக்கோட்டின் கீழ் வசித்து வரும் இந்தப் பகுதி மக்கள் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள வைத்தியசாலையின் வேலைகள் கடந்த வருடத்துடன் நிறைவு செய்யப்பட வேண்டியவை. ஆனால் பல ஒப்பந்தகாரர்களிடம் இந்த வேலைத்திட்டம் கைமாறியுள்ள நிலையில் குறிப்பிட்ட காலத்தின் பின்பும் வேலைகள் நிறைவடையாது உள்ளன.

இதேவேளை இந்த வைத்தியசாலை இந்தப் பகுதியில் அமைக்க முற்பட்ட போது வேறொரு பகுதியில் இதனை அமைப்பதற்கு அமைச்சர் ஒருவர் முயற்சிகள் மேற்கொண்டிருந்த நிலையில் மக்களின் முயற்சியால் அது கைவிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே இந்த வைத்தியசாலையின் பணிகள் இழுபட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்களின் நலன் கருதி இந்த வைத்தியசாலையை உடன் திறப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ம-400)

### வறட்சியால் பயிரழிவு

அக்கராயன்,ஓக.19
பூநகரி கரிசாலை நாக பாடுவான் குளத்தின் கீழ் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் சுமார் 50 ஏக்கர்சிறுபோக நெற்செய்கை வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தின் கீழ் உரிய காலத்தில் விதைப்புச் செய்தவர்கள் தமது அறுவடையை நிறைவு செய்துள்ள நிலையில் பிந்திய விதைப்புக்களில் ஈடுபட்ட விவசாயிகளின் 50 ஏக்கர்கள் வகையான நெற்பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. (க-18)

### பொறி வெடிக்குள் சிக்கியவருக்கு காலில் படுகாயம்

கிளிநொச்சி,ஓக.19
பன்றிக்கு வைத்த பொறி வெடியில் சிக்குண்ட இளைஞர்ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, பெரிய பரந்தன் பகுதியில் நடந்த இந்தச் சம்பவத்தில் குறித்த இளைஞரின் வலது கால் பாதிக்கப்பட்டது.

பெரிய பரந்தன் வீதி கிளிநொச்சியை சேர்ந்த 19 வயதான கே.ஆனந்தரூபன் (வயது19) என்பவரே காலில் படுகாயமடைந்தவராவார்.

(க-16-6)

### வறட்சியால் விளையும் உப்பை மக்கள் பாவிக்கத் தடை

வறட்சி காரணமாக மன்னார் கடற்கரைப் பகுதிகளில் பெரும் அளவில் உப்பு விளைந்து காணப்படுகிறது.

இந்த உப்பை மக்கள் பாவனைக்குட்படுத்த வேண்டாம் என சுகாதார திணைக்கள அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வறட்சியான கால நிலை காரணமாக மன்னாரில் குளங்கள் மற்றும் நீர் நிலைகளில் நீர் வற்றிய நிலையில் காணப்படுகின்றன.

இந்த நிலையில் கடற்கரையோரங்களில் உப்பு பெருமளவு விளைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறித்த உப்பானது சுகாதாரமற்ற முறையில் உள்ளமையால் அதனை பயன்படுத்த வேண்டாம் என்று மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம)

### மாற்றுவழி உருவாக்கக் கோரிக்கை

அக்கராயன், ஓக.19
துணுக்காய், உயிலங்குளம் அணைக்கட்டு வழியான போக்குவரத்துப் பாதையைத் தடைசெய்து மாற்று வழி ஒன்றை உருவாக்குமாறு உயிலங்குளம் மக்கள் துணுக்காய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

போர் காலத்திலும் இடம்பெயர்வு, மீள்குடியமர்வு காலங்களிலும் உயிலங்குளம் அணைக்கட்டு வழியாக போக்குவரத்துகள் இடம் பெற்றது.

தற்போது துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளில் வீதிப் புனரமைப்புகள் வேகமாக இடம்பெறுகின்றன. இந்த நிலையில் உயிலங்குளம் அணைக்கட்டு வழியான போக்குவரத்தை தடைசெய்து மாற்று வழியை உருவாக்குமாறு வேண்டுகை விடுக்கப்பட்டுள்ளன.

துணுக்காய் பிரதேச செயலக கூட்டங்களிலும் இந்த விடயம் தொடர்பாக குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றது. (ம-18)

## 6 ஆயிரம் குடும்பங்களுக்கு வவுனியாவில் குடிதண்ணீர்

வவுனியா, ஓக.19
வவுனியா மாவட்டத்திலுள்ள 4 பிரதேச பிரிவுகளைச் சேர்ந்த 6 ஆயிரம் குடும்பங்களுக்கு வவுனியா மாவட்ட இடர்முகாமைத்துவ பிரிவு குடிதண்ணீர் வசதிகளை செய்து கொடுத்துள்ளது என்று வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜானக ஜெயவர்தனா தெரிவித்தார்.

அதிகமாக வவுனியா மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமப்புற மக்களுக்கு 13 லட்சம் ரூபா செலவில் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் குடிதண்ணீர் வசதியை சிறந்த முறையில் வழங்குவதற்காக 12 தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், பிரதேச செயலகங்களைச் சார்ந்த பிரதேச செயலாளர்களிடம் பிரித்து வழங்கபட்டுள்ளன.

வறட்சியால் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள மக்களுக்கு பவுசர் மூலம் வீடுகளுக்கு குடிதண்ணீர் வழங்க பிரதேச செயலர் மூலம் கிராம சேவகர் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் தற்போது 60 கிராமங்களுக்கு இந்தக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-402-400)

## மண்போட்டு நிரப்பப்படும் பத்தினியார் மகிழங்குளம்

### விவசாயிகள் பாதிக்கப்படும் நிலைமை

வவுனியா, பத்தினியார் மகிழங்குளம் மண்போட்டு நிரப்பப்படுகிறது. இதனால் தாம் விவசாயம் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்படும் நிலைமை உள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியாவில் பல குளங்கள் மண்போட்டு நிரப்பப்பட்டு விவசாயம் செய்ய முடியாத நிலைக்கு இன்று சென்றுள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் தமது வயல் நிலங்களை விற்று தமது ஜீவனோபாயத்தை கொண்டு செல்லவேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்

தற்போது பத்தினியார் மகிழங்குளமும் சிலரால் மண்போட்டு நிரப்பப்பட்டு வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பில் விவசாய திணைக்கள அதிகாரிகள் கண்டுகொள்ளாது உள்ளனர். அவர்களின் பாராமுகமே இன்று பல குளங்கள் அழிவதற்கு காரணமாக அமைந்தது. அந்த நிலை தற்போதும் தொடர்வதால் மிகவும் மோசமான நீர்ப்பற்றாக் குறையை எதிர்காலத்தில் வவுனியா சந்திக்கும் என்பதில் சந்தேகமில்லை. விவசாயிகள் வயல் நிலங்களை முழுமையாக விற்கும் நிலை ஏற்படும்.

இது தொடர்பாக கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி நிர்வாக உத்தியோகத்தரிடம் கேட்ட போது,

இது தொடர்பில் எமக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. எனினும் இது தொடர்பில் கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும் என்று தெரிவித்தார். (ம)

## அடிப்படைத் தேவைகள் இன்றி அவலத்தில் உள்ளனர் மக்கள்


முல்லைத்தீவு, ஓக.19
முல்லைத்தீவு மாவட்ட கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீள் குடியமர்ந்துள்ள மக்கள் அடிப்படைத் தேவைகள் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கருநாட்டுக் கேணி, கொக்கிளாய் கிழக்கு, கொக்குளாய் மேற்கு, கொக்குத் தொடுவாய் வடக்கு, கொக்குத் தொடுவாய் தெற்கு கிராம சேவகர் பிரிவுகளை தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் மீள்குடியமர்ந்துள்ள மக்களே அடிப்படைத் தேவைகள் உரிய வகையில் பூர்த்தி செய்யப்படாத நிலையில் பெரும் அவலத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீடுகள் போதிய வசதியின்றி மலசல கூடங்கள் கிணறுகள் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குளிப்பதற்கும், குடிப்பதற்கும் தண்ணீருக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும், உரிய போக்குவரத்து வசதிகள் ஒழுங்குபடுத்தப்படாமையால் நீண்ட தூரப் பயணங்களுக்குப் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பல தடவைகள் அணுகியபோதும் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்றும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-402)



யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் வவுனியா மாவட்டச் செயலகத்தில் அச்சகம் ஒன்று அமைக்கப்பட்டு வெள்ளிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவால் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ம)

### சட்டவிரோதமாக மாடு வெட்டியோருக்கு மறியல்

கிளிநொச்சி, ஓக.19
கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக மாடு வெட்டிய நால்வரையும் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக மாடு வெட்டிய நான்கு பேரை பூநகரிப் பொலிஸார் கைது செய்து வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர்.

இந்த நிலையில் குறித்த நால்வரையும் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார் நீதிவான்.

(ம-6)

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 78

# ஆழ்ந்த தூக்கத்திற்கு....



தூக்கம் ஒவ்வொரு உயிருக்கும் இன்றியமையாததும், தவிர்க்க முடியாததும் அத்துடன் ஒரு இயற்கையான நிகழ்வும் ஆகும். இது நலமான வாழ்வுக்கும் சுகமான ஆரோக்கியத்துக்கும் அவசியம். ஒருவர் எத்தனை மணி நேரம் படுக்கையில் படுத்து இருக்கிறார் என்பது முக்கியம் அல்ல. எவ்வளவு நேரம் நன்றாக தூங்குகிறார் என்பது தான் முக்கியம். ஆழ்ந்த தூக்கத்தின் பயன்களாக சிலவற்றைக் குறிப்பிடலாம்.

1.பகலில் அதிக வேலை செய்த தசைகள் நரம்புகளுக்கு ஓய்வை அளிக்கிறது.

2.உடலில் அதிக சக்தியை சேமிக்க உதவுகிறது.

3.இரவு நேர உடல் வளர்ச்சி (சுரப்பு நீர்) Growth Hormone அதிகம் சுரப்பதால் குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

4.பல்வேறு நோய்களால் ஏற்படும் கலங்கள் மற்றும் திசுக்கள் மற்றும் இழையங்களில் ஏற்படும் பாதிப்புக்களை பழுது நீக்க உதவுகிறது.

5.எமது முகத் தசைகளுக்கும், தோலுக்கும் ஓய்வளித்து தோலினைச் சுருங்காதவாறு வைத்திருக்கிறது.

6.எமது உடலின் முழுமையான களைப்பைக் குறைக்கின்றது. அத்துடன் பகலில் உடலாலும், மனதாலும் இழக்கும் சக்தியை இரவில் தூக்கத்தில் மீளவும் பெறுவதற்கு உதவுகிறது.

7.பிறக்கும் புதிய நாளின் சோதனைகள், கடமைகளை எதிர்கொள்ள, உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி அளிக்கிறது.

8.எமது உடலின் நோயெதிர்ப்பு சக்தியை ஊக்குவித்து உடலைப் பாதுகாப்பதுடன், இருதய நோய்கள், உயர்குருதி அமுக்கம் போன்ற நோய்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்கும், அவை ஏற்படின் அவற்றை வேகமாகக் குணப்படுத்துவதற்கும் ஆழ்ந்த தூக்கம் உதவுகிறது.

9.மன அழுத்தம் மற்றும் உளம் சார்ந்த நோய்களைக் குணப்படுத்த, ஆழ்ந்த தூக்கம் மிக இன்றியமையாதது.

இது போன்ற பல நன்மைகளை ஆழ்ந்த தூக்கத்தில் இருந்து மனிதன் பெறுகின்றான். தூக்கம் ஒரு மர்ம மாளிகையைப் போன்றது. அதன் வாசல்களைத் திறந்து அதனுள் மறைந்து இருக்கும் இரகசியங் களை விஞ்ஞானிகள் இன்றும் ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள். எனினும் தூக்கத்தை முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை. ஆய்வுகள் இன்னும் முற்றுப்பெறவில்லை என்று கூடக் கூறலாம்.

**ஒருவர் ஆழ்ந்த தூக்கத்தைப் பெறுவதற்கு சில வழிகள்**

1.அவரவர் வசதிக்கேற்ப முதலில் தூங்கும் இடத்தை தூக்கம் வருவதற்கு ஏற்றதான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற மாதிரி அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க முயலுங்கள். பாய் முதற் கொண்டு பெற்சீற் தலையணைக் கவர் வரை அடிக்கடி சுத்தம் செய்து மாற்றிக் கொள்ளுங்கள்.

2.கணினி, தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்ற எலக்ரோனிப் பொருள்களை படுக்கை அறையில் வைத்திருப்பதைத் தவிருங்கள். இவற்றில் இருந்து வெளிப்படும் மின்காந்த அலைகள் உங்கள் தூக்கத்தைக் கலைக்கலாம்.

3.நன்றாக தூங்குவதற்கு தினமும் செய்யும் உடற்பயிற்சி உதவும். காலை நேர உடற்பயிற்சி நல்லது. அத்துடன் தூங்கப் போவதற்கு முன்பு செய்யும் லேசான உடற்பயிற்சி தூக்கத்தை வரவழைக்கும்.

4.ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு தூங்கப் போகும் பழக்கம் வேண்டும். நேரத்தை மாற்றி மாற்றி கண்ட நேரத்தில் தூங்குவது தூக்கத்தைக் கெடுக்கும்.

5. தூக்கத்தை கெடுக்கக் கூடிய மது, கோப்பி, கோலா பானங்கள், சிகரெட் போன்றவற்றைத் தூங்கப்போகும் நேரத்தில் பாவிப்பதைத் தவிருங்கள்.

6.வயிறு காலியாக இருந்தாலும் தூக்கம் வராது. மிதமான இரவு உணவு, காரமற்ற எண்ணெய் அற்ற உணவு சிறந்தது.

7.படுக்கப் போகும் முன்பு ஒரு கோப்பை பால் அருந்துவது நல்லது. பாலில் தூக்கத்தை தூண்டும் பொருள் 'டிரிப்டோபான்' இருக்கிறது. எனினும் ஆஸ்துமா, சுவாசக் குழாய் அழற்சி, கொலஸ்ரோல் சம்பந்தமான நோயுள்ளவர்கள் வைத்திய ஆலோசனையுடன் அருந்தலாம்.

8.உங்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், கொலஸ்டிரால் போன்ற நோய்கள் இருப்பினும் அவற்றைக் கட்டுப்பாட்டிலும் சீராக வைத்திருப்பதன் மூலமும் மருந்து உணவுகளை ஒழுங்காக எடுப்பதன் மூலமும், நல்ல தூக்கத்தை பெறமுடியும்.

9.மன அழுத்தம், உளம் சார்ந்த நோய்கள், பாதிப்புகள் இருப்பின் அதற்குரிய மருந்துகளை சீராக எடுத்தலும், வைத்திய ஆலோசனையை சீராகப் பெறுதலும், வைத்தியரிடம் உங்களுக்கு இருக்கும் பாதிப்புகளை ஒளிவு மறைவு இன்றி கூறுவதன் மூலம் சரியான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

10.படுக்கப்போவதற்கு முன்பு வெது வெதுப்பான தண்ணீரில் குளித்தல், மெல்லியஇசையை ரசித்தபடி படுப்பது, புத்தகங்கள் படிப்பது, தியானம், மூச்சுப் பயிற்ச்சிகளை செய்யலாம்.

11.கதவு, யன்னல்களின் ஊடாக வரும் இயற்கையான புத்தம் புதிய காற்றுக்கு எதுவும் இணையாகாது. எனவே உங்கள் படுக்கை அறைக்கு முடியுமானால் இயற்கையான காற்று கிடைக்கக் கூடியதாகச் செய் யுங்கள்அத்துடன் குறைவான வெப்பத்தை உமிழும் மின்விளக்குகளைப் பொருத்துங்கள் இவை குளிர்ச்சியாக இருப்பதோடு இயற்கை வெளிச் சத்தை ஒத்ததாக இருக்கும்.

12. உங்கள் படுக்கை அறையின் படுக்கை விரிப்புகள், பெற்சீற், கதவு, ஜன்னல் சீலைகள், மற்றும் படுக்கை அறையின் சுவர் போன்றவற்றின் நிறமானது உங்கள் கண்களுக்கும் மனதிற்கும் இதமளிக்கக்கூடிய அடர்த்தி குறைந்த நீலம், வயலட், பச்சை போன்ற மெல்லிய நிறங்களாக இருப்பது நல்லது.

13. தூங்கும்போது தலைக்கு வைத்திருக்கும் தலையணையானது தலை மற்றும் கழுத்தினை சரியாகத் தாங்கக் கூடியதாக மெல்லிய கச்சிதமான 4 அங்குலத்திற்கு (உயரம்) மேற்படாத தலையணையை தேவைப்படின் உபயோகியுங்கள், மற்றும் இறுக்கம் இல்லாத உடைகளை அணிதல், அண்டும் பொருள்களை (திறப்பு, பேஸ்) அணிந்திருக்கும் உடையில் வைத்தித்தல் உறுத்தல் ஏற்படும் இவற்றைத் தவிர்ப்பது நல்லது.

14 உங்கள் படுக்கை அறையில் கொசு, ஈ, கரப்பான்பூச்சி, எறும்பு, மூட்டைப்பூச்சி போன்றவற்றிற்கு மருந்து தெளிப்பதன் மூலம் இவற்றின் உறுத்தல்களை தவிர்க்கலாம். தேவைப்படின் நுளம்பு வலை பாவிக்கலாம்.

15 ஒளி உமிழும் மணி அடிக்கும் சுவர்க்கடிகாரம், சுற்றுப்புறத்தில் இருக்கும் ஒலி, மாசு அறை, புகை, தூசு ஆகியன உட்செல்லுவதை குறைக்கக்கூடியதாக படுக்கை அறை அமைதல் நல்லது

16. குறட்டை விடுபவர்கள் ஆழ்ந்த தூக்கத்துக்குச் செல்வது சிரமமாதலால் குறட்டையைக் குறைப்பதற்குரிய வழிமுறைகளைக் கையாள வேண்டும், உதார ணம் அதீத பருமன் உடையவர்கள் இடது புறம் அல்லது பக்கவாட்டில் படுத்தல் வேண்டும், மல்லாந்து படுத்தலை தவிர்த்தல்.

ச. சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்
யாழ்/ போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# தலைமுடி உதிர்தலைக் குறைக்க என்ன செய்யவேண்டும்

ரி. கமலா, நெல்லியடி

எனக்கு வயது 25, பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுகொண்டிருக்கிறேன் . சிலகாலமாக தலைவாரும் போது அதிகளவான முடியை சீப்பில் அவதானிக்கிறேன் . இதற்காக நான் என்ன சிகிச்சை பெறலாம் ? ஆலோசனை எங்கு பெறலாம்?

முடிஉதிர்வானது தற்போது பொதுவாக இளவயதினரிடையே பெருமளவில் காணப்படும் பிரச்சினையாக உள்ளது. சாதாரணமாக வளர்ந்த ஒருவரின் தலையில் 100000 - 150000 முடிகள் உள்ளன. அவற்றில் நாள் ஒன்றிற்கு 100-150முடிகள்இழக்கப்படுகின்றன.90 வீதம் ஆன முடி வளரக்கூடியன. ஆகையால் தலை வாரும் போது சீப்பில் சிறிதளவான முடி காணப்படின் அது சாதாரணமானது. முடியின் வளர்ச்சியை பல்வேறுவகையான காரணிகள் உதாரணமாக வயதுதல்,நோய்நிலைமை என்பன பாதிக்கின்றன. இதன் போது முடி மெல்லியதாகி உடைந்து உதிர்வதுடன் வளரும் தன்மையும் குறைவடைகிறது.

✱ பரம்பரையாக வரும் வழுக்கையானது குடும்பத்து உறவினர்களிடையே காணப்படும். இதில் ஓமோன்களும், பரம்பரைக்காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன. இதற்குரிய சரியான காரணம் கண்டறியப்படவில்லை. இது இருபாலாரிலும் ஏற்படுகிறது. ஆனாலும் பெருமளவில் ஆண்களே பாதிப்படைகின்றனர். ஆண்களில் ஏற்படும் வழ்க்கை பொதுவாக ஆண் சகோதரர்களிடையே காணப்படும். ஆரம்ப இருபது வயதுகளில் ஏற்படுகிறது. இதற்கு நீளமான முடியோ, தொப்பி அணிதலோ, அல்லது ஷம்போ வகைகள் பாவித்தலோ காரணமாகாது. அதே போல் தலைக்கு எண்ணெயிட்டு மசாஜ் செய்வதன் மூலம் இதனைத் தடுக்கமுடியாது. இவ்வகை வழுக்கை ஏற்படும் போது கூடுதலான முடி இழக்கப்படுதல் அவதானிக்கப்படுவதில்லை. ஆனாலும் சாதாரணமாக எல்லா ஆண்களினதும் முன் நெற்றிப்பகுதில் M வடிவில் முடிவரிசை மாற்றப்படுகிறது. இதன்போது முடிஉதிர்வு அவதானிக்கப்படுவதில்லை. இது வழமையான மாறுதலாகும்.

✱ இதே போல் பெண்களிலும் ஆரம்ப இருபதுகளில் முடி மென்மையாகி உதிர ஆரம்பிக்கிறது. இதன்போது பலவருடங்களின் பின்னரே முடி இழந்தமை அவதானிக்கப்படுகிறது . சாதாரணமாக எல்லாப் பெண்களிலும் 30 வயதிற்குப் பின்னர் முடி மென்மையாகி உதிர்வடைகிறது. இது சாதாரணமானது. ஆனால் பெரும்பாலான பெண்களில் முடிஉதிர்வுக்கு ஒரு அடிப்படைக் காரணம் காணப்படும். உதாரணமாக குருதிச் சோகை, தைரொயிட் இந்தகாரணங்கள் சிகிச்சை அளிக்கப்படக்கூடியவை. இதைவிட முடியை இறுக்கமாக அழுத்திக் கட்டுவதன் மூலமும் உதாரணமாக இறுக்கமாக தலையலங்காரம் செய்தல், இறுக்கமான கிளிப்வகைகள், றப்பர்கள் அணிதலால் முடிஇழக்கப்படுகிறது. பெண்களில் கர்ப்பமாகும் போது , பூப்படையும் போது, மாதவிடாய் நிறுத்தத்தின் போது முடிஉதிர்வு ஏற்படுகிறது. இது மீளக்கூடியது.

✱ சடுதியாக திட்டுத்திட்டாக முடி இழப்பு ஏற்படுவது ஒருவகை நோய் நிலைமையாகும். இதை அலோபீசியா அறியேற்றா (.Allopecia Areate.) என்கிறோம். இது எமது உடலில் மயிர்கலன்களுக்கு எதிராக நோய் எதிர்ப்புக் காரணி எமது உடலாலேயே சுரக்கப்படுவதால் ஏற்படுகிறது இதன்போது தலையில் முடி உதிர்வு சிறியபகுதியில் ஏற்படலாம், முற்றாக ஏற்படலாம். வேறு இடங்களிலும் ஏற்படலாம். உதாரணமாக கண் இமை இவற்றில் பெரும்பாலானவை மீள வளரக்கூடியன

✱தலையில் பொடுகுத்தன்மையினால் முடி இழப்பு ஏற்படுகிறது. இது ஒருவகை பங்கசினால் ஏற்படுத்தப்படும் நோயாகும். இதன் போது தலையில் அரிப்புத்தன்மை, துர்நாற்றம் ஏற்படுகிறது. இது ஒருவரின் தொப்பியை, தலைக்கவசத்தை, சீப்பை பாவிப்பதன் மூலம் இன்னொருவருக்கு தொற்றக்கூடியது.

✱சில வகையான மருந்து மாத்திரைகளும் முடி உதிர்வை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக புற்றுநோய்க்கு கொடுக்கப்படும் மருந்துகள், உடலின் நிர்ப்பீடனத்தன்மையை குறைக்கப் பயன்படும் மருந்துகள், சிலவகை யான கருத்தடை மாத்திரைகள். மாத்திரைகளை வைத்தியநிபுணரின் ஆலாசனையின்றி பாவிப்பதை தவிருங்கள். சில வகையான நோய் நிலைமைகளின் போது (உதாரணமாக காய்ச்சல், குருதிச்சோகை ) சடுதியாக உடல் நிறையை குறைக்கும் போது (உணவுக்கட்டுப் பாடு) பெரிய நோய்களின் போது, சத்திரசிகிச்சையின் போது, குடும்பத்தில் ஏற்படும் இழப்புக்கள், மன அழுத்தங்களின் போதும் முடிஇழப்பு ஏற்படுகிறது.

முடிஉதிர்வை தவிர்ப்பதற்கு உங்கள் தலைமுடியை இயற்கையான நிறத்துடனும், இயற்கைத்தன்மையுடனும் இருக்கவிடுங்கள் அதாவது தலை உலர்த்திகள், சுருளாக்கிகள், தலைச்சாயம் பாவித்தல், முடியைநேராக்குதல், அழகுக்காக இரசாயனங்களைப் பாவித்தல் போன்ற அழுத்தங்களை முடிக்கு வழங்குவதை தவிருங்கள். இவை முடியை மெல்லியதாக்கி, காயச்செய்து மெலிதாக்கி உடைக்கின்றன .

முடிஉதிர்வை நிவர்த்தி செய்வதற்காகவென பலவகை விற்றமின்கள், மாத்திரைகள், ஹண்டிசனர் ஸம்போக்கள், பல்வேறுபட்ட மருந்து வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பொருள்கள் தீங்கானவையல்ல . ஆனால் இதன் நன்மைகள் நிரூபிக்கப்படவில்லை. இவற்றைப் பயன்படுத்தும் போது சில வேளைகளில் முடி உதிராமல் பராமரிக்கப்படலாம். இவை நீண்டகாலம் பாவிக்கப்படுகிறன. இவற்றை நிறுத்தும் போது முடிஉதிர்வு முந்தையதைப் போலவே இருக்கும். தீவிரமாக்கப்படமாட்டாது. எனினும் மருத்துவ ஆலோசனையின்றி இவ்வகையானவற்றை பாவிப்பதை தவிர்ப்பதே நன்றாகும். முடியுதிர்வு உள்ளவர்கள் தோல் சிகிச்சை நிபுணரை அணுகி அவரது ஆலோசனையுடன் முடியுதிர்வின் காரணத்திற்கு ஏற்ற வகையில் சிகிச்சை பெறுவது சிறந்ததாகும்.

Dr. துஷ்யந்தி ஆனந்தலிங்கம்
நீரிழிவுச் சிகிச்சை நிலையம்

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

## கடைகள் வாடகைக்கு உண்டு

யாழ்.நாவாந்துறை நாவலர் வீதியில் கிறிஸ்தவ தேவாலயம், பாடசாலை, முஸ்லிம் பள்ளிவாசல் என்பவற்றுக்கிடையே மிகவும் சனச்செறிவான பகுதியில் நவீன முறையில் (குளியலறை, வாகனத் தரிப்பிடம், குழாய் நீர் வசதி, மலசலகூடம்) அமைந்துள்ள 4 கடைகள் வாடகைக்குண்டு. 4 கடைகளையும் ஒரே நபர் எடுத்தால் ஒரு களஞ்சிய அறை இலவசம்

தொடர்பு:-0776447352, 0778549399

## பாராட்டும் நன்றியும்



நியமனம் : 01.01.1962

### திரு. க. கணபதிப்பிள்ளை

(வல்லிபுரம் – புலோலி.)

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி சேவையில் ஐம்பது வருடங்களைப் பூர்த்தி செய்த எமது காப்புறுதி ஆலோசகர் திரு.K. கணபதிப்பிள்ளை அவர்களை பாராட்டுவதுடன் எமது காப்புறுதி ஆலோசகர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு காப்புறுதிச் செயற்பாடுகள் சார்பாக சென்று வரவும் இலட்சாதிபதிகளின் சங்கம், தலைவரின் சங்கம், அபிவிருத்தி முகாமையாளர் சங்கம், பிராந்திய முகாமையாளர் சங்கம் ஆகியவற்றில் அங்கத்துவம் பெறவும் உதவியாயிருந்து வடபிராந்திய நிபுணர், வடபிராந்திய விற்பனை முகாமையாளர், யாழ்.விற்பனை முகாமையாளர், நிர்வாக உத்தியோகத்தர், அலுவலக ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் சகலருக்கும் எங்கும் அருள் சுரக்கும் எல்லாம் வல்ல எழிலாள் நயினை நாகபூஷணியின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"காப்புறுதியின் முன்னோடிகளை நாடுங்கள் முன்னோடிகளின் பலம் முன்வரைவிடப் பலமானது"

[illegible] "தேவவளவு"
கரணவாய் கிழக்கு, கரவெட்டி
0773545323, 0213735615

லயன்.சி. ந.கதிர்வேலு (J.P)
அகில இலங்கை அதிசிறந்த அமைப்பாளர் (ஆயுள்)
2004 இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
24★ 06★ 1953

உதிர்வு
20★ 07★ 2012

எமக்கு உயிர் கொடுத்து இம் மண்ணில்
பெற்றெடுத்து நல்வழிகாட்டி வளமாக
வாழ வைத்துவிட்டு நீங்கள் விண்ணுலகம்
சென்று விட்டீர்களே!

அமரர்

### அம்பலவாணர் சதானந்தன்

கடந்த 20.07.2012 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அம்பலவாணர் சதானந்தன் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (19.08.2012) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு
புத்தூர்

(21929) குடும்பத்தினர்

## சாவகச்சேரியில் .......

### மாபெரும் மலிவு விற்பனை

மலேசியா, சிங்கப்பூரிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட Sony T.V, LCD, LED, DVD, Blue Ray DVD ஆகியவற்றைக் குறைந்த விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

### ஆதவன் எலெக்ரோனிக்ஸ்





மலிவு விலையில்....

- Sony T.V 21''- 13000/=
- Sony T.V 21''- Waka -14000/=
- Sony T.V 25''- Waka -22000/=
- LCD 19'' -18000/=
- LCD 22'' - 24000/=
- LCD 32'' - 32000/=
- LED 32'' - 43000/=
- DVD - 3900/=
- மற்றும் மின்சாதனங்கள்

ஒரு வருட உத்தரவாதம்



ஆதவன் எலெக்ரோனிக்ஸ்
இல.13 நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி.
தொ.பே. 0771541835

# வரையறுக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ''வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்'' இற்கு அமைய சிற்றம்பலம் தவராசா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 04.08.2009 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் உத்தியோகத்தர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இந்தக் கூட்டங்களிற் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கான நிறைவெண் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையில் இருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவராவது (02) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- இரண்டு அங்கத்தவர்களுக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கு வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரால் 16.08.1998 ஆம் திகதிய 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய கூட்ட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களும் அன்றைய கூட்டத்துக்கு சமுகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

### கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 01.09.2012 சனிக்கிழமை

| கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01. | பளை | ந.நாவேந்தன் | 01.09.2012 சனிக்கிழமை மு.ப. 10 மணி | பளை மத்திய கல்லூரி |
| 02. | மாசார் | சோ.கிருஷ்ணகுமார் | " | மாசார் அ.த.க.பாடசாலை |
| 03. | முள்ளிப்பற்று | க.விஷ்ணுகரன் | " | இயக்கச்சி அ.த.க.பாடசாலை |
| 04. | சோரன்பற்று | வி.சிவபாலன் | " | சோரன்பற்று கணேசா வித்தியாலயம் |
| 05. | புலோப்பளை | இ.ஜெகதீபன் | " | புலோப்பளை றோ.க.பாடசாலை |
| 06. | இத்தாவில் | க.செல்வகுமார் | " | பளை மத்திய கல்லூரி |
| 07. | முகமாலை | இ.விஜயகுமார் | " | பளை மத்திய கல்லூரி |
| 09. | கிளாலி | சி. சிவாகரன் | " | கிளாலி றோ.க.த.க.பாடசாலை |
| 10. | புலோப்பளை கிழக்கு | ரி.என்.ராஜா | " | புலோப்பளை றோ.க.பாடசாலை |
| 11. | அல்லிப்பளை | கே. செந்தூரன் | " | புலோப்பளை றோ.க.பாடசாலை |
| 12. | கச்சார் வெளி | இ.சுரேஷ் | " | பளை மத்திய கல்லூரி |
| 13. | தம்பகாமம் | வே.ஸ்ரீஸ்கந்தராசா | " | பாலர் பாடசாலை வண்ணாங்கேணி வடக்கு |
| 14. | சங்கத்தார் வயல் | பகீரதன் | " | கோயில் வயல் அ.த.க.பாடசாலை |

ஒப்பம்:
சிற்றம்பலம் தவராசா
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

### கிளைக் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யத் தகுதியற்றவர்கள்

01. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்
02. 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள்
03. உடன் முன்சென்ற 3 ஆண்டுகளுள் தீய ஒழுக்கச் செயலுக்காகக் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டவர் அல்லது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாத காலத்துக்கு சிறைத்தண்டனைக்கு தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
04. கடனைத் தீர்க்க வகையற்றவரெனப் பிரகடனஞ் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கிற் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
05. இச் சங்கத்துக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் எக்கடனையாவது திருப்பிக் கொடுக்காதவர் அல்லது வேறு எவ்விதத்திலும் தவறு செய்தவர்.
06. இச்சங்கத்தில் வியாபாரியெனப் பதிவு செய்யப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்டவகையில் ஒரு வியாபாரத்தை நடத்துபவர்.
07. சங்கத்தில் ஆதாயங் கருதி ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக் கொடையைப் பெறுபவர்.
08. இச்சங்கத்தில் அல்லது இச்சங்கம் உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்தச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராயிருப்பவர்.
09. ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினாற் செய்யப்படும் எந்த விற்பனையிலோ கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனாற் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவிலிருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தமது பதவியை அல்லது வேலையை கடந்த 5 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. இயக்குநர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குநர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் பிரிவு 6 (2) இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6 இன் கீழ் அல்லது வாக்காளர் அட்டவணையிற் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.
12. நாடாளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்.
13. அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா 100/= ஐப் பங்குப் பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
15.07.1934

மறைவு
20.07.2012

## திருமதி நடராசா சரஸ்வதி

ஆலமரம் சாய்ந்து போனதே ஆனாலும்
விழுதுகளின் விழிகளில் ஈரம் இன்னும் காயவில்லை
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும் அம்மம்மா
உங்களுக்கு ஈடாகுமா
மாதம் ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயர்
மோட்ச வழி நீங்கள் சென்று நலம் பெறுவீர்கள் எந்நாளும்

கடந்த (20.07.2012) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (21832) (2-6-7)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## காணி விற்பனைக்கு

நல்லூர், கோவிற்பற்று திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் ஆலய பின் வீதி அருகில் அமைந்துள்ள நிலபரப்பு 1 குளி 12.1 விஸ்தீரணமுள்ள காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077558 1550

## வேலையாள் தேவை

யாழ். நகரிலுள்ள மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யும் கடை யொன்றுக்கு வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 021 222 8345

## காணி விற்பனைக்கு

சுதுமலை மத்தி மானிப்பாயிலுள்ள $15\frac{1}{2}$ பரப்பு வீட்டுக்காணியுடன் கூடிய வயல்காணி விற்பனைக் குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 491 1362 (21775)(5-6-7)

## நிரந்தர வேலை வாய்ப்பு

துறைமுகம் (தனியார்) தச்சர், வெல்டர், சாரதி, விமான நிலையம் (தனியார்), கிளினிங், கேட்டரிங், பாதுகாப்பு பிரிவுகளுக்கும் ஆண்கள் மாத்திரம்(18-55) JCB Forclift Exovetar, ரோலர் வில் லேடர், ஒப்ரேட்டர் தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு. சம்பளம் (25,000/=, 55,000/=)

மேசன், helpers, வெல்டஸ், பெயின்ரஸ், தச்சர், லேபர்ஸ் என்பவற்றுக்கு நீண்ட கால வேலை வாய்ப்புக்கு தேவை.

அனுராதபுரம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களுக்கு புனர்நிர்மாண வேலைகளுக்கு குழுக்களாக தொழிலாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றார்கள். இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை சம்பளம். ஒவ்வொரு நாளும் செலவுக்கு பணம் எடுக்கலாம். உணவு, தங்குமிட வசதி உண்டு.

இலங்கை முழுவதும் தொழில் வாய்ப்புகளுக்கு அனைவரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தொடர்பு: 071 346 0295 (16929)(45-6-7)

## வாழ்க்கையில் வெற்றி பெற நல்லதொரு தொழில்

சம்பளம் (22,000/=, 30,000/= 45,000/= வரை) நாடளாவிய ரீதியில் பிரதான தொழிற்சாலைகளில் கோடியல், பிஸ்கட், சொக் லேட், ஜாம், சோயாமீற், பால்மா, டயர், கிளவுஸ், வர்ணப் பூச்சு, சவர்க்காரம், சீற், டயில்ஸ், இவ்வாறான 100 இற்கும் மேற்பட்ட உற்பத்திகளுக்கு ஆண்,பெண் இரு பாலாரும் தேவைப்படுகின்றனர். (தரம் - 6 முதல் A/L வரை) 17 வயது முதல் 55 வயதுவரை) உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.

காப்புறுதி + ETF+, வருடாந்த மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும். நண்பர்கள், கணவன், மனைவி இருவரும் ஒரே இடத்தில் வேலை செய்யும் வாய்ப்பும், குழுக்களாகவும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளார்கள். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

இலங்கை முழுவதும் தொழில் வாய்ப்புகளுக்காக அனைவரும் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

தொடர்புகளுக்கு : 071 3460 295
(16946) (45.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு advt@uthayan.com 0215671111

## கார் விற்பனைக்கு

TOYATA Vitz, 2007 model கார் உடன் விற்பனைக்குண்டு.

(செ/2399)(5-6-7) தொடர்பு: 077 136 2202

## புதிய வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் (பாக்கியம் ரெஸ்ற் - PAKKIYAM REST)

★ வரவேற்பாளர் (Reception)
★ முகாமையாளர் (Manager)
★ சமையற்காரர் (Cooker)

தகைமை: மும்மொழிகளும் தெரிந்திருத்தல் அவசியம். சம்பளங்கள் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

வவுனியாவில் புதிதாக திறக்கப்படவுள்ள நெல்லி ஸ்ராரின் மற்றும் ஒரு கிளை பாக்கியம் ரெஸ்ற் (PAKKIYAM REST)
★ Ac Rooms
★ Family Rooms
★ V I P Rooms with kittchen

(16943) (45-6-7) தொடர்பு: 077 9908 054

## 31 ஆம் நாள் நினைவு தினம்



மலர்வு
22★ 10★ 1947

உதிர்வு
17★ 07★ 2012

### அமரர் முருகேசு கனகரத்தினம்

முருகேசு மாணிக்கம் ஈன்றெடுத்த மணி முத்தான (கனக)ரத்தினமே!
இல்லற வாழ்வினிலே இன்பமாய்ச் செல்வமுடன் இனிப்பாக வாழ்ந்தீரே!
இவ்வுலக வாழ்வு கசந்திடவே இனிய இடந்தேடி இறைபதமடைந்தீரே!
இந்த நிலைகண்டு ஏங்குதையா எம் எல்லோரின் இதயமுமே!
மனைவியோ கதறுகிறார் இம்மண்ணை விட்டு நீர் போனதனால்
மக்களைந்தும் வாடுகிறார்கள் மனையில் நல்லாசான் இல்லையென்று
மாமியார், மருமக்கள் மனம் வாடுதையா நீர் மடிந்த கவலையிலே
மைத்துனர்கள் மைத்துனியோ மனதினிலே கதறுகிறார்கள்.
உடன்பிறந்தோர், உறவினர்கள் உம்மையெண்ணி உருகுகிறார்கள்
மாதமொன்று சென்றதையா யாம் உம்மை இழந்து
மாதங்கள் பல சென்றாலும் மனக்கவலை மாறாதையா
மகிழ்ச்சியாய் வாழும் ஐயா பரலோக வாழ்வுதனிலே!
உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள். தகவல்: க.சுமந்திரன் (0777 206003) (21699) (2-7-6)

# இலவசப் பாடநெறி

இலங்கை மருத்துவக்கல்லூரி சபையால் (Sir Lanka Medical College Council) அங்கீகரிக்கப்பட்ட விக்கிரமாராச்சி இன்ஸ்ரிரியூட் ஒஃப் ஸ்பீச் அன்ட் ஹியரிங் (Wickramarachchi Institute of Speech & Hearing), ஆல் நிகழ்த்தப்படும் இரண்டுவருட செவிப்புலனியல் பட்டையப்படிப்பு (Diploma in Audiology) பாடநெறி ஆரம்பமாகின்றது. (செய்முறை பயிற்சிகளும் உள்ளடக்கப்பட்டது)

தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக முழு பாடநெறியும் இலவசமாகக் கற்றுக்கொடுக்கப்படும்.

யாழ்.மண்ணிலே வகுப்புக்கள் ஆரம்பமாகி மிகுதி கொழும்பிலும் நடைபெறும் .

நேர்முகப்பரீட்சை வைத்துத் தேர்ந்தெடுக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு முன்கூட்டியே பதிவு செய்யப்படவேண்டும்.

தகைமை:- க.பொ.த.உயர் தரத்தில் விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்தோர். நேர்முகப்பரீட்சை 20.08.2012 முதல் 24.08.2012 வரை நடைபெறும்.

தொடர்புகளுக்கு:-
இல.229, 231, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 2219288, 0777511260.

(21700) (2-6-7)

## எங்கள் அன்புத் தெய்வத்திற்கு ஆண்டுகள் ஆறு




ஆண்டுகள் ஆறு ஆனதுவோ—அப்பா! நீங்கள்
அருகிருந்தெம் மனம் நிறைந்த
ஆதரவுக் கேங்குகிறோம்!
வழிகாட்டும் ஒளியாய்—எம் விழியாய்
உம் வார்த்தைகள் எம்மோடு என்றும்.......
வாழும்.....! வணங்குகிறோம்!

பசுபதீயம், கலாசாலை வீதி.
திருநெல்வேலி.
-குடும்பத்தினர்.

# S.N.T. சேவிஸ் ஸ்ரேசன்

யாழ்.வீதி, மானிப்பாயில் திங்கட்கிழமை (20.08.2012) நாளை 9 மணிதொடக்கம் 11 மணி வரையுள்ள சுபவேளையில் S.N.T. சேவிஸ் ஸ்ரேசன் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதனை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(C/2503)(2-6-7)

S.N.T.சேவிஸ் ஸ்ரேசன் யாழ்.வீதி,மானிப்பாய்

## வீடு,காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டப் பகுதியில் (Christyrajah Church) வீட்டுடன் கூடிய காணி 3பேர்ச் விற்பனைக் குண்டு. இவை தவிர

1. குறையாக கட்டப்பட்ட வீட்டுடன் 2¾ பேர்ச் காணி
2. வீடு கட்டக்கூடிய மேட்டுக் காணி 4 பேர்ச்
3. வயற்காணி 9பேர்ச் காணி

இவை அனைத்தையும் மொத்தமாக அல்லது தனித்தனியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு:0047 4542 3834 -Norway
001 416 546 7653-Canada
001 647 878 6467-Canada

(வி/2277)(5-6-7)

## தேவை

யாழ் நகரின் பிரபல்யமான TOPAZ (டொபாஸ்) புடைவையகத்திற்கு பெண் பணியாளர்கள் தேவை. சம்பளம் 7000-10000 வரை வழங்கப்படும். அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 222 4743, 077 747 9076

(21906)(5-6-7)

## வாடகை

திருநெல்வேலியில் மாடிவீடு, நிறுவனங்களுக்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0775572982

(வி/2278)(6.7.10)

## கடை வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில்,100 அடி நீளமும் 13அடி அகலமும் உடைய மாடி கட்டடம் வசதி கொண்ட கடை (இலங்கை வங்கிக்கு சமீபமாக) வாடகைக்கு கொடுக்கப்படும். பொது நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 072 197 6454, 021 222 7365

(21733)(5-6-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் - 02✱12✱1950 அம்பிகை அடியில் - 20✱07✱2012



அன்பின் இலக்கணமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அமைதியின் உறைவிடமாய்
பாரினில் வாழ்ந்து - எமக்குக்
கல்வியறிவூட்டி, இன்பமாய் - நாம்
வாழ வழி சமைத்தீர் - எமதருமை
அப்பாவே - எங்கு சென்றீர்
மாதமொன்று ஆன இன்று - உங்கள்
ஆத்ம சாந்திக்காய் - செம்மணத்தம்புலம்
ஸ்ரீ வீரகத்தி விநாயகருடன் - நயினை
ஸ்ரீ நாகபூசணி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

## முருகேசு நாகலிங்கம் நடராசா (நயினாதீவு)

எமது குடும்பத்தலைவர் திடீர் சுகவீனமுற்றவேளையில் அவரை யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சேர்த்த சைவபரிபாலன சபையினருக் கும் அன்னாரது உயிரைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்ட வைத்திய சாலை உத்தியோகஸ்தர்கள் மற்றும் அமரர் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் ஆறுதல் கூறியோருக்கும், உதவிகள் புரிந்தோருக்கும், நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி, தந்தி மூலம் வெளிநாட்டிலிருந்தும் உள் நாட்டிலிருந்தும் அனுதாபச் செய்தியைப் பகிர்ந்துகொண்டோருக்கும் மற்றும் மலர் வளையம் சாத்தியோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர் , பத்திரிகை வாயிலாகக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர் மற்றும் நீராகாரம் உணவளித்து உதவிய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள். குறிப்பாக கணேச சன சமூக நிலையத்தினருக்கு எமது நன்றி உரித்தாகுக.

இன்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலை நயினாதீவு கங்காதரணி தீர்த்தக் கரையில் இடம்பெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளிலும் மற்றும் வீட்டுக் கிரியை, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணேசபதி,
நயினாதீவு-6.

குடும்பத்தினர்,

(21911)(6.7.10)

## வீடு வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு.அரச/தனியார், உத்தியோகத்தர்கள் விரும்பப்படுவர்

தொடர்பு: 077 015 4740, 077 858 7705

(21867)(5-6-7)

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1973 சிவந்த, மெல்லி தோற்றம் நட்சத்திரம் பூசம், உதயச் செவ்வாய், யாழில் அரசாங்கத் திணைக்களமொன்றில் கௌரவமான சேவை யாற்றி வருகின்ற மகளுக்கு அதே குலத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் PR உடன் பணிபுரிகின்ற வரன் தேவை. தொடர்பு களுக்கு.

0771250332, e-mail :
pcmallevr@gmail.com

(21791)(6.7.10)

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியுவில் அமைந்துள்ள 1½ (ஒன்றரை) பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 6146434

(21873)(6-7-10)

## வேலையாள்கள் தேவை

மானிப்பாயில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை. நேரில் வரவும்

S.N.T. சேவிஸ் ஸ்ரேசன்
யாழ் வீதி, மானிப்பாய்.
மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்.

தொடர்பு: 021 720 0290

(வி/2504)(5-6-7)

## பதவி வெற்றிடம்

யாழில் கட்டட நிர்மாணத்துறையில் வேலை செய்வதற்கு தச்சு, மேசன், வர்ணம் பூசுபவர்கள், மின் இணைப்பு செய்பவர்கள் மற்றும் கூலி ஆள்கள் தேவை.

தொடர்பு: 0777120945

(21903)(6.7.10)

## மணமக்கள் தேவை

www.keethannet.com

யாழ் இந்து கௌரவ குடும்பம் UK PR 1986 சுவாதி, 1988 கேட்டை, 1990 திருவோணம், 1992 அஸ்வினி நல்லூரை தரிசிக்க வந்திருக்கும் மணமக்கள்

தொடர்பு:
யாழ்+ கிளி - 0771307185
கொழும்பு+ வவுனியா - 0778501013
London +Canada - 00447965028396

(18725)(6.7.10)

## வீடு,காணி விற்பனைக்கு

கொக்குவில் சபாபதி ஒழுங்கையில் 4 பரப்பு 9 குளி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 0775-329104, 2365633

(வி/2279)(6.7.10)

## Vacancy -Vavuniya Branch

விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள்

தெற்காசியாவில் சந்தைப்படுத்தல்துறையில் 21 நாடுகளை வலையமைப்பாகக் கொண்ட நிறுவனமொன்றில் கவர்ச்சிகரமான மாதவருமானமும் மேலதிக வாய்ப்புக்களும் வழங்கப்படும்.

✱ அடிப்படை சம்பளம்.
✱ முறையான திட்டமிடல் ஆலோசனை பயிற்சிகள்
✱ பயணக் கொடுப்பனவு / ஊக்குவிப்புக்கொடுப்பனவு
✱ வெளிநாடுகளுக்கான சுற்றுலா பயணங்கள்

தொடர்பு: நிலாதிரி - 024 570 0574
R.N.முரளி -077 567 5075
நசீம் - 077 343 9493
Email-pioneerhouse.vavuni@yahoo.com

(18943)(5-6-7)

## ஜெ.எம்.விக்கிரமாராச்சி அன்ட் கம்பனி

### வேலையாள்கள் தேவை

கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பில் திறக்கவுள்ள புதிய கிளைகளுக்கு

* கண் பரிசோதனை செய்து மூக்குக்கண்ணாடி வழங்குதல்
* காது பரிசோதனை செய்து காது கேட்கவைக்கும் உபகரணங்கள் வழங்குதல்
* மூக்குக்கண்ணாடி பழுதுபார்த்தல்
* காது கேட்கவைக்கும் உபகரணங்கள் பழுதுபார்த்தல்

போன்ற பணிகளுக்கு வேலையாள்கள் தேவை.

★ புதிதாக வேலை பழகுவோர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படும்.

★ தகைமை: க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞான பாடம் பயின்றோர்.

தொடர்புகளுக்கு:
இல. 229, 231, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021-2219288, 0777511260.

(21781) (6,7,10)

# Metro Travels

விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 18300 |
| Colombo-Tiruchirapally-Colombo | 19200 |
| Colombo-Doha | 28800 |
| Colombo-London | 51000 |
| Colombo-Toronto | 84500 |
| Colombo-Singapore-Colombo | 31500 |
| Colombo-kualalumpur -Colombo | 34500 |
| Colombo-Frankfurt | 62500 |
| Colombo-Milan | 60000 |
| Colombo-Rome | 60000 |
| Colombo-Paris | 62500 |
| Colombo-Zurich | 60000 |



**All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,**
**Above Fares Are Subject to seat Availability**
**Terms & Conditions Apply**

மேலதிக தொடர்புகளுக்கு

(Branch office) No-272/1, Stanley Road, Jaffna.
Tel:-021 222 4647,021 222 9424
Week days 8.30 am to 5.00 pm
Saturday 9.00 am to 1.30 pm
**New Branch office: No-34, New Bus Stand Complex, Vavuniya.** Tel:024 222 6800 / 024 222 6801.

(C\2393)(7,6,10)

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

## SRI LANKAN-GERMAN DEVELOPMENT COOPERATION

## FIELD ASSISTANT (MULLAITIVU)

The Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) is an international cooperation enterprise for sustainable development with worldwide operations. As a federally owned enterprise, we support the German Government in achieving its objectives in the field of international cooperation for sustainable development. GIZ drives projects that support Sri Lanka's development objectives and works with stakeholders from across the spectrum in the government, public and private sectors. GIZ ensures that its solutions are innovative, humanitarian and economically viable and sustainable in the long term.

Development oriented Emergency and Transitional Aid (DETA) Project will promote the reintegration of IDPs returning to their regions of origin in the Wanni region, and is jointly supported by the Governments of Germany and Sri Lanka. The objective of the project is to improve the livelihood of about 5000 returning IDP households located in the Kilinochi and Mullaitivu districts. To achieve its objectives, the project works in the following Intervention areas: (i) food production (ii) community infrastructure rehabilitation and increasing self-help capacity of the community, (III) support for Fishermen and (iv) Education sector support.

GIZ-DETA invites applications for the position of Field Assistant for immediate recruitment from reliable persons with demonstrated client oriented approach and a high sense of responsibility meeting the following criteria:

**Required qualifications, competences/skills and experience**

- At least 1-2 years of interviewing, related coursework or professional experience especially with IDPs and returnees;
- Good knowledge of government structures;
- High level of fluency in English and Tamil both verbally and in writing;
- Comfort working with people in diverse areas including speaking on sensitive, private issues ;
- Computer skills (MS office).

**Responsibilities:**

- Secure locations for private screening, implement established sampling procedures according to written sampling plans;
- Carryout data collection, analysis and management activities and the dissemination of data and information in the field;
- Administer informed consent, answer questions, and record participants' responses to structured interview questions; at the end of the interviews report back to the project office in a timely;
- Assist in organizing food for work/cash for work activities / programs
- Assist in training activities

Qualified applicants must submit a cover letter and an updated CV including *email & telephone contacts of two professional referees* to giz-hrsrilanka@giz.de or mail to the Human Resource Unit, GIZ-Colombo, 6, Jawatte Avenue, Colombo 5, **before cob 26 August 2012.**

*We thank all applicants but only candidates who meet all the listed criteria will be invited for an interview/test.*

(வி/2380)(6.7.10)

## மெய்வன்மைப்போட்டி

அச்சுவேலி, ஓக.19

வாதரவத்தை விக்னேஸ்வரா பாலர் முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 2மணிக்கு விக்கினேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சி. பத்மதாசன் தலைமையில் நடைபெறும் இந்த விளையாட்டு விழாவில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தின ராக அ.உதயகுமார், வலி. கிழக்கு பிரதேச சபை தலைவர், கே.விமலநாதன், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐ. சிவானந்தன், முன்னாள் கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3-11)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட தரம் 1 ஏ.பி பாடசாலையான, யா/ இராமநாதன் கல்லூரிக்கு அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இதனைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1, 2-1, ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்ட கல்வி வலயங்களைச் சேர்ந்த அதிபர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் 30.08.2012 க்கு முன்னதாக தமது விண்ணப்பங்களை மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார். (3)

### ஆஸி. செல்ல முயன்ற

# 12 இலங்கையரையும் இந்தியா நாடு கடத்தும்

**சட்ட விரோதமாக செல்லமுற்படுகையில் கேரளப் பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.**

கேரளாவின் கொல்லம் ஊடாக ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 12 இலங்கைத் தமிழர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர். இதற்கான நடவடிக்கைகளை கேரள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஜூன் 3 ஆம் திகதி 151 பேர் படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக செல்ல முற்படுகையில் கேரளப் பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 19 பெண்களும் 22 சிறுவர்களும் இருந்தனர். அதில் 12 பேர் இலங்கையில் இருந்து ஜூன் 2 ஆம் திகதி சுற்றுலா வீசாவில் கேரளா சென்று, ஆஸ்திரேலியா செல்லும் குழுவுடன் இணைந்து கொண்டவர்களாவர். ஏனையோர் தமிழகத்தின் இலங்கை அகதி முகாம்களில் உள்ளவர்கள். இந்த நிலையில் தமிழகத்தின் அகதி முகாம்களில் இருந்தவர்கள், மீண்டும் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டனர்.

இலங்கையில் இருந்து வந்த 12 பேர் மாத்திரம் கேரளாவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்தனர். இந்த நிலையில் இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர். (3)

## ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு காரை.எம்.பி. அருளானந்தன் ''காவல் தெய்வம்'' என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். தொடர்ந்து சமய அறிவுப் போட்டிகளில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான பரிசளிப்பும் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (3)

* * *

செல்வச்சந்நிதியில் மூன்றாம் திருவிழாவான இன்று சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் மு.ப 10 மணிக்கு காரை எம்.பி. அருளானந்தன் 'உதித்தனன் உலகம் உய்ய' எனும் கருப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். தொடர்ந்து, ஆலய முன்றலில் மாலை 4 மணிக்கு விஸ்வ லிங்கம் சுபதீஸ்வரன் 'ஞானபூசை' எனும் கருப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (3-253-8)

* * *

வடமராட்சி, ஓக.19

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு 'இராமனும் அனுமானும்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். இந்தச் சொற்பொழிவை வி.சுபதீஸ்வரன் நிகழ்த்துவார். (3-8)

## சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை, துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (3-29)

* * *

சுழிபுரம், ஓக.19

சுழிபுரம் மேற்கு ஐயனார் ஆலயப்பெருந்திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது. இந்தத் திருவிழாவின் இறுதி நாளன்று சங்காபிஷேக நிகழ்வும் நடைபெறவுள்ளது. தினமும் இரவுத் திருவிழாவில் இரா செல்வ வடிவேலின் சொற்பொழிவும் நடைபெறும். (3-28)

## நடமாடும் சேவை

நவாலி, ஓக.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் நடமாடும் சேவை நாளை மறுதினம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிரதேச செயலர் எஸ். முரளீதரன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே கிராம சேவையாளர் அலுவலகங்கள் மூலம் பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்களிடமிருந்து செயலக உத்தியோகத்தரால் பெறப்பட்ட ஆவணங்கள் கோவைகளாக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையின் மூலம் இவர்கள் விசாரணை செய்யப்பட்டு உரிய அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படும். ஆவணங்கள் சமர்ப்பித்தவர்களை தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (3-100)

## வலி. மேற்கில் வீதிகள் புனரமைப்பு

வலி.மேற்கு பிரதேச சபையின் 12 கிராம வீதிகள் பல வருடங்களின் பின்னர் புனரமைக்கப்பட்டு வருகின்றன. பிரதேச சபையின் 7 மில்லியன் ரூபா நிதியில் இருந்து இந்த வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக சிக்காவயல் வீதி, சித்தன்கேணி சிவன் கோயில் வீதி என்பன ஏற்கனவே புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளன.

தற்போது சங்கானையில் மாவடி குளத்தடி வீதி, நிகர வைரவர் வீதி, தேவாலய வீதி, மற்றும் திருஞானசம்பந்தர் வீதி, அராலி கறுப்பிட்டி பிள்ளையார் வீதி, அராலி கிழக்கு தவராஜசிங்கம் வீதி, அராலி தெற்கு உடையார் வீதி ஆகிய வீதிகளே புனரமைக்கப்படவுள்ளன. (3-29)

## உளவள கற்கைநெறிப் பயிற்சி

உளவள ஆற்றுப் படுத்தல் வாண்மைத்துவச் சான்றிதழ் கற்கைநெறியின் பத்தாவது பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

''தன்னைத்தான் அறிதலும், பிறரை அறிந்து கொள்ளலும்''எனும் தலைப்பில் நடத்தப்படும் ஆறுமாத காலப் பயிற்சி நெறியில் ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக இல.30, கம்பஸ்லேன், திருநெல்வேலி எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என்று 'துளிர் ' நிறுவனம் அறிவித்துள்ளது. (3-14)

**தருவது வித்தியா**

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**நாளை**

ஆவணி- 04 திங்கட்கிழமை 20.08.2012
திதி: திருதியை மா. 06.38 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.இ. 07.32 வரை
சுபநேரம்: 12.05- 01.35 வரை
ராகு காலம்: 07.35- 09.05 வரை

**மேடம்:** பழைய பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் வந்து போகும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பணப்பற்றாக் குறையைச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**இடபம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர். மற்றவர்களுக்காகச் சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**மிதுனம்:** வர வேண்டிய பணம் கைக்கு வரும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் அதிரடி லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கடகம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவை.

**சிங்கம்:** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். சகோதர வழியில் அலைச்சல் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியரின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.

**கன்னி:** எதிலும் வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். நம்பிக்கக்குரியவர்களை கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**துலாம்:** சவாலான காரியங்களையும் செய்து முடிப்பீர்கள். சொந்த-பந்தங்களில் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். சிந்தனைத் திறன் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**தனுசு:** கொஞ்சம் அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். நண்பர்கள், உறவினர்களுடன் உரிமையில் வரம்பு மீறிப்பேச வேண்டாம். கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். உத்தியோகத்தில் அலுவலக இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**மகரம்:** ஆடை, ஆபரணம் சேரும். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். அரசு விடயங்கள் உடனே முடியும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்:** உங்கள் செயலில் வேகம் அதிகரிக்கும். பிள்ளைகளால் உறவினர், நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். நாடி வந்தவர்களுக்கு உதவிசெய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**மீனம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களின் ஆதரவு அதிகரிக்கும். புதிய நட்பு மலரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | | | 1 | | 3 | | |
| | | 9 | | 7 | 5 | | 2 | |
| | 3 | 5 | 2 | | 6 | | | |
| 5 | | 3 | | | | | | 1 |
| | 9 | 4 | | 3 | | 7 | 5 | |
| 1 | | | | | | 4 | | 3 |
| | | | 1 | | 8 | 2 | 9 | |
| | 4 | | 7 | 5 | | 8 | | |
| | | 7 | | 9 | | | 1 | 4 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 8 | 9 | 4 | 6 | 5 | 1 | 7 |
| 5 | 9 | 4 | 1 | 2 | 7 | 6 | 3 | 8 |
| 1 | 6 | 7 | 3 | 8 | 5 | 2 | 4 | 9 |
| 6 | 4 | 1 | 2 | 5 | 9 | 7 | 8 | 3 |
| 3 | 5 | 9 | 4 | 7 | 8 | 1 | 2 | 6 |
| 8 | 7 | 2 | 6 | 3 | 1 | 4 | 9 | 5 |
| 4 | 2 | 5 | 8 | 6 | 3 | 9 | 7 | 1 |
| 7 | 1 | 3 | 5 | 9 | 4 | 8 | 6 | 2 |
| 9 | 8 | 6 | 7 | 1 | 2 | 3 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 7 ஆம் ஆண்டு நினைவு

அன்னையின் மடியில் 03 ★ 04 ★ 1955

மண்ணின் மடியில் 06 ★ 09 ★ 2005



உடையார் ஒழுங்கை, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பேர்ளின் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி மாலினி மகேந்திரன் (ரதி)

திதி:- துதியை

(21798)(2.6.7)

### சமர்ப்பணம்

ஆண்டுதோறும் அழுது புரண்டாலும்
வாராது இவ்வுலகு விட்டு நீங்கிய
அன்புத் தெய்வமே!
அன்பு மகளாய் மனம் குளிர
வைத்தாய்
பேரன்மார்கள், மனதார
வாழவைத்தாய்
வாழ்வுதனில் வாழ்வதற்கு வாழ்ந்து
சிறந்திட உன்னாலான உதவி புரிந்து
தெய்வத்துடன்
தெய்வமாக இரண்டறக் கலந்திட்ட
உம் பாதங்களுக்கு இதனைச்
சமர்ப்பிக்கின்றோம்.

சமர்ப்பணம்
சமர்ப்பணம்
சமர்ப்பணம்

- மகேந்திரன் குடும்பத்தினர்.

## வீடுகள் அமைப்பு

காரைநகர், ஓக.19 காரைநகர் சயம்பு வீதியில் செஞ்சிலுவை சங்கத்தின் நிதி உதவியுடன் புதிய வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வன்னியில் இருந்து வந்து காரைநகர் சயம்பு வீதி கிராமத்தில் மீளக் குடியமர்ந்த வீடுகள் அற்ற 70 குடும்பங்களுக்கு தலா 5 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை காரைநகர் தோப்புக்காடு கிராமத்தில் மீளக்குடியமர்ந்த 30 குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதி உதவியுடன் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-250)

### காணி விற்பனைக்கு

வடமராட்சி, பருத்தித்துறை, திக்கம் நாச்சிமார் கோயில் அருகில் வீதியோரமாக 10 பரப்பு தோட்டக்காணி இரு துண்டுகளாக விற்பனைக்குள்ளது.
தொடர்பு: 077 343 6958 (சி/2276)(5-6-7)

### திறப்புவிழா

எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ்சிவன் கோயிலடி, வைத்தியசாலை, பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய் (பிரதேச செயலகத்திற்கு முன்பாக) மீண்டும் வாரத்திற்கு இரண்டு நாட்களாக வியாழன்,வெள்ளிக்கிழமைகளில் இயங்கவுள்ளது. உடைவு,முறிவு, முள்ளந்தண்டு மூட்டுக்கள் மற்றும் நாள்பட்ட என்பு தசை சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ளவும்.

தொடர்பு: 077 654 4338
வைத்தியர்- முன்னாள் யாழ் சிவன் கோயிலடி வைத்தியரின் மகன்
Dr.சோமசுந்தரம் தி.விஜயன்
(21913)(5-7-21)

### வேலையாள் தேவை

வலதுகுறைந்த ஆண்பிள்ளை ஒருவரை வீட்டில் தங்கி இருந்து பராமரிக்க பொறுப்புக்கள் அற்ற 50 வயதிற்கு மேற்பட்ட ஆண் தேவை. தொடர்பு: 077 299 1810 (21904)(5-6-7)

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

நாச்சிமார் கோயிலடியில் கே.கே.எஸ். வீதியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் 1 ¼ பரப்பு வீட்டுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு:- 0775269432 (21926)(2-6-7)

### பெண் வேலையாள் தேவை

வீட்டு வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. உணவு தங்குமிட வசதியுண்டு.
தொடர்பு: 077 231 1915 (78148)(5-6-7)

### வீடு வாடகைக்குண்டு

இல.07, புதுவீதி, கொய்யாத் தோட்டம் எனும் முகவரியில் 3 அறைகள், 2பெரிய விறாந்தை, வாகனத் தரிப்பிட வசதி மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 119 0011
077 718 9605 (21886)(5-6-7)

### பிரதிநிதிகள் தேவை

- நிறுவனமொன்றின் வேகமாக விற்பனையாகும் 25 வகையான பொருள்களை விநியோகிப்பதற்கு
- வங்கிப்பிணையொன்றை வைப்பிலிடும் ஆற்றல்.
- உங்களுக்கு ரூபா 40,000 மற்றும் கமிஷன் மற்றும் REP
- மேற்பார்வையாளர்களும் தேவை.

தொடர்பு: 071 237 3180,071 531 1678 (சி/2275)(5-6-7)

### German Language academy

ஜேர்மன் டொச் மொழிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் முற்கூட்டியே பதிவுகளை மேற் கொள்ளவும்.

கடந்த பரீட்சையில் அனேக மாணவர்கள் சித்தி அடைந்துள்ளார்கள்.

இல.07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Mr.S.கோணேஸ்.
0779707322 (21926)(2-6-7)

UNIVERSITY OF WOLVERHAMPTON

BCAS CAMPUS

தலைசிறந்த UK விரிவுரையாளர்களினால்
இலங்கையிலேயே
முழுமையாக நடாத்தப்படும் பாடநெறி


Dr. Neil Ankrah
Senior Lecturer
BSc (Hons), MSc, PhD


Ms. Glynis Hampton
Senior Lecturer
BSc (Hons), RICS, Accredited Certificate in Indlusive Environment


Mr. Phil Harris
Principal Lecturer
Head of Academic
LCG, BSc (Hons), MSc

BSc (Hons) Degree in
QUANTITY SURVEYING

2012, செப்டம்பருக்கான பதிவுகள் தற்போது...
For Details
077 283 4595
077 711 0833

ENTRY CRITERIA
BTEC HND in
- Quantity Surveying
- Quantity Surveying & Construction Economics
- Quantity Surveying & Built Environment

- City & Guilds Advanced Diploma in QS / NCT / NDT or any other qualification equivalent to HND

* APL

British College of Applied Studies
32, Dharmarama Road, Colombo 6.

ISO 9001 : 2008 CERTIFIED | 13 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

Hotline: 011 255 9 255

(சி/2267)(2-7-6)

இதோ! ஓர் அரிய சந்தர்ப்பம்

TOKYO SUPER
TOKYO SUPER MIX READY MIXED CONCRETE
NIPPON CEMENT

READY MIXED CONCRETE PLANT-யாழ்ப்பாணம்

சர்வதேச தரக்கட்டுப்பாட்டுக்கும், இலங்கை தரக்கட்டுப்பாட்டுக்கும் இசைவாக சீமெந்து உற்பத்தி சம்பந்தமாக கீர்த்திநாமம் பெற்ற வ/டோக்கியோ சீமெந்து (லங்கா) பீஎல்சி கூட்டுத்தாபனத்தில் கீழ்வரும் வெற்றிடங்கள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கொங்கிரீட் பம்ப் கார் இயக்குனர்
(Concrete Pump Car Operator)
- கொங்கிரீட் பம்ப் கார் இயக்குனராக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றிய அனுபவம் இருத்தல் அவசியம்.
- வயது 40 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

தொழில்நுட்ப வல்லுனர் - (General Mechanic)
- ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அதற்கு நிகரான வேறு ஏதேனும் தொழில்நுட்பக் கல்லூரியொன்றினால் நடாத்தப்படும் தொழில்நுட்பவியல் பாடநெறியொன்றினை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
- தொழில்நுட்பவியலாளராக குறைந்தது 03 வருடங்களுக்குக் கூடுதலாக பணிபுரிந்த அனுபவம் இருத்தல் வேண்டும்.
- ஹைட்ரோலிக் முறை சம்பந்தமான அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- வயது 40 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

சம்பளம் கலந்தாலோசிக்கப்பட முடியும்.

விண்ணப்பதாரர் தனது சுயவிபரங்களுடன் உறவினர் அல்லாத அத்தாட்சிப்படுத்தும் இருவரின் பெயர், முகவரிகளுடன், விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு 10 நாட்களுக்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

மனிதவள மற்றும் நிர்வாக முகாமையாளர்
டோக்கியோ சீமெந்து கம்பனி (லங்கா) பீஎல்சி
77B, புதிய நுகே வீதி, பேலியகொட.
பெக்ஸ்: 0112 945866

(சி/2270)(2-7-6)



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வி சினேஸ்கா

இன்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும் திரு.திருமதி சசிச்செல்வன் தர்சினி தம்பதியரின் செல்வப்புதல்வி செல்வி சினேஸ்கா எல்லாச் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துவோர்.

மாமா (கண்ணன்)
65, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு அப்பா, அம்மா,
அப்பப்பா, அம்மம்மா,
அம்மப்பா, பெரியம்மாமார்
(றேணுகா, தங்கா (ஜேர்மனி)
சசி (பிரான்ஸ்),
அத்தைமார், மாமாமார் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

(21891) (6.7.10)

## IMMEDIATE VACANCIES

JOIN WITH SADAHARITHA WATER TEAM TO HELP YOUR SOCIETY

Sadaharitha Irrigation Systems (Pvt) Ltd is a subsidiary of Sadaharitha Group of companies, purely engaged in supply and installation of well known brands of SENNINGER - USA / SAGLAM - TURKEY / METZERPLAS - ISRAEL Water Management Systems Island wide using latest technologies. It is our passion to search for the best talent to take the Company to greater heights in order to sustain our continued growth. If you have the talent, confidence & passion to achieve the impossible and believe in quality, join our Team!

**Sales Executives**
- ✓ Good results in A/L's
- ✓ Minimum 3 year experience in sales
- ✓ Male aged below 40

**Sales Assistants**
- ✓ Good results in A/L's
- ✓ Minimum 3 year experience in sales
- ✓ Age 22 to 35

**Freelance Agents**
- ✓ Good educational background
- ✓ Males / Females – Age 25 years and above

Other requirements for the above Sales positions
- ✓ Outgoing personality and good communication skills
- ✓ Willing to work on the field.
- ✓ Experience in water /irrigation management & Communication would be a definite advantage.

All positions are entitled to an attractive above average remuneration package.

Please forward your CV including two non related referees within 7 days of this advertisement to the following address.

Sadaharitha
PLANTATIONS LTD
320B, Main Street, Jaffna.
Tel: 0215 673 673
Email: ram@sadaharitha.com
Web: www.sadaharitha.com

(21927) (6.7.10)

## வீடு வளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியில், நல்லூர் பக்கம் 100யார் தூரத்தில் 2¼ பரப்பில் ஐந்து அறைகள் மற்றும் சகல வசதிகள் கொண்ட வீடு,வளவு விற்ப னைக்குண்டு.

தொடர்பு: 011 271 5130, 077 777 5017, 021 720 0467

(சி/2271)(5-6-7)

## வாகன விற்பனை

MAHINDRA
MAXI RUCK
MP-Pa xxxx

தொடர்பு: 077 379 2320

(21892)(5-7-54)

## வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் வாகனத்தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 050 4459, 077 711 0762

(21933)(5-6-7)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி,ஆறுகால்மடம், லோட்டஸ் வீதியில் 3பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.
குறிப்பு: மெயின் றோட் காணி தொழில் செய்வதற்கு உகந்தது.
தொடர்பு: 077 873 6777, 077 661 7845

(21889)(5-6-7)

## கார் விற்பனைக்கு

Cherry QQ, 840 CC அழகான பச்சை நிறக்கார் விற்பனைக்கு உண்டு. ஒன்றரை வருட பாவனையிலுள்ளது. KK இலக்கமுடையது பதினொரு லட்சத்துக்கு மேல். வங்கி உத்தரவாதமும் பெற்றுத்தரலாம்.

தொடர்பு: 077 614 5491

(சி/2285)(5-6-7)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இல.27/1, சங்கிலி வீதியில் அமைந்துள்ள மாடி வீடும், காணியும் (நில.1 குளி 57) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 911 6024

(21889)(5-6-7)

## கடைகள் வாடகைக்கு

நாவலர் வீதியில், பிறவுண் வீதி சந்திக்கு அண்மையில் இல.: 168A, 168B கொண்ட கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 1052

(21951)(5-6-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஆசிரியர் திரு. ச.ஜீவன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராசமலர் சண்முகநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

The Express Institute
Irupalai, Kopay.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(சி/2511) (6,7,10)

## மரண அறிவித்தல்



### பாஸ்ரர் வலோரி அந்தோனி கிறிஸ்தோப்பர்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக வும் திருகோணமலையை வசிப்பிட மாகவும் கொண்ட கர்த்தருக்குள் நித்திரை அடைந்த பாஸ்ரர் வலோரி அந்தோனி கிறிஸ் தோப்பர் அவர்களின் நல்லடக்க ஆராதனை நாளை (20.08.2012) திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போதகர்மார், விசுவாசிகள், ஊழியக்காரர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

3 ஆம் கட்டை,
பள்ளத்தோட்டம்,திருகோணமலை.
தொ. பே. 077 5762 572

தகவல்:
குடும்பத்தினர்

(சி/21924) (45.6.7)

## வீடு வாடகைக்கு

3ஆம் கட்டை கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள மேல்மாடி வீடு (ஐந்து அறைகள், பெரிய வரவேற்பு அறை, வாகன தரிப்பிடம்) ஆகிய வசதிகளுடன் பின்புறம் 6 பரப்பு காணியுடன் கூடிய வீடு வாடகைக் குண்டு. தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 620 5043, 077 797 0808

(21741)(5-6-7)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட " A ' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர் | நல்லூர் பாம் சென்ரர் | கூட்டி பாம் சென்ரர் |
| #19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, | வட்டுக்கோட்டை |
| நல்லூர், யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | தொ.பே : 077 8996085 |
| தொ.பே : 021 2226944 | தொ.பே : 077 6225944 | |

(21061) (7.)

## பாக்கியம் வைத்தியசாலை

மீண்டும் எமது வைத்தியசாலை 20.08.2012 திங்கட் கிழமை தொடக்கம் புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் சேவையாற்றும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

S.S.C. திருக்குமரன், ஊர்காவற்றுறை.

(21908)(5-6-7)

## கார் தேவை

வோக்ஸ் வகன்(VOLKS WAGON)அல்லது மாருதி சுசிக்கி கார் உடன் தேவை.
தொடர்பு: 077 612 6080

(21885)(5-6-7)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பம், 1983இல் பிறந்த செவ்வாய் குற்றம் இல்லை கிரகபாவம் ல/44,ச.ல/37 நட்சத்திரம் விசாகம், படிப்பு B.B.A, M.B.A பட்டதாரி உயரம் 5'5''தனியார் நிறுவனம் ஒன்றில் உயர் பதவியில் இருக்கும் மணமகனுக்குப் பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.
தொடர்பு: 077 911 3006

(16948)(5-6-7)

## லொறி விற்பனைக்கு

47-XXXX இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள லொறி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 670 2432

(21893)(5-6-7)

## மணமகள் தேவை

பிரித்தானியா(U.K)குடியுரிமையுடைய யாழிந்து கௌரவ குடும்பம் 1981 கேட்டை 3ஆம் பாதம் 4இல் செவ்வாய் 5'6'' G.C.E(A/L) சொந்தமாக சுப்பர் மார்க்கட் நடத்தும் மணமகனுக்கு படித்த அழகான மணப்பெண் தேவை. உள்நாட்டு, வெளிநாட்டு பட்டதாரிகள் அரசபணிபுரியும் மணமக்களின் தகவலுக்கு உடன் அணுகவும் பதிவுகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன.

S.K.சிவகரன்(அமைப்பாளர்)
சிவாலயா சர்வதேச திருமணநிலையம்
42/11, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
077 969 4009/077 145 0599
கிளை-கல்லூரி வீதி, பூந்தோட்டம்.
வவுனியா- 024 4907956
(அரச விடுமுறை நாள்களில் மட்டும் சந்திக்கலாம்)

(21890)(5-6-7)

## German Swiss மொழிகள்

தமிழ்மொழிபெயர்ப்புடன் Embassy இல் கேட்கப்படும் A1 Certificate க்கு ஏற்ற வாறு நடைபெறுகிறது.

தொடர்புகளுக்கு:
10, Palaly road,Jaffna
ஆரியகுளத்திற்கு அருகில்
தொ.பே: 077 160 4823

(19916)(5-6-7)

## காணி விற்பனைக்கு

வவுனியா, கண்டி வீதியில் மதவுவைத்தகுளம் வீதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
விலை பேசித்தீர்க்கலாம்
தொடர்பு: 077 531 6250

(சி/2280)(5-6-7)

## 2013 Batch Chemistry Personal group class

Physical Chemistry, Organic, Inorganic Chemistry, கடந்தகால வினாக்கள் தனியாகவோ குழுவாகவோ ஆசிரியரால் (B.Sc(cey),MSc (Cey)) கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 698 5971

(21912)(5-6-7)

லண்டன் / கனடா / அமெரிக்கா / சுவிஸ் / ஜெர்மன் / பிரான்ஸ் / இத்தாலி / டென்மார்க் / அவுஸ்திரேலியா / நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு

**Central Bank Approved**

அரச வங்கியில் 12, 6, 3 மாதங்களுக்கான முன் பின் பணவைப்பு வங்கியில் பணவைப்பு

விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான சகல உதவிகளும் எம்பசி வேலைகள் செய்து தரப்படும்.

# 077 863 4449

FLEX Graphic

# UNION SPEED LINE

395, Galle Road, Kollupitiya, Colombo-3
நேரத்தை முன்கூட்டியே பதிவு செய்துவிட்டு வரவும்.

## Yogi's

Academy of Beauty Culture, Hair Dressing & Home Science



### EXHIBITION Cake and Sugar Craft

கேக் கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் (Seminar) 26-08-2012 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது. என்னிடம் கேக்Icing பயிற்சியை முடித்த மாணவிகள் அனைவரும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இதில் கலந்து கொள்ளும் மாணவிகள் அனைவரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

Phone
021 2222796, 0777 164923.

ஆசிரியை
Mrs. Yogini Shanmuganathan

(C/2512) (6,7,10)

## மரண அறிவித்தல்



### சரவணமுத்து சுப்பிரமணியம் (கெமிக்கல் மணியம்)

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் - பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்.)

விடத்தற்பளை மிருசுவிலைச் சேர்ந்த சரவணமுத்து சுப்பிரமணியம் கடந்த (17.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சரவணமுத்து - சின்னத்தங்கம் தம்பதியரின் அருமை மகனும், காலஞ் சென்றவர்களான நமசிவாயம் செல்லையா - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கணேசதாஸ் (சுவிற்சர்லாந்து), முருகதாஸ் (கனடா), சுபாங்கினி, சுமதி (இத்தாலி) ஆகியோரின் அன்புத்தந்தையும், சாந்தகுமாரி (சுவிற்சர்லாந்து), அருட்சோதி (கனடா), காலஞ்சென்ற பிரபாசங்கர் (குஞ்சு பபி), சிறீதரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும் கீர்த்தனா, ருசானி, பிருந்தாபன், கபிநயன், டிதூசன், மிதுஷா, புருஷோத்தமன், வைஷ்தமன் ஆகியோரின் அன்புப் பேரனும் நமசிவாயம், அமரர் சிவக்கொழுந்து, அமரர் தெல்லியூர் நடராசா, சிவபாக்கியம், அமரர் சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலை விடத்தற்பளையில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் சம்பாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விடத்தற்பளை,மிருசுவில்.

(21931) (45.6.7)

தகவல்:
கணேசதாஸ் (மகன்)



இலங்கை வங்கியின் 73 ஆவது பிறந்த தினத்தை இலங்கை வங்கி கோப்பாய் கிளையில் முகாமையாளர், ஊழியர்கள், வாடிக்கையாளர்களுடன் கொண்டாடினர்.

# மொபிரெல் நிறுவனம் வழங்கும் சிறந்த இணையத்தள வசதிகள்

மொபிரெல் அண்மையில் அறிமுகப்படுத்திய விசேட இணையத்தள பக்கேஜினை ரீலோட் அட்டைகள் மற்றும் குறுந்தகவல் மூலம் செயற்படுத்திக் கொள்ளவும் மீள்நிரப்பிக்கொள்ளவும் முடியும்.

தமது வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த சேவையினை வழங்கவேண்டும் என்ற நோக்கத்தினை கொண்ட மொபிரெல், தேசத்தில் தகவல் தொழில்நுட்பத்துறையில் அறிவுபூர்வமான சமூகம் ஒன்றை உருவாக்க முன்நின்று செயலாற்றுகிறது.

இத்திட்டத்தை 3 நாள்கள், 7 நாள்கள், 21 நாள்கள் மற்றும் 30 நாட்ள்கள் என்ற விசேட கட்டணங்களில் கொள்வனவு செய்து கொள்ளலாம்.

100 மெகாபைட் தரவுகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய 3 நாள்களுக்கான இணையச் சேவையின் விலை 24 ரூபாவாகும்.

மொபிரெல் தொலைபேசிகளிடையே 10 குறுந்தகவல்களும் இலவசமாக வழங்கப்படுவது இதன் விசேட அம்சமாகும். 200 மெகாபைட் தரவுகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய 7 நாள்களுக்கான இணையச் சேவையின் விலை 39 ரூபாவாகும்.

மொபிரெல் தொலைபேசிகளிடையே 30 குறுந்தகவல்களும் இலவசமாக வழங்கப்படும். 450 மெகாபைட் தரவுகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய 21 நாள்களுக்கான இணையச் சேவையின் விலை 89 ரூபாவாகும். மொபிரெல் தொலைபேசிகளிடையே 75 குறுந்தகவல்களும் இலவசமாக வழங்க்ப்படும்.

மேலும், 1024 மெகாபைற் தரவுகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய 30 நாள்களுக்கான இணையச் சேவையை ரூபா 279 வுக்குக் கொள்வனவு செய்வதன் மூலம், மொபிரெல் தொலைபேசிகளிடையே 90 நிமிட அழைப்பு வசதிகளையும், 200 குறுந்தகவல்களையும் வாடிக்கையாளர்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

## நொக்கியா ஆஷா—305 அறிமுகம்

இரண்டு சிம் இயக்கத்துடன் கூடிய நொக்கியா ஆஷா 305 மொடல் கையடக்கத் தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 240 x 400 பிக்ஸெல் திறனுடன் கூடிய டிஸ்பிளே தரும் 3 அங்குல திரை, டச்ஸ்கிரீனாக உள்ளது.

4 எக்ஸ் டிஜிட்டல் ஸூம் திறன் கொண்ட 2 எம்.பி. கேமரா, நொக்கியா ஆஷா எஸ் 40 ஆப்பரேட்டிங் சிஸ்டம், எளிதாக இரண்டு சிம்களை மாற்றி இயக்கும் வசதி ஆகியவை இதில் உள்ளன.



## களனி அன்ரெனா வயர் அறிமுகம்

இலங்கையின் முன்னணி வயர் விநியோக வர்த்தக நிறுவனமான களனி கேபிள்ஸ் நிறுவனம். ஜப்பானிய தரத்துக்கு அமைவாக (JIS) களனி பாதுகாப்பான அன்ரெனா வயர் வகையை அறிமுகம் செய்துள்ளது.

இந்நாட்டின் அன்ரெனா பாவனையில் நிரந்தர பிரச்சினையாகக் காணப்படும் தொலைக்காட்சியில் தோன்றும் தெளிவற்ற காட்சிக்குச் சிறந்த தீர்வாகவும், சந்தையில் காணப்படும் தரம் குறைந்த அன்ரெனா வயர்களுக்கு நுகர்வோர்கள் ஏமாறுவதைத் தவிர்க்கும் வகையிலும் இந்த வயர் வகைகள் அமைத்துள்ளன.

இந்த வயர் வகையைச் சுற்றிக் காணப்படும் தூய்மையான செப்புக் கம்பி வலை மூலம்வெளிப்பகுதியிலிருந்து வரும் அலைவரிசைகளிலிருந்து பாதிப்பு ஏற்படாதவண்ணம் பாதுகாத்து தொலைக்காட்சி அலைவரிசைக்கு 95 சதவீதத்துக்கும் அதிகமான தெளிவான விம்பத்தை வழங்குகிறது.


இந்த அன்ரெனா வயரின் மேற்பரப்பானது, புற ஊதா கதிர்களிலிருந்து பாதுகாப்பை வழங்கும் வகையில் அமைந்துள்ளது.

தொலைக்காட்சி திரையில் புள்ளிகள் தோன்றுவது, குறுக்காக கோடுகள் காணப்படுவது, வீடுகளுக்கு அண்மையில் வாகனங்கள் செல்லும் போது காட்சிகள் தெளிவற்றதாகக் காணப்படுவது போன்றவை விறுவிறுப்பான தொலைக்காட்சி இரசனையை பாதிக்கும் பொதுவான விடயங்களாகும்.

ஆயினும், இதுபோன்ற வேளைகளில் அநேகமானோர் அதிகளவு பணத்தை விரயம் செய்து புதிய அன்ரெனா ஒன்றை பொருத்திக் கொள்கின்றனர். அன்ரெனாவில் காணப்படும் குறைபாடுகள் தெளிவற்ற காட்சிகளில் செல்வாக்கு செலுத்துகின்ற காரணத்தினால் முறையான தரத்தில் அமைந்த களனி அன்ரெனா வயர் இல்லாதவிடத்து தொலைக் காட்சிக்கு அலைவரிசையைக் கொண்டு வருவதில் சிக்கல் நிலை ஏற்படுகிறது என்பதைப் பலர் அறிந்திருப்பதில்லை.




இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டு நிறைவு விழா சுன்னாகம் கிளையில் நடைபெற்றது. நிகழ்வில் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என்.மாணிக்க சிங்கி உரை நிகழ்த்துகிறார்.



இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டு நிறைவு விழா மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையில் இடம்பெற்றது. நிகழ்வில் வங்கி முகாமையாளர் கி.சகாதேவன் வாடிக்கையாளர் ஒருவருக்கு பரிசில்களை வழங்குகிறார். (ம-100)

# உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கும் பொன்டேரா

இலங்கையின் முதற்தர யோக்கற் உற்பத்தியாகத் திகழும் அங்கர் நியூடேலின் உயர் தரத்துடனான சுவை மற்றும் புத்துணர்ச்சி அளிக்கும் பால் போஷாக்கினை தினந்தோறும் ஆயிரக்கணக்கான இலங்கையர்கள் சுவைத்து மகிழ்ந்து வருகின்றனர்.

தனது உற்பத்தித் தொழிற்பாடுகளுக்கு உள்நாட்டிலிருந்து பாலைப் பெற்றுவருகின்றமை தொடர்பில் பொன்டேரா பிராண்ட்ஸ் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான அச்யுத் காசிரெட்டி அவர்கள் குறிப்பிடுகையில், ''கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக நடைமுறையில் இருந்து வருகின்ற ஒரு முன்னெடுப்பான பொன்டேரா நிறுவனத்தின் பண்ணையாளர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படுகின்ற பாலே அங்கர் நியூடேல் உற்பத்தி நடைமுறைகளுக்குப் பயன்டுத்தப்பட்டு வருகின்றது.''

''உள்நாட்டு பண்ணையாளர்கள் நாட்டில் அதிசிறந்த தரத்திலான பாலை உற்பத்தி செய்வதற்கு உதவும் முகமாக இந் நிகழ்ச்சித்திட்டத்தில் அவர்களுக்கு உதவி, தேவையான ஆலோசனைகளை வழங்கி, பயிற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு அதன் மூலமாக அங்கர் நியூடேல் உற்பத்திகளுக்கு மிகச் சிறந்த தூய பால் உபயோகிக்கப்படுவது எம்மால் உறுதிசெய்யப்படுகின்றது.''

''எமது வர்த்தக நாமங்களைப் பொறுத்தவரையில் தரம் என்ற அம்சத்தில் எவ்விதமான விட்டுக் கொடுப்புகளும் கிடையாது. அங்கர் நியூடேல் உற்பத்தி வரிசைகள் மிகச் சிறந்த புத்தம்புதிய பாற் போஷாக்கை வழங்குவதை உறுதிசெய்கின்றோம்'' என்றார்.

''அங்கர் நியூடேல் உற்பத்தி நடைமுறையானது உள்நாட்டிலுள்ள பாற்பண்ணைகளில் பாலைச் சேகரிக்கும் தொழிற்பாடுகளிலிருந்து ஆரம்பித்து, இந்த வர்த்தக நாமத்தின் தாய்நிறுவனமான பொன்டேரா நிறுவனத்தை எட்டும் வரை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன், பொன்டேரா நிறுவனம் மிகச் சிறந்த தரத்திலான பாலை உற்பத்தி செய்வதை உறுதிப்படுத்தும் முகமாக அது பண்ணையாளர்களுடன் மிகவும் நெருக்கமாக இணைந்து அவர்களது பங்காளராகச் செயற்பட்டு வருகின்றது.

சிறந்த தொழிற்பாட்டு நடைமுறைகள் தொடர்பான பயிற்சிகள், பாற்பண்ணைகளின் கொட்டகைகளை நிர்மாணிப்பதற்கு உதவுதல், செயற்கை முறை சினைப்படுத்தல் வசதிகள், உணவுகள் மற்றும் தீவனங்களை பண்ணையாளர் இலகுவில் பெற்றுக்கொள்ள உதவுதல் போன்றவற்றின் மூலம் அங்கர் நியூடேல் தூய பாலில் இருந்து உற்பத்தி செய்யப்படுவதை பொன்டேரா பண்ணையாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் உறுதிசெய்கின்றது.

புத்தம்புதிய தூய பாலைப் பெறுவதற்கான 'Milky-Way' எனும் தொழிற்பாடு பாற்பண்ணையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பொன்டேரா நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலைக் குளிரூட்டிப் பதப்படுத்தும் ஒன்பது நிலையங்களுள் ஒன்றை எட்டி, அந்தந்தப் பிரதேசத்திலுள்ள பாற்பண்ணையாளர்கள் தாங்கள் சேகரித்த பாலை குறுகிய நேரத்திற்குள் சேகரிப்பு நிலையத்திற்குக் கொண்டுசென்று விநியோகிக்க வழியேற்படுத்துகிறது.

இந்தச் சமயத்தில் அவர்கள் கொண்டு வருகின்ற பால் அங்கர் நியூடேல் உற்பத்திகளைத் தயாரிப்பதற்கு ஏற்ற உயர் தரத்தைக் கொண்டுள்ளதா என்பதை உறுதி செய்யும் முகமாக குளிரூட்டிப் பதப்படுத்தும் நிலையத்தில் உள்ள ஊழியர்களால் சோதனை செய்யப்படுகின்றது. இச்சோதனையின் போது எவ்வித குறைபாடுகளுமின்றிய பால் மட்டுமே சேரிக்கப்பட்டு உற்பத்தி நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

உற்பத்தி நிலையத்திற்கு பால் கொண்டு செல்லப்பட்ட பின்னர் அந்தப் பால் உற்பத்தித் தரத்திற்கு உரியதா என்பதை உறுதிசெய்வதற்கு அது மீண்டும் சோதனை நடைமுறைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றது.

பியகமவில் அமைந்துள்ள பொன்டேரா நிறுவனத்தின் உற்பத்தித் தொழிற்சாலை மிக நவீன தொழிற்நுட்பத்தை உபயோகிப்பதுடன் இந்தச் தொழிற்சாலையானது இலங்கையைப் பொறுத்தவரையில் யோக்கற் உற்பத்தி நடைமுறையில் அதிநவீன வசதிகளைக் கொண்டுள்ள தொழிற்சாலையாகவும் திகழ்ந்துவருகின்றது. (ம)



வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வவுனியா சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை மாணவர்கள், அதிபர், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களுடன். (ங-400)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஓக.19

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டத்தில் பங்குபெற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

இரவு 7 மணி

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக 'ஏ' அணி

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம், 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரை நடத்தி வருகிறது. இன்று ஞாயிற்றுக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி

* * *

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரனையுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு.

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரண்டாவது ஆட்டத்தில் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

* * *

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப்பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் ஈகிள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

# பரபரப்பான கரப்பந்தாட்டம்; அச்சுவேலி ஸ்ரார் வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.19

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுயாழ்.மாவட்ட ரீதியிலான மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புத்தூர் வளர்மதி சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் அணி பலத்த போராட்டத்தின் மத்தியில் வென்றது.

இந்தப் போட்டியில் ஆவரங்கால்மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிமோதிக்கொண்டது.

மூன்று செற்களைக்கொண்ட ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார்விளையாட்டுக் கழக அணி முதலாவது சுற்றினை 25:18 என்ற புள்ளி அடிப்படையில் தனதாக்கிக் கொண்டது. வீறுகொண்ட ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி தனது அதிரடியான ஆட்டத்தின் மூலம் இரண்டாவது சுற்றினை 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.

இரண்டு அணியினரும் ஒவ்வொரு சுற்றுக்களை வெற்றிகொண்டதினால் மூன்றாவது சுற்றில் எந்த அணி வெற்றி பெறப்போகிறது என்ற எதிர்பார்ப்பு பார்வையாளர்களிடம் உண்டானது. மூன்றாவது செற்றில் இரு அணியினரும் தமது அதிரடியான ஆட்டத்தின் மூலம் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர். இறுதியில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 25:21 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி 25:23,25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ங-23)

## வென்றது ஸ்ரீ கோணேஸ்வரா



யாழ்ப்பாணம் ,ஓக.19

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்ட 50பந்துப் பரிமாற்றங்களை கொண்ட போட்டிகளை லீக் முறையிலான போட்டியில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணி 2 இலக்குகளால் வெற்றி பெற்றது.

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணிக்கும் கந்தளாய் அக்ரபோதி தேசிய பாடசாலை அணிக்கும் இடையில் 17 வயதுப்பிரிவினருக்கான போட்டி ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அக்ரபோதி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடினர். 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு விளையாடிய ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணி 47.3பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்று 2 இலக்குகளால் வெற்றி பெற்றது. (23)

# நியூ பவரா ? வளர்மதியா?

## துடுப்பாட்ட இறுதியாட்டம் இன்று









யாழ்ப்பாணம்,ஓக.19

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 11 பேர் பங்குபற்றும் 16 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெற் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைதடி மத்திய வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் சாவகச்சேரி நியூபவர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ங-23)

# உதயதாரகை வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,ஓக.19

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடனும் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலை ஆதரவுடனும் கற்கோவளம் உதயதாரகைவிளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடர் ஆட்டமொன்றில், யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் நவசக்தி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

இந்த ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணி 5:2 என்ற கோல் கணக்கில் நவசக்தி அணியை வீழ்த்தியது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நக்கீரன் அணி மோதிக்கொண்டது.

இரு அணியினரும் தலா மூன்று கோல்களைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் நக்கீரன் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது. [ங-23]

# விக்னேஸ்வரா, நவஜீவன் அணிகள் இலகு வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.19

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி 25:18, 25:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களை கொண்ட இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழக அணி 25:23, 25:19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ங-23)

# கொலின்ஸ் வி.க. வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11பேர்பங்குபற்றும்விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் ஆட்டமொன்றில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

இரு அணிகளும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தின. எனினும் இறுதியில் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல்கணக்கில் வல்வை விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது. [ங-23]





வட மாகாண விளையாட்டு விழாவில் கடற்கரை கரப்பந்துப் போட்டி கடந்த வியாழக்கிழமை காலை முல்லைத்தீவு கடற்கரையில் இடம்பெற்றது. இதில் பெண்கள் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட வவுனியா மாவட்ட அணியினருக்கு முல்லைத்தீவு மாட்ட செயலக பிரதம கணக்காளர் கைலேஸ்வரன் வெற்றிக் கிண்ணம் வழங்குகின்றார். (ங-23)

சர்வதேச லயன்ஸ் கழகங்கள்
மாவட்டம் 306B1 – இலங்கை

**மாவட்ட ஆளுநர் லயன்.எஸ்.எஸ் தங்கராஜா MJF அவர்களை வரவேற்று கௌரவிக்கும் வைபவம்**

47 ஆண்டுகால வடமாகாண லயன்ஸ் கழகங்களின் வரலாற்றில் முதன் முறையாக யாழ் மாவட்டத்திலிருந்து இலங்கை மாவட்டம் 306B1 இன் மாவட்ட ஆளுநராக அண்மையில் தெரிவாகி தென் கொரியாவில் நடைபெற்ற 94வது லயன்ஸ் கழகங்களின் சர்வதேச மாநாட்டில் முறைப்படி பதவியேற்ற பின் முதன் முதலாக யாழ்.பிராந்தியத்திற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளும் எங்கள் மாவட்ட ஆளுநர் லயன்.எஸ்.எஸ் தங்கராஜா அவர்களையும் லயன் சீமாட்டி ஜெயசோதி அவர்களையும் வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.



காலம்:–19.08.2012 (இன்று)
நேரம் :–5.30 மாலை
இடம் :– ஞானம்ஸ் ஹொட்டேல்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

இவ் வைபவத்தில் பங்கேற்று தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளும் படி வட பிராந்திய லயன்ஸ் கழகத்தினரை அன்புடன் அழைக்கின்றோம்.

வடபிராந்திய லயன்ஸ் கழகங்கள்

(சி/2523)

**குளிர்பானப் போத்தல் மூடிகளுக்கான ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்**
(கிரௌன் மூடிகள்)



உயர்தரமான, விலை குறைந்த கிரௌன் மூடிகள்

(சி/2254)

**சன்ஷைன் பக்கேஜிங் லிமிட்டட்**
SUNSHINE
75A, கந்தவல ரோட், ரத்மலானை.
தொலைபேசி: 4 640 303/ 0777 684 949
பக்ஸ்: 4 208 208

**யோகா வகுப்புக்கள்**
(பெண்களுக்கு மட்டும்)
இந்தியாவில் பயிற்சி பெற்று
கொழும்பில் பல வருட காலமாக
சிறப்பாக யோகா வகுப்புக்கள் நடத்தி
வரும் ஆசிரியை தற்போது
யாழ்ப்பாணத்தில்.
ஆரம்பம்: (27.08.2012 – 02.09.2012)
முன்கூட்டியே அனுமதியை பெறவும்.
**தொடர்பு: 0778051568, 0773368547**
(21934)(3.14)

# மரண அறிவித்தல்கள்



*சுப்பிரமணியம் பூவுலிங்கம் (பூவன் மாமா)*

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.29, கண்ணாபுரம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பூவுலிங்கம் நேற்றுமுன்தினம் (17.08.2012) வெள்ளிக்கிழமை காலமானர்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் – லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், லீலாவதி, செங்கமலம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அபிமன்னன், அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.29, கண்ணாபுரம் கொட்டடி,
யாழ்ப்பாணம்.
(21964)(3.14)

தகவல்:
சகோதரிகள்.



*நாகமுத்து செல்லத்துரை*

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து செல்லத்துரை நேற்றுமுன்தினம் (17.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சிந்தாமணி தம்பதியரின் மகனும் நோசம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இல.54/3, இராமநாதன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/3, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(21958)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## பெண் ஆபத்தான நிலையில் கொண்டு செல்லப்பட்டார்

தென்மராட்சி,ஓக.19

மண்ணெண்ணெய் என நினைத்து பெற்றோலை அடுப்பினுள் ஊற்றிய போது திடீரென கான் வெடித்து தீப்பற்றியதில் இளம் குடும்பப் பெண் பலத்த எரிகாயங்களுக்கு இலக்கானார்.

வீடும் உடைமைகளும் முழுமையாக எரிந்து சாம்பலாகின. இவரைக் காப்பாற்றச் சென்ற கணவரும் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கிளாலியில் இடம்பெற்றது.

கடந்த ஓகஸ்ட் மாதம் திருமணமான இந்தப் பெண் தனது கணவருடன் கிளாலியில் சிறிய கொட்டில் வீட்டில் வசித்து வந்ததாகவும் அனைத்துப் பொருள்களும் இந்த வீட்டினுள் வைக்கப்பட்டிருந்ததாகவும் நேற்றுக் காலை தேநீர் தயாரிப்பதற்கு அடுப்பில் வைக்கப்பட்ட விறகு எரியாததால் மண்ணெண்ணெய்ப் போத்தலுக்கு அருகில் மோட்டார் சைக்கிளுக்கு விடுவதற்காக வைக்கப்பட்டிருந்த பெற்றோலைத் தவறுதலாக விட்டபோது அது தீப்பற்றி வெடித்ததில் பெண் எரிகாயங்களுக்கு இலக்கானதுடன் உடைமைகளுடன் வீடும் எரிந்துள்ளது.

வெளியில்சென்ற கணவன் வீடு தீப்பற்றி எரிவதை அவதானித்து ஓடிவந்து மனைவியை வெளியே எடுக்க முயற்சிகளை மேற்கொண்டபோது அவரும் எரிகாயங்களுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த யேசுராசா கேதீஸ்வரி (வயது-30) என்னும் கர்ப்பிணிப் பெண் உடல் முழுவதும் எரிகாயங்களுக்கும் அவரது கணவரான பஸ்ரியாம்பிள்ளை யேசுராசா (வயது -32) என்பவர் காலில் எரிகாயங்களுக்கும் இலக்காகினர்.

இருவரையும் வாகனம் மூலம் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து அம்புலென்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (9-4)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவமணி இராமலிங்கம்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், மீசாலை மாவடிப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமணி இராமலிங்கம் நேற்று (18.08.2012) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மாவடிப்பிள்ளையார் கோயில் முகாமையாளர் சின்னத்தம்பி இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை -இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-பதஞ்சலி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் (ஓய்வுபெற்ற முகாமையாளர்,நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்), குமாரசுவாமி (ஓய்வுபெற்ற அதிபர்-யாழ். இந்துக் கல்லூரி) மற்றும் மரகதவள்ளி(ஓய்வுபெற்ற ஆசிரியர்), மங்கையர்க்கரசி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கனகமணி,தவமணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சண்முகலிங்கம், சுந்தரலிங்கம்(ஓய்வுபெற்ற உதவி இரசாயனவியலாளர்-பரந்தன், இரசாயன கூட்டுத்தாபனம்-கனடா), யோகேஸ்வரி, இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), குமாரலிங்கம்(ஓய்வுபெற்ற முகாமையாளர்-இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.08.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது மாவடிப்பிள்ளையார் கோயிலடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவடிப்பிள்ளையார் கோயில் அருகில்,
மீசாலை கிழக்கு, மீசாலை.
(சி/2524)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னத்துரை செல்வராசா

*(இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்கள அதிகாரி இரத்மலானை, நிலாவரை, வவுனியா)*



*மீசாலையைப் பிறப்பிடமாகவும், நவக்கிரியை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்தவருமாகிய சின்னத்துரை செல்வராசா அவர்கள் 14.08.2012 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், நவக்கிரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்- அலங்காரம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், அரவிந்தன் (ஜேர்மனி), ஜெந்தன் (டென்மார்க்), காலஞ்சென்ற கஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தி (ஜேர்மனி), பிருந்தா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மாமனும், பவித்திரா, இஷானி, யானு, பசிறு ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்லம்மா, மாணிக்கம் மற்றும் கணபதிப்பிள்ளை (CTB கிளிநொச்சி) ஆகியோரின் பெறாமகனும், செல்வரத்தினம், இரத்தினபூபதி, யோகராஜா, செல்வராணி, செல்வரேணுகா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஐயாத்துரை, கனகசுந்தரம், கலாதேவி, சிவானந்தன், அருட்குமார் (இலங்கை), காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் கணேசன், தவமலர் ஆகியோரின் மைத்துனரும், வசந்தகுமாரி (இலங்கை), உதயகுமார் (இத்தாலி), சந்திரகுமார், ஜெயக்குமார் (இத்தாலி), நந்தினி (இலங்கை), நவமணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், துர்க்கா, கீர்த்திகா, சுஜிக்கா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், றஜிதன், பாமினி, றகிந்தன், கஜந்திரி, சகிலா, பிரிதிலா, பிறேமிளா, ஜெனுதன், விதுஷா, தீபிகா, அபிரா, அயூசன் ஆகியோரின் மாமனும், சிந்தனா, நிகிஷ், ஜிதுஸ், வவீன், சஜினகா, சஜீன், சஜினவி, சுஜினா, கஸ்மிகா ஆகியோரின் பேரனுமாவார்.*

*அன்னாரின் பூதவுடல் இன்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி முதல் 9.00 மணிவரை, இல. 4164,* Shepped Ave, East (Midland/Shepped) *இல் அமைந்துள்ள* Ogden Funeral Home *இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, நாளை (20.08.2012) திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் மு.ப. 10.00 மணிவரை அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 11.00 மணியளவில்* St. John's Norway Cemetery & Crematorium (Wodbine/Kingston) *இல் தகனம் செய்யப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**தொடர்புகளுக்கு:**
**மகேஸ்வரி (மனைவி-இலங்கை) : 011-94-779905809, அரவிந்தன் (மகன்) : 497720992084, ஜெயந்தன் (மகன்) : 4573621119, Cell: 4071749**
**செல்வரட்ணம் (சகோதரி) : 905-591-1442, யோகராசா (சின்னராசு - சகோதரர்) : 647242-9522, பேபி (சகோதரி-இலங்கை) : 011-94-212270589,**
**கமலா (சகோதரி) : 416-752-8393, சூட்டி (சகோதரி) : 416-439-5079.**

(18150) (6.7,10)

## சிறுவனை மோதி தப்பிச்செல்ல முயன்றவர் மாட்டினார்

தென்மராட்சி,ஒக.19

வரணி சிட்டிவேரம் கண்ணகை ஆலயத்துக்கு முன்பாக ஐந்து வயதுச் சிறுவனை மோதிவிட்டு தப்பியோடிய மோட்டார் சைக்கிளை ஆலயச் சுற்றாடலில் நின்ற பொது மக்கள் தொலைபேசி மூலம் தகவல்களை வழங்கி வரணிப் பகுதியில் வைத்துப் பிடித்தனர்.

மோட்டார் சைக்கிளையும் அதனைச் செலுத்தி வந்தவரையும் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளால் மோதுண்ட சிறுவன் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (9)

## விபத்தில் ஒருவர் காயம்

தென்மராட்சி,ஒக.19

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாடினை இழந்து வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதியதில் அதில் பயணித்தவருக்கு கை முறிந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நுணாவில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது. நாவற்குழியைச் சேர்ந்த அன்ரனி நிராஸ் (வயது-31) என்பவர் கை முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (9)


A/L இன் பின்னர்...

உங்கள் பொறியியலாளர் ஆகும் கனவை நனவாக்கும்!



City & Guilds

Graduate Diploma in Engineering

(Approved by EC^UK)

UK Engineering council னால் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் கற்கை நெறிகள்.


- Civil Engineering
- Electronics Engineering
- Quantity Surveying
- Motor Vehicle Engineering
- Electrical Engineering
- Mechanical Engineering
- Refrigeration & A/C

2011 ஆம் ஆண்டு கணிதப் பிரிவில் கல்வி கற்கும் போது City & Guilds பற்றி தெரிந்து கொண்டேன். A/L பரீட்சை எடுத்த பின்னர் Result வரும் மட்டும் காத்திருக்காமல் City & Guilds Civil Engineering Diploma கற்கைநெறிக்கு சேர்ந்து, கடந்த June மாதம் Diploma பட்டம் பெற்று இன்று இலங்கையில் புகழ் பெற்ற நிறுவனத்தில் தொழில் புரிந்து கொண்டு Advanced Diploma பாடநெறியை தொடர்கின்றேன்.

அன்று நான் எடுத்த முடிவு சரியானது என்பதை இப்போது உணர்கின்றேன் ஏனெனில் என்னுடன் உயர் கல்வி கற்ற பலர் இன்றும் தமது எதிர்காலத்தை நினைத்து காலத்தை வீணாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள். எனது எதிர்கால இலட்சியம் City & Guilds Graduate Diploma முடித்து பிரித்தானிய Engineering Council னால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பொறியியலாளராக வருவதுதான்.

விஜுஜன்
வெள்ளவத்தை.

நீங்கள் எந்த நிலையில் இருக்கின்றீர்கள்?




மேலதிக விபரங்களைப் பெறவும், பதிவுகளை மேற்கொள்ளவும்.

இன்றே அழையுங்கள்.
0771 067 394 or 0214 66 66 99

அல்லது SMS மூலம் விபரங்களைப் பெற ..
உங்கள் (Name) (Address) (Course) போன்ற விபரங்களை
Type செய்து 0777 762 283 க்கு SMS செய்யுங்கள்.

(c/2258)(3.6.14)

City & Guilds Approved Centre

SCOT

SKILLS COLLEGE OF TECHNOLOGY

Like us on Facebook

| Nugegoda Campus | Kurunegala Campus | Kandy Campus | Jaffna Campus |
|---|---|---|---|
| No. 102, Stanley Thilakarathna Mw, Nugegoda. | No. 252, Puttalama Rd, Kurunegala. | No. 511, Peradeniya Road, Kandy. | No. 207, Navalar Road, Jaffna. |
| 011 4 696 696 | 037 3 616 868 | 081 4 951 522 | 021 4 666 699 |
| scot@skillsinternational.lk | kurunegala@skillsinternational.lk | kandy@skillsinternational.lk | jaffna@skillsinternational.lk |



### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு பொற்பதி றோட்டில் வீட்டுடன் சேர்ந்த 3பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0777 254 217, 0773 266 373

(21895)(3.6.14)

### விற்பனைக்கு

84ஸ்ரீ சிவப்பு நிறCD200 மோட்டார் சைக்கிள் ,4500KM ஓடிய கறுப்பு நிற Pulsar 150 புத்தம்புதிய 2011 மொடல் WPXJ நம்பர் மோட்டார் சைக்கிள் இரண்டும் நல்ல நிலையில் விற்பணைக்குண்டு.

தொடர்பு:-0774050936

(ச2522)(3.6.14)

### கல்யாணமாலை திருமண சேவை

கல்யாண மாலை திருமணசேவையால் 19.08.2012 தொடக்கம் 1மாதகாலம் வரை இலவசமாக பதிவுகள் பதியலாம் என்பதை தெரியப்படுத்துகின்றோம். மேலும் கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவில் இயங்கிய கல்யாணமாலை 3 வருடகாலமாக வத்தளையில் மட்டுமே இயங்கி வருகிறது. Branch இல்லை. முன்பு பதிவு செய்தவர் தொடர்பு கொள்ளுங்கள். எம்மிடம் வெளிநாடு, உள்நாடு சாதகங்கள் உள்ளன.

தொடர்பு - 0729106007/ 0752572427 00447438921225
Email-nkalyanamalai@yahoo.com

(சி/2274)(3.6.14)


### மரண அறிவித்தல்

திருமதி சிவஇன்பநாயகி இரவீந்திரன் (இன்பம்)



கொக்குவில் மேற்கு, நீதிராஜா வீதியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு உடையார் வீதியை வசிப்பிடமாகவும், நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவ இன்பநாயகி இரவீந்திரன் நேற்று (18.08.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி- கண்மணி தம்பதியரின் மகளும், தம்பு- கனகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், இரவீந்திரனின் (ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர்- இலங்கை வங்கி, மானிப்பாய்) அருமை மனைவியும், நிவேதனாவின் பாசமிகு தாயும், Dr.சயந்தனின் (மருத்துவர்-நீர்கொழும்பு ஆதார வைத்திய சாலை) மாமியும், திருமதி தங்கரத்தினம் சிங்கமாப்பாணர் (கொழும்பு), பாலசுந்தரம் (கனடா), சண்முகநாதன் (ஓய்வுபெற்ற பதிவாளர், மேல் நீதிமன்றம்- யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற குலசிங்கம், சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி வாசுகி பாலச்சந்திரன்(லண்டன்) குலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (19.08.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் இறுதி அஞ்சலிக்காக கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பி.ப. 5 மணிய ளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13/2, Miraj Housing Complex,
நீர்கொழும்பு. (சி/2288)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

# உத்துர ருட்ராஷ் அணியின் சோகம் தொடர்கின்றது


சமரவீர அடித்தாடுகையில்

திலான் சமரவீரவின் அதிரடியும், சொகைல் தன்வீரின் துல்லிய பந்து வீச்சும் கைகொடுக்க கந்துரட்ட அணி இலகுவான வெற்றியை நேற்றுப் பதிவு செய்தது. உத்துர ருட்ராஷ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 32 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இலங்கையில் நடைபெற்று வருகின்ற எஸ்.எல்.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சனத் ஜெயசூர்யா தலைமையிலான கந்துரட்ட வாரியர்ஸ் அணியும், முபாரக் தலைமையிலான உத்துர ருட்ராஷ் அணியும் மோதிக் கொண்டன. ஜெயசூர்யா நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

ஜெயசூர்யா மீண்டும் கிரிக்கெட் அரங்கில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக திலான் சமரவீரவுடன் களமிறங்கினார். ஜெயசூர்யாவின் வரவினால் கந்துரட்ட அணி புது உற்சாகத்துடன் விளையாடியது. இருந்தும் ஜெயசூர்யா ஏமாற்றினார். திலான் சமரவீர ஆரம்பத்திலிருந்தே அடித்தாடி வேகமாக ஓட்டங்கள் குவித்தார். ஆனால் ஜெயசூர்யா 10 பந்துகளில் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் தொடர்ந்து வந்த குலதுங்க நிலைத்து நின்றாடினார். மறுமுனையில் சமரவீர இடைவெளியின்றி அதிரடியில் போட்டு முழங்கினார். இந்த நிலையில் அணி 14.4 பந்துப் பரிமாற்றங்களில் 120 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் திலான் சமரவீரவை இழந்தது. சமரவீர 45 பந்துகளில் ஒரு சிக்ஸர், 9 பவுண்டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அடுத்துக் களமிறங்கிய திஸ்ஸர பெரேரா 2 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். மிஷ்பா 14, குலதுங்க 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

கடைசிக் கட்டத்தில் அதிரடியில் கைகொடுத்த கௌச்சல்ய லொக்கு ஆராய்ச்சி 10 பந்துகளில் 22 ஓட்டங்கள் விளாச கந்துரட்ட அணி 20 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் மகரூப் 36 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு பிரமாண்ட இலக்கை நோக்கி களமிறங்கிய உத்துர ருட்ராஷ் அணி சொகைல் தன்வீரின் பந்து வீச்சில் முன்வரிசையை வேகமாக இழந்தது. குயீனி ஓட்டமெதனையும் பெறாமலும், உடவத்தன 2, கப்புக்கெதர 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 34 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. பிரன்டன் ரெயிலர், முபாரக் தலா 13, ரொஷான் சில்வா 19 ஓட்டங்களையும் மெதுவாகப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தனர். மகரூப் 14 பந்துகளில் 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.

டிலான் டு பிறிஸ் 13 பந்துகளில் 19 ஓட்டங்களையும், நவீட் அல் ஹசன் ஒரு பந்தில் 4 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். அப்போது அணி 16 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கீடு செய்தது.

இதன் பின்னர் ஆட்டத்தில் கந்துரட்ட அணி டக்வேர்த் லூயிஸ் முறைப்படி வென்றதாக அறிவிக்கப்பட்டது. பந்து வீச்சில் சொகைல் தன்வீர் 32 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை வீழ்த்தினார். ஆட்டநாயகனாக திலான் சமரவீர தெரிவானார். (5)

# முதலிடம் தக்க வைக்கப்படுமா?



இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் இரு அணிகளும் சமபலத்துடன் காணப்படுகின்றன. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணியினால் வெற்றியைப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதல் நாள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த தென்னாபிரிக்க அணி சகல இலக்குகளையும் இழந்து 309 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக வேர்ணன் பிலாந்தர், ஜே.பி.டுமினி இருவரும் தலா 61 ஓட்டங்களையும், ஜக்ஸ் ருடோல்ப் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்டீவன் பின் 4 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன் 3 இலக்குகளையும், கிரேம் ஸ்வான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆட்டநேர முடிவில் 5 இலக்குகளை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆரம்பத்தில் தொடர்ச்சியாக இலக்குகளை இழந்த அந்த அணி ஒரு கட்டத்தில் 4 இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்று தடுமாறிய போதிலும் 5 ஆவது இலக்குக்காக இயன் பெல், ஜோனி பெயர்ஸ்ரோ ஆகியோர் 124 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜோனி பெயர்ஸ்ரோ ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும், இயன் பெல் 58 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோர்க்கல், ஸ்ரெய்ன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், வேர்ணன் பிலாந்தர் ஒரு இலக்கையும் கைப்பற்றிக் கொண்டனர். (5)

## புதுத் தொழிலில் டோனி

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் மகேந்திர சிங் டோனி கிரிக்கெட் மட்டுமல்லாது விளம்பரங்களின் மூலமும் வருமானம் பெறுவதில் முதலிடத்தில் உள்ளார். இதனையடுத்து டோனி, தற்போது சர்வதேச அளவில் புதிய தொழிலில் களமிறங்கியுள்ளார்.

உடலில் நீண்ட நேரம் நறுமணத்தையும், புத்துணர்ச்சியையும் தரும் ஆண்களுக்கான வாசனைத் திரவியம் (சென்ட்) விற்பனையை, டுபாய் நிறுவனத்துடன் இணைந்து தொடங்குகிறார். முதலில் இந்தியா அதன் பின்பு அரபு நாடுகளிலும், உலகின் மற்ற இடங்களுக்கும் அவரது நிறுவனம் தொடங்கப்படும்.

அடுத்த மாதம் இலங்கையில் 'ரி-20' உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடக்கும் போது, டோனி நிறுவனத்தின் வாசனைத் திரவியங்கள் இந்திய சந்தைகளில் விற்பனைக்கு வந்து விடும்.

இதன் மூலம் சர்வதேச அளவில் இது போன்ற விற்பனையில் குதிக்கும் முதல் இந்திய கிரிக்கெட் வீரர் என்ற சிறப்பை டோனி பெறுகிறார். இவர் இதற்கு முன்பே உடற்பயிற்சி கூடத்தை உலகம் முழுவதும் நிறுவவும் திட்டமிட்டுள்ளார். (5)


லக்ஸ்மன்

# விடைபெற்றார் லக்ஸ்மன்

இந்திய டெஸ்ட் அணியின் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மன் சர்வதேச போட்டியிலிருந்து தனது ஓய்வினை அறிவித்துள்ளார். அதற்கான அறிவிப்பினை நேற்று மாலை விடுத்தார்.

அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அண்மைக்கால சிறப்பான துடுப்பாட்டத்தை வெளியிட்டிருக்காத வி.வி.எஸ்.லக்ஸ்மன் கடுமையான அழுத்தத்திற்குள்ளாகியிருந்தார்.

குறிப்பாக நியூசிலாந்திற்கெதிரான 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடருக்காக வி.வி.எஸ்.லக்ஸ்மன் தெரிவு செய்யப்பட்டமை குறித்து இந்திய கிரிக்கெட் விமர்சகர்கள் தங்களுடைய விருப்பமின்மையை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

இந்த நிலையில் குறித்த கருத்துக்கள் வி.வி.எஸ். லக்ஸ்மனை பாதித்துள்ளதாகவும், இளைய வீரர் ஒருவரின் வாய்ப்பை அவர் தட்டிப் பறிக்கிறார் என்ற விமர்சனத்தின் காரணமாக இளைய வீரருக்கான வாய்ப்பை மறித்து கொண்டிருக்காமல் சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வுபெற அவர் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளிவந்திருந்தன.

இந்த நிலையில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தான் சர்வதேச கிரிக்கெட் வாழ்வில் இருந்து விடைபெறுவதற்கு இதுதான் சரியான தருணம் என்று உணர்வதாகத் தெரிவித்தார்.

கடந்த நான்கு நாள்களாக தனது ஓய்வு தொடர்பில் விவாதித்து வந்ததாகவும், கடைசியாக சொந்த மண்ணான ஹைதராபாத்தில் நடைபெறும் நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்துடன் ஓய்வுபெறுவது என்ற உணர்ச்சி மிகுந்த முடிவை எடுத்ததாக லக்ஸ்மன் தெரிவித்தார். அவரது இந்த அறிவிப்பு வெளியிடப்படும் பொழுது அவரது பெற்றோர், மனைவி, இரண்டு பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் உடன் இருந்தனர்.

லக்ஸ்மன் இதுவரை இந்திய அணி சார்பாக 134 டெஸ்ட் போட்டியில் பங்குபற்றி 45.97 என்ற சராசரியில் 8781 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவற்றில் 17 சதங்களும், 56 அரைச்சதங்களும் உள்ளடங்குகின்றன. (5)

# வெற்றி நடைபோடும் நஹநெஹிர நாஹாஸ்


டில்ஷான்

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நஹநெஹிர நாஹாஸ் அணி 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது. பஸ்னாகிர கிரிக்கெட் டண்டி அணிக்கெதிரான ஆட்டத்திலேயே இந்த வெற்றியைப் பதிவு செய்தது.

கண்டி பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மத்தியூஸ் தலைமையிலான நஹநெஹிர நாஹாஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஸ்னாகிர கிரிக்கெட் டண்டி அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. ஒரு கட்டத்தில் 10 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றுக் காணப்பட்ட பஸ்னாகிர அணி, அணித்தலைவர் டில்ஷானின் ஆட்டமிழப்பின் பின்னர் ஓட்டங்களைப் பெறத் தவறியிருந்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் திலகரட்ண டில்ஷான் 35 ஓட்டங்களையும், கமரன் போர்கஸ் 32 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நஹநெஹிர நாஹாஸ் அணி சார்பாக ஷமின்ட எரங்க 3 இலக்குகளையும், அஜந்த மென்டிஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

147 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய நஹநெஹிர நாஹாஸ் அணி 19 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அந்த அணி ஒரு கட்டத்தில் 2 இலக்குகளை இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றிருந்ததோடு, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இம்ரான் நஷீர் காயம் காரணமாக துடுப்பெடுத்தாடுவதிலிருந்து ஓய்வு பெற்றிருந்த நிலையில் அழுத்தத்திற்குள்ளாகியிருந்த போதிலும் அணித்தலைவர் அன்ஜலோ மத்தியூஸும், இலக்குக் காப்பாளர் முஷ்பிக்கூர் ரஹீமும் சிறப்பாக ஆடி அணிக்கு வெற்றியைப் பெற்றுகொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் நஹநெஹிர நாஹாஸ் அணி சார்பாக முஷ்பிக்கூர் ரஹீம் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும், அன்ஜலோ மத்தியூஸ் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பஸ்னாகிர கிரிக்கெட் டண்டி அணி சார்பாக டார்க் நன்னீஸ் 3 இலக்குகளையும், ரங்கன ஹேரத் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக நஹநெஹிர நாஹாஸ் அணியின் ஷமின்ட எரங்க தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் நஹநெஹிர நாஹாஸ் அணி தான் விளையாடிய மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. (5)

# நோன்புப் பெருநாளில் ரமழானின் போதனைப்படி நடப்போம்

புண்ணியம் பொழிந்த மாதம் எம்மை விட்டு பிரிந்து விட்டது. கண்ணிய மிகு மாதம் எம்மை விட்டு அகன்று விட்டது.

ஆம்! இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான புனித நோன்பை ஒரு மாத காலம் நோற்று விட்டு ஷவ்வால் மாத தலைப்பிறையைக் கண்டு இன்று நாங்கள் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகிறோம்.

முஸ்லிம்களின் முதல் பெருநாளும் முக்கிய பெருநாளுமாகிய 'ஈதுல் பித்ர்' நோன்புப் பெருநாள் சமத்துவத்தை, சகோதரத்துவத்தை, சாந்தியை, சமாதானத்தை ஏற்படுத்தும் உன்னத நாளாக விளங்குகிறது.

இன்றைய பெருநாள் தினத்தில் முஸ்லிம்கள் அனைவரும் அதிகாலையில் எழுந்திருந்து, குளித்து புத்தாடையணிந்து, நறுமணம் பூசி, இன்சுவை உணவுகள் உண்டு பின்னர் பள்ளிவாசல்களிலே ஒன்று கூடி தக்பீர் முழக்கம் செய்து இறைவனைப் புகழ்ந்து நன்றி செலுத்தி மகிழ்வர்.

பள்ளிவாசல்களிலே தமது சகோதரர்களுடன் தோளோடு தோள் சேர்த்து நின்று பெருநாள் தொழுகை தொழுது, பின்னர் ஒருவரோடு ஒருவர் கட்டித் தழுவி தமது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்வர்.

அதே போல், தமது உறவினர், நண்பர்கள், அயலவர்கள் இல்லம் சென்று இவ்வாறே பெருநாள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வர்.

பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து நன்மைகள் பல புரிந்து இன்று பெருநாள் கொண்டாடும் இந்த மகிழ்ச்சியான இனிய நாளில் புனித ரமழான் கற்றுத் தந்த பாடத்தை, போதனையைப் பற்றி நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். இஸ்லாம் ஒரு வாழ்க்கை முறையாகும் அந்த வாழ்க்கை முழுவதும் முறைக்கான பயிற்சியை நோன்பு வழங்கியது.

சரியான முறையில் நோன்பு நோற்றதன் மூலமாக இனிய குணம், கற்புடைமை, பொறுமை, நேர்மை, நன்நடத்தை, சகிப்புத் தன்மை, உளத் தூய்மை, வீரம், ஏழைகளின் துயரை உணரும் தன்மை, உதவும் மனப்பான்மை, மனித நேயம் என்பன போன்ற பல்வேறு நற்பண்புகளை ஒருவர் அடைந்து கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

இந்த நற்பண்புகளை ஒரு முஸ்லிம் ஏனைய மாதங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும். அதற்கான பயிற்சியே ரமழான் மாதமாகும். இறைவன் மனிதனைப் படைத்ததன் நோக்கம் அவனுக்கு முற்றாகக் கீழ்ப்படிவதுதான். இறை விருப்பத்தையும் அவனது நெருக்கத்தையும் அடைவதில் ஒருவன் வெற்றி பெற்றால் அதுதான் பெரிய வெற்றியாகும். அதுதான் பெரிய பெருநாளாகும்.

அந்த வகையில் இறையச்சம் என்ற ஆடையை அணிவதன் மூலமாக உண்மையான பெருநாளைக் கொண்டாட முடியும். நாம் மனித இனத்தை இறைவனின் பக்கம் கொண்டு போய்ச் சேர்த்தால் அதுதான் நமக்கான உண்மையான பெருநாளாக இருக்கும்.

இன்றைய பெருநாளுக்காக நாம் அணிந்துள்ள புத்தாடைகள் ஒருநாள் பழையதாகிவிடும். ஆனால் அந்த நிரந்தரமான பெருநாளுக்கான ஆடைகள் பழையதாய்ப் போய்விடுவதில்லை. அது நிரந்தரமான பெருநாளாகும். நாங்கள் அந்த நிரந்தரமான பெருநாளுக்குத் தயாராக வேண்டும்.

தக்பீர் ஓசை இறை பள்ளிவாசல்களில் முழங்க, பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த மகிழ்ச்சிகரமான நாளில் நோன்பு கற்றுத் தந்த இனிய போதனைகளை என்றும் மனதில் இருத்தி வாழ் நாள் அதன்படி நடப்போமாக. ஈத் முபாரக்!!

## என் புகழ் எல்லாம் அல்லாவுக்கே அல்ஹம்து லில்லாஹ்

எனது அன்புமிக்க வாசக உள்ளங்களுக்கு அன்பான வாழ்த்துக்கள் வாழ்வின் வளங்கள் அனைத்தும் நிறைவாக வழங்கப்படும் போது அங்கு வரம்பு மீறல் நியதியாகி விடுகிறது அதிகார வெறி, அட்டூழியம் அநாச்சாரம் இவை அனைத்தும் பகைமையான உள்ளங்களிலேயே வாழ்கின்றன உடல் பூரிக்கும் போது உள்ளங்கள் வறண்டு விடுகின்றன. எனவே றமழான் நோன்பு உடலை வாட்டி உள்ளங்களை பூரிப்படையச் செய்கின்றது. அதிகார வெறி அன்புக்கரமாக மாறி அனைவரையும் அணைத்துக்கொள்ளத் தூண்டுகிறது.

அட்டூழியங்கள், கட்டுப்படுத்தப்பட்டு விலங்கிடப்பட்டு விடுகின்றன. அநாச்சாரங்கள் வற்றி வறண்டு தூய்மையான 'இபாதத்' துளிர் விடுகின்றது.


புனித றமழான் வழங்கிச் செல்லும் வசந்த கால உணர்வுகள் வாழ்வு முழுவதும் ரீங்காரமிட்டு சுவனத்தின் கதவுகளை திறந்து செல்கின்றது. அல்குர்ஆன் எனும் அருள் பொக்கிசம் பிரிக்கப்பட்டு விலாவாரியாக அலசப்படுகின்றது. அழுக்காறுகள் அனைத்தும் அலசிக்கழுவி வெள்ளை உள்ளங்களை விதைத்து செல்கின்ற றமழானில் எல்லா மக்களுடனும் சகோதர வாஞ்சையுடன் பழகி அன்புடன் ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்து ஈதுல்பித்ர் பெருநாளை கொண்டாடுவதில் மகிழ்ச்சியடைவோம் வாசகர்கள் அனைவருக்கும் பெருநாள் வாழ்த்து தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அல்ஹம்து லில்லாஹ் (ஈதுல்பித்ர்)

மௌலவி எம்.ஐ.மஹ்மூத் (பலாஹி)
முஹம்மதிய்யா ஜூம்ஆ
பள்ளிவாசல் - யாழ்ப்பாணம்


# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
08★04★1957



மறைவு
05★07★2012

## அமரர் தர்மலிங்கம் கனகலிங்கம்

(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி - சுன்னாகம்)

இல்லற வாழ்வு தனில்
இன்புற்று இருந்த வேளை
ஈசன் அழைத்ததனால்
இடை நடுவில் சென்று விட்டீர்
ஏங்கித் தவிக்கின்றோம்
எமது நண்பன் தயாளனுடன்
உம் ஆத்மா சாந்திபெற
எந் நாளும் இறைவனை வேண்டுகின்றோம்.

வயம்ப பல்கலைக்கழக உறவுகள்
யாழ்ப்பாணம்.

(21954)(45-6.7)



# BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

கற்பித்தல் முறை:

★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
★ தமிழ் கட்டாய பாடம்.
★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graducation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர்: 140, கோயில் வீதி. | நீர்வேலி: 1வது மைல் கல் இராச வீதி |
| கோப்பாய்: பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி | சாவகச்சேரி: சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை |
| மானிப்பாய் 1: 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி. | அச்சுவேலி: ஆதார வைத்தியசாலை அருகாமை |
| மானிப்பாய் 2: சங்கரப்பிள்ளை வீதி. (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | சங்கானை: பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி) |
| சுன்னாகம்: Lakshmi Cottage புதிய நீதிமன்றம் அருகில் K.K.S வீதி | புலோலி: ஸ்ரீ பத்மநாதன் இல்லம் மந்திகை |

## சனி, ஞாயிறு மற்றும் வார நாள்களில் ஆங்கில வகுப்புகள்

Certificate in English – இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு
Diploma in English – G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு
ESOL A1, A2 – Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு
IELTS – உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்
★ Pre Foundation
★ Foundation
★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்


British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு நிலையம்.

British Business College
Where Students Come First

BRITISH BUSINESS COLLEGE
140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Tel:021 222 5796, 077 362 7055




தீவக வலயப் பாடசாலைகள் இணைந்து நடத்திய விளையாட்டு விழா ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்றபோது விருந்தினர்கள் பாண்ட் இசையுடன் வரவேற்கப்படுகின்றனர். ஓய்வு நிலை அதிபர் ந.பரமசிவம் மங்களவிளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். (ம-250)



சித்தங்கேணி, சிவன்கோயில் தேவஸ்தானத்தில் இடம்பெற்ற சபா உமாபதிசர்மா எழுதிய 'சொல்லத் துடிக்கிற மனசு' சிறுகதை நூலின் வெளியீட்டு உரையை, எழுத்தாளர் ''சிற்பி'' சி.சிவ சரவணபவன் நிகழ்த்துகிறார். நூல் ஆசிரியர், வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்துள்ளனர். (ம-29)



சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகத்தில் வைத்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரத்ததானம் செய்தனர். பிரதேச செயலர் எஸ்.முரளீதரன் முதலாவதாக இரத்தம் வழங்கி ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து செயலக உத்தியோகத்தர்கள் பட்டதாரி பயிலுநர்கள் ஆகியோருடன் 24 பேர் இரத்தம் வழங்கியுள்ளனர். (ம-100)



மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் யாழ். பொது நூலகம் நடத்திய நடமாடும் நூலக சேவையில் பொது நூலக ஊழியர்கள் மற்றும் பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கினர். (ம-14)



சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவில் புதிய தலைவராக ஓய்வு நிலை திட்டமிடல் பணிப்பாளர் த.தேவராஜனும் செயலாளராக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரனும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-14)



மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் அண்மையில் இடம்பெற்றன. சுன்னாகம் பொது நூலகர் க.சௌந்தரராஜன் உரைநிகழ்த்துகிறார். (ம-14)



இருபாலை எக்ஸ்பிரஸ் கல்வி நிறுவனத்தின் மழலைகள் பூங்கா முன்பள்ளியின் மழலைகள் கலையமுத நிகழ்வில் மழலைகளின் காவடி ஆட்டம். (ம-17)



சங்கானை சிலம்புப்புளியடி வைரவர் ஆலயப் பகுதியில் நடைபெற்ற மானிப்பாய் பொலிஸாரின் நடமாடும் சேவையின் போது, பொலிஸ் உத்தியோகத்தர் எஸ்.ஹரிச்சந்திரா முன்பள்ளிச் சிறாருக்கு கற்றல் உபகரணம் வழங்குகிறார். (ம-29)



சாவகச்சேரி நகர சபை செயலாளர் சுப்பிரமணியம் புத்திசிகாமணி எழுதிய சுவடிகள் நூல் அறிமுக விழா பளை றோ.க.த.க.பாடசாலையில் இடம்பெற்றது. இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் மங்கள விளக்கேற்றுகிறார். (ம-41)

# நடுவருக்கு எதிராக வாக்குமூலம் பதிவு

பாகிஸ்தான் நடுவர் அசாத் ராப் மீது, பாலியல் முறைப்பாடு தெரிவித்த, இந்திய மொடல் அழகி லீனா கபூரின் வாக்குமூலத்தை பொலிஸார் பதிவு செய்தனர்.

பாகிஸ்தானை சேர்ந்தவர் அசாத் ராப் (வயது -56). கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் நடுவராக அவதாரம் எடுத்தார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.,) 'எலைட் பனல்' நடுவர் அந்தஸ்தில் உள்ளார். இவர் மீது, மும்பையை சேர்ந்த 'மொடல்' அழகி லீனா கபூர் (வயது - 21), பாலியல் முறைப்பாடு தெரிவித்தார்.

இதில், நடுவர் அசாத் ராப்புடன் ஆறு மாதம் தொடர்பு இருந்தது. என்னை இரண்டாவதாக திருமணம் செய்து கொள்ள உறுதி அளித்து, ஏமாற்றி விட்டார். தற்போது, எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறுகிறார். அவரை கணவர் போல கருதினேன். ஏமாற்றி விட்டார், என்று தெரிவித்திருந்தார்.

இதை மறுத்து அசாத் ராப் கூறுகையில், லீனா கபூருடன் சேர்ந்து வெளியான படங்கள் உண்மை தான். ஆனால், அவருடன் தவறான உறவு இல்லை. 56 வயதான நான் எப்படி திருமணம் செய்து கொள்வதாக உறுதி அளிக்க முடியும், என்றார்.

மும்பை பொலிஸ் உதவி ஆணையாளர் திகாகரிடம், லீனா கபூர் வாக்குமூலம் அளித்தார். லீனா கபூர் கூறுகையில், ஏற்கனவே பொலிஸில் எழுத்து மூலமாக முறைப்பாடு செய்திருந்தேன். அதில் என்னென்ன கூறி இருந்தேனோ, அது குறித்து விரிவாக மீண்டும் பொலிஸாரிடம் எடுத்துக் கூறினேன். இதை அவர்கள் பதிவு செய்து கொண்டனர்- என்றார். (5)


## வீட்டுப்பணிப்பெண் தேவை

| மாவட்டம் | வவுனியா | கொழும்பு |
|---|---|---|
| தங்குமிடம் | இலவசம் | இலவசம் |
| உணவு | இலவசம் | இலவசம் |
| பாதுகாப்பு | சட்டத்தரணியின் வீடு | Doctor இன்வீடு |
| ஆரம்பசம்பளம் | 8000/= | 8000/= |
| வயது | 35வயதுக் குட்பட்டவர் | 35 வயதுக் குட்பட்டவர் |
| தொடர்பு | 0777259059 | 0752401995 |

(21911)(3.6.11)

## PHYSICS

* A/L - 2013 - * A/L 2014 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விரைவில் வினாவிடை வகுப்பு ஆரம்பிக்கப்படும் Personal Class, Group Class ஆகவும் கற்கலாம்.

Mr. M. ஸ்பெல்மன் (B.Sc)
18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்
(பெரிய கோயில் அருகில்) (21835)(6.14)

## COLT KARATE

WAY TO REACH THE GOAL

ஆண், பெண் மற்றும் சிறுவர்களுக்கான கராத்தே வகுப்புக்கள் 20ம் திகதி CLTP Unit இல் ஆரம்பமாகின்றன.

*Sensei N.Tharma (2nd Dan)*
*(077 894 1416)*
*www.coltkarateyoga.com*

CLTP Unit,
204,Brown Road, Jaffna.
077 251 7223, 021 320 1999

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்பவிசா (PR பெறக்கூடிய வசதியுடன்) நியூஸிலாந்து குடும்பவிசா (பட்டதாரிகள், டிப்ளோமா தாரிகள்)

மலேசியாவிலும் இலகுவில் கல்வி கற்கலாம்.
சட்டரீதியான, விலாவாரியான ஆலோசனைகளுக்கு விரைந்து வாருங்கள்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
(PV82703)
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016

(21901)(3.6.7)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 80இல் பிறந்த 1இல் செவ்வாய் 78¼ பாவமுடைய கனடா குடியுரிமை உடைய மண மகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு - 0774829787 / 0779913966

(21830)(3.6)

## இந்திய சாஸ்திரியார் வருகை

*யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்*
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N. குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
*இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.*
*(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)*
T.P: 072 6816681, 0726816691

(20772) (15-14)

## CLTP Unit

*வீட்டில் இருந்தவாறே இணையம் மூலம் சம்பாதிக்க வேண்டுமா?*
*Follow Web Development @ CLTP*

நாம் வழங்கும் கற்கைநெறிகள்
- Web Development
  - PHP/ MySQL/ HTML/ JavaScript
- Web Designing
  - HTML/ JavaScript/photoshop
- DBMS & ADBMS (Mysql Platform)


குறுகிய காலத்தில் நிவர்த்தியான பயிற்சிநெறி

204,Brown Road,Jaffna. 0213201999, 0772517223

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 ★ 09 ★ 1948

மறைவு 09 ★ 09 ★ 2002



*அமரர் சுப்பிரமணியம் முத்துலிங்கம்*

ENGINEER, KANKESANTHURAI CEMENT CORPORATION (JAFFNA)
RAYSUT CEMENT COMPANY (OMAN)
MANAGING DIRECTOR, MSCAT ENGINEERITNG COMPANY WESTERN AUSTRALIA.

திதி: திருதியை 18.08.2012

பார்புகழ் வண்ணம் கண்டு
பசுமைப் புரட்சி செய்து
ஊரும் உலகும் போற்றிட
உத்தம வாழ்வு வாழ்ந்து
அகவை ஐம்பத்து நாலில் - நீங்கள்
ஆண்டவன் மலர்ப்பாதம் சென்று
ஆண்டுகள் பத்து ஆனதையா!
நீங்காத என்பாசம்
மாறாது என் துயரம்
உங்கள் பாதம் நான் சேரும்வரை

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி செல்வி

(21799)(3.6.7)

## தேவை

யாழ்.நகரிலுள்ள அலுவலகம் ஒன்றுக்கு (பியோன்) பெண் சிற்றூழியர் தேவை.
க.பொ.த சாதாரணதர சித்தியுடன், யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்.
கடமை நேரம் 8.30 - பி.ப 4.30 வரை.
சனி, ஞாயிறு விடுமுறை.
0778418344

(21880)(3.6.7)

## தேவை

கம்பனி ஒன்றுக்கு யாழ். நகரம், நல்லூர், பிறவுண் வீதி பகுதிகளில் வீடு ஒன்று தேவை.
0778418344

(21902)(3.6.7)

## CITY DRIVING SCHOOL

அரச அனுமதி பெற்ற சாரதி பயிற்றுனர் பாடசாலை (DS 390)



உங்களை நம்பிக்கையான சாரதியாக்குவதே எமது பொறுப்பு !

இன்றே எம்மை நாடுங்கள்...

No.05, Vaverset Place, Colombo - 06.

HOT LINE 0777 344 844

- உங்கள் நம்பிக்கையான சாரதி பயிற்சி நிலையம்
- (Instructor License) உள்ள அனுபவமிக்க பயிற்றுனர்களை கொண்டு பயிற்சியளிக்கப்படும்.
- உங்களுக்கு வசதியான நேரத்தை நீங்களே தெரிவு செய்யலாம்.
- அனைத்து வகையான வாகனங்களையும் இங்கே பயிற்சி பெறலாம்.
- ஆண் / பெண் இருபாலாருக்கும் பயிற்சியளிக்கப்படும்.



(F/2265)

Tel : 011 2505672


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.